நெசவாளர்களின் துயர் களைய மாண்புமிகு தமிழக முதல்வருக்கு தலைமை சங்கம் கோரிக்கை

கொரோனா துயர் தீர்க்கும் நிவாரணப் பணியில் செங்குந்தர்கள்

மலர்:20 இதழ்: 5
மே – 2020
Date of Publication
25th day of Every month
தனிப்பிரதி விலை : ₹ 15/–

செங்குந்த மித்திரன்

குருவும் சிஷ்யரும்

திருச்செங்கோடு அருள்மிகு செங்கோட்டு வேலர்

செங்குந்தர் உறுதிமொழி

நாம் செங்குந்த குலக்கடவுள் அருள்மிகு முருகப்பெருமான் ஆணையாக, மனசாட்சியுடன் கீழ்க்கண்டவாறு உறுதி பூணுகிறோம்.

1. நாம் இந்தியக் குடிமக்களாய் இருப்பதை, பெருமையாகக் கருதுகிறோம். நமது நாட்டின் அரசியல் அமைப்புச் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நாட்டின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவோம்.

2. நாம், செங்குந்தர் என்ற உணர்வுடன் ஒன்றுபட்டு, நமது சங்கத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு சமூக, பொருளாதார, கல்வி, தொழில், கலாச்சார முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம். சமூக நலம் காப்போம்.

3. நாம் மற்ற இனத்தவரிடம், மனித நேயம் கொண்டு, நட்புடனும், அன்புடனும் பழகுவோம்.

4. நாம், நமது உரிமைகளைப் பாதுகாக்க எப்பொழுதும் விழிப்புடன் செயல்படுவோம்.

5. நாம் நமது சங்கம் நிறுவிய சான்றோர்களை நினைவில் கொண்டு, சங்கத்தை நாளும் வளர்த்திடுவோம்.

தலைவர் மடல்

ஒன்றுகூடி போராடி வென்ற வெற்றிகள் எல்லாம், வேற்றுமையில் ஒற்றுமை கண்டதால் மட்டுமே கிட்டியது என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கும் செங்குந்த சொந்தங்களுக்கு வணக்கம்.

"அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்" என்பது சான்றோர் வாக்கு.

தற்பொழுது மனித குலத்தின் தவறான செயல்களை சுட்டிக் காட்டவும், மனிதன் தன் நிலையை உணரவும், உலகையே நகர முடியாமல் வைத்திருப்பதும், ஒவ்வொரு மாதமும் ஊரடங்கை அரசு நீட்டிக் கொண்டிருப்பதும், இறைவனின் திருவிளையாடலன்றி வேறு ஏது?

கொரோனாவை எப்படி ஒன்றிணைந்து வென்று கொண்டிருக்கிறோமோ, அதுபோல் நமது சமுதாயத்தில் உள்ள சில வைரஸ்களையும் வென்றெடுப்பதுதான் முதல் வேலை.

நான் பேசும் வார்த்தைகள்
எல்லோருக்கும் புரியும்!
ஆனால், நான் பேசாத மௌனம் என்னை
நேசிப்பவர்களுக்கு மட்டுமே புரியும்!

அன்புடன்

KPK செல்வராஜ்



ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் உற்சவர்
திருச்செங்கோடு

தொற்றுநோய்களை அகற்றும் திருச்செங்கோடு ஈசன்

பழங்காலத்தில் இருந்தே தொற்று நோய்கள், உலகை அச்சுறுத்தி வந்திருக்கின்றன.

இதனால்தான் நம் முன்னோர்கள் தங்கள் வீடுகளின் முற்றத்தில் மாட்டுச் சாண கரைசலை தெளித்தும், வீடுகளின் முகப்பில் வேப்பிலை கொத்துக்களைச் கட்டிவைத்தும் பற்பல தடுப்பு நடவடிக்கைகளை கையாண்டதுடன், அவற்றை மாரியம்மன் வழிபாடு, பத்ரகாளி வழிபாடு என்று தெய்வங்களோடு தொடர்புபடுத்தி வைத்தனர்.

அந்த வகையில் தொற்று நோய் தீர்க்கும் ஓர் ஆலயம் ஈரோடு மாநகருக்கு 18 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருச்செங்கோடு நகரில் அமைந்துள்ள பாகம்பிரியாள் உடனமர் அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவிலாகும்.

திருச்செங்கோடு திருத்தலம் முன்பு மரம், செடி, கொடிகள், மாட மாளிகைகள் நிறைந்ததாக இருந்த தால் 'திருக்கொடிமாடச்செங்குன்றூர்' என்று அழைக்கப்பட்டது. இந்த மலைக்கோவிலை 'மலைத்தம்பிரான்' என்றும் அழைக்கின்றனர்.

திருத்தலச் சிறப்புகள்

கொங்குநாட்டு பாடல் பெற்ற திருத்தலங்கள் ஏழில், மூன்றாவது திருத்தலமாக அமைந்துள்ளது. ஏறக்குறைய 2000 வருடங்களைத் தாண்டி இன்றும் செந்நிற மலை கம்பீரமாய் காட்சியளிக்கிறது. இந்த திருச்செங்கோடு திருமலை சோணகிரி, இரத்தகிரி, சேடமலை, வாயுமலை, மேருமலை எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றும் சிறப்புடன் அமையப் பெற்ற திருத்தலம். சிவனும் சக்தியும், அம்மையும் அப்பனும் இணைந்து கலந்த நிலையில், அம்மையப்பன் எனும் தோற்றத்தில் இறைவன் எழுந்தருளி உள்ளது உலகிலேயே

இத்தலத்தில் மட்டும்தான். இதுவே இத்திருக்கோயிலின் பெருஞ்சிறப்பு.

தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், திருப்புகழ், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் என பல்வேறு தெய்வீக நூல்களில் இத்திருக்கோயில் போற்றி பாடப்பட்டுள்ளது.

இத்திருக்கோயில் அர்த்த நாரீஸ்வரர், செங்கோட்டுவேலன், ஆதிகேசவ பெருமாள் என மூன்று தெய்வங்களுக்கும் தனித்தனிச் சன்னதிகள், ஒவ்வொரு தெய்வங் களுக்கும் தனித்தனி பரிவார தெய்வங்கள் என மூன்று தனித்தனி கோயில் அமைப்புடன், ஒரே திருக்கோயிலாய் அமையப் பெற்று, ஒற்றுமையின் சின்னமாய் திகழ்கிறது இத்திருத்தல அமைப்பு.

தல வரலாறு:

முருகப்பெருமான் கோபம் கொண்டு நாகாசலம் வந்ததால், பார்வதி கவலைகொண்டார். இதைக் கண்ட சிவன், பார்வதியை மகிழ்வூட்ட அவரை இயற்கை வளங்கள் நிறைந்த தாருகாவனத்திற்கு அழைத்து வந்தார்.

அங்கு பல்வேறு இயற்கை காட்சிகளைக்கண்டு மகிழ்ந்த பார்வதிக்கு, முல்லைக்கொடி ஒன்று மாதவி மரத்தை சுற்றி வளர்ந்துள் ளதை சிவன் காட்டினார். அதை கண்ட பார்வதி வெட்கப்பட்டு சிவனின் கண்களை தன் கைகளால் மூடினார்.

இதனால் அண்டசராசரங்கள் அனைத்தும் இருண்டன. பார்வதி தன் கைகளை விலக்கவே அந்த இருள் நீங்கியது. திடீரென்று ஏற்பட்ட இருளின் காரணமாக உலகின் அனைத்து வழிபாட்டு முறைகளும் மாறின. இதனால் தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

இதைகண்ட பார்வதி, சிவனிடம் “இந்தத் தவறு மீண்டும் நிகழாதிருக்க, நாம் இருவரும் தனித்தனி என்ற நிலை மாறி ஒருவர் என்ற நிலை உருவாகவேண்டும்” என்று வேண்டினார். இந்த வேண்டுகோளை ஏற்று தேவிக்கு தன் உடலில் சரிபாதி இடம் கொடுப்பதாக சிவன் ஒப்புக் கொண்டார்.

அதற்காக பார்வதியிடம் ‘இமயமலையிலும், காசியிலும், காஞ்சி நகரில் உள்ள கம்பையாற்றின் கரையிலும், திருவண்ணாமலையில் கிரிவலம் வந்து சாபவிமோசனம் பெற வேண்டும்’ என்று கூறினார். பார்வதி தேவியும் அவ்வாறே தவம் செய்தார்.

இறுதியில் திருவண்ணாமலையில் சிவன் பார்வதிக்கு காட்சி தந்து, “நீ யாருக்காக சோகமுற்று இந்தத் தொல்லைகளுக்கு ஆளானாயோ, அந்த முருகன் இப்போது கொங்கு மண்டலத்தில் உள்ள திருக்கொடி மாடச் செங்குன்றூரில் குடிகொண்டு உள்ளான். அதனால் அதுவே நாம்

தங்குவதற்கு ஏற்ற இடம்" என்று கூறி திருக்கொடிமாடச்செங்குன்றூர் சென்று தவம் செய்யுமாறு கூறினார்.

அதன்படி பார்வதியும் இங்கு வந்து தவம் செய்து சிவனுடன் இரண்டற கலந்து, அர்த்தநாரீஸ்வரராக காட்சி அளிக்கின்றனர்.

ஆதிசேஷபாம்பு கொண்டு மேரு மலையை மத்தாக்கிக் கடைந்தபோது காயம் ஏற்பட்டு சிந்திய ரத்தத்தால், மலை செந்நிறம் ஆனதால் 'திருச்செங்கோடு' எனப் பெயர் வந்ததாகவும் சொல்லப்படுகிறது.

தொற்று நோய் தீர்த்த இறைவன்

சமயக்குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர், சிவதல யாத்திரையாக பவானி வேதநாயகி சமேத சங்கமேஸ்வரர் திருக்கோவிலில் வழிபட்டுவிட்டு, தம் அடியவர்களுடன் திருச்செங்கோடு பாகம்பிரியாள் சமேத அர்த்தநாரீஸ்வரரை தரிசிக்க வந்த காலத்தில், திருச்செங்கோடு மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில், ஒருவித தொற்றுநோய் பரவி அனைவரும் குளிர் சுரத்தால் அவதியுற்றிருந்தனர். அதுசமயம் திருஞானசம்பந்தருடன் வந்திருந்த அடியவர்கள் சிலருக்கும் அந்த தொற்றுநோய்க் கிருமியால் பாதிப்பு உண்டாகி உடல் நலிந்தனர்.

சம்பந்தரை நேரில் சந்தித்த அவ்வூர் மக்கள், 'தொற்றுநோயில் இருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்' என்று வேண்டினர்.

மக்களும், அடியவரும் நலம் பெறும் பொருட்டும் ஈசனை வேண்டி 'அவ்வினைக்கு இவ்வினையாம்..' எனத் தொடங்கும் திருநீலகண்டப் பதிகம் பாடினார், திருஞான சம்பந்தர்.

என்ன ஆச்சரியம்.. மக்களையும், அடியவர்களையும் வருத்திய அந்த குளிர் தொற்றுநோய்க் கிருமி அகல, விஷ சுரமும் அகன்றது.

சம்பந்தர் தனது அடியார்களுடன் தங்கிய மடம் திருச்செங்கோடு தேரடி வீதியில் உள்ளது. இங்கு 'சுரகண்ட நாதர்' என்னும் ஜுரஹரேஸ்வரர் ஈசன் அருள்பாலிக்கிறார். தொற்று நோயால் துன்பப்படுபவர்கள் அங்கு சென்று ஈசனை வேண்டி மிளகு ரசம் சாதம் வைத்து வழிபாடு செய்து வழிபட்டு, பின்னர் மலைமேல் உள்ள அர்த்த நாரீஸ்வரர், ஆதிகேசவப் பெருமாள், செங்கோட்டுவேலவர் சன்னிதி களில் வழிபடுவதுடன், சம்பந்தரின் 'அவ்வினைக்கு இவ்வினையாம்' எனத் தொடங்கும் திருநீலகண்டப் பதிகம் பாடிட, வைரஸ் காய்ச்சலின் பாதிப்பு படிப்படியாகக் குறைந்து முற்றிலும் குணமாகி விடும் என்கிறார்கள்.

கோவில் அமைப்பு

ராசிபுரம் - திருச்செங்கோடு செல்லும் பாதையில் ஊருக்குள் செல்வதற்கு முன் பாகவே இத்திருத்தலம் அமைந்துள்ளது.

மலையின் அடிவாரத்தில் இருந்து சுமார் 3 கி.மீ. தூரத்திற்கு மலை மீது செல்ல சாலை அமைக்கப்பட்டுள்ளது. சாலைவழியாக மட்டுமல்லாது, சுமார் 1210 படிகளைக் கடந்தும் மலைக்கோயிலுக்குச் செல்லலாம்.

நாமக்கல் செல்லும் பாதையில் அமைந்துள்ள அடிவாரப் பகுதியில், படிகள் தொடங்குகின்றன. முதற்படியில் விநாயகப் பெருமானை வணங்கிவிட்டு, அருகிலேயே ஆறுமுகப் பெருமான் கோயிலுக்குச் சென்று அவரையும் வணங்கிவிட்டுப் படியேறலாம்.

மேலே செல்லும் வழியில் **செங்குந்தர் மண்டபம்,** காளத்தி சுவாமிகள் மடம், திருமுடியார் மண்டபம், தைலி மண்டபம் போன்றவை அமைந்துள்ளன. அதனை அடுத்து வீரபத்திர சுவாமி திருக்கோயில் உள்ளது. அதன் மேல்புறம் நந்தி கோயில் உள்ளது.

நந்தி கோயிலில் இருந்து சற்றே கீழிறங்கினால் நந்தி மலைக்கும், நாக மலைக்கும் இடையே ஒரு பள்ளம் அமைந்துள்ளது. அதுவே நாகர் பள்ளம் என அழைக்கப்படுகிறது.

இவ்விடத்தில் ஐந்து தலைகளுடன் ஆதிசேஷனின் முழு உருவமும் 60 அடி நீளத்தில் பார்ப்பதற்கே பிரம்மாண்டமான தோற்றத்தில் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

பாறையிலேயே செதுக்கப் பட்டுள்ள இந்த நாகருக்கு, மக்கள் குங்குமம் தூவி, தீப ஆராதனை செய்து வழிபடுகின்றனர். நாக தோஷம், காலசர்ப்ப தோஷம், களத்திர தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு வந்து வழிபாடு செய்கின்றனர்.

பின் உயரே சென்றால் சிங்க மண்டபம் உள்ளது. இதற்கு அடுத்து அமைந்துள்ளது அறுபதாம் படி என்னும் சத்தியவாக்குப் படிகள். இந்தப் படிகளில் நின்று யாரும் பொய்யாக சத்தியம் செய்யமுடியாது. இந்தப் படிகளின்மேல் நின்று செய்யப் படும் சத்தியத்திற்கு அளவற்ற மதிப்பளித்து நம்பிக்கை வைத்துள்ளனர் இப்பகுதி பக்தர்கள்.

இந்த சத்திய வாக்குப் படிகளின் இறுதி சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலின் ஆரம்பமாக உள்ளது. இந்தக் கோயிலைக் கடந்தால் அறுபதாம்படி மண்டபம், இளைப் பாற்றி மண்டபம், கோபுரவாயில் மண்டபமும் மேலும் பல மண்டபங்களும் அமைந்துள்ளன.

திருக்கோயிலின் ராஜகோபுரத்தை தரிசித்து, கோவிலுக்குள் நுழைந்தால் இடதுபுறத்தில் விநாயகப் பெருமான் வீற்றிருக்கிறார்.

இந்தக் கோவிலில் வடக்குப் பிரகாரத்திலுள்ள கிழக்கு நோக்கி உள்ள செங்கோட்டு வேலவர் சந்நிதி மிகவும் புகழ் பெற்றது.

செங்கோட்டு வேலர்

இங்கு முருகப் பெருமான் வலக்கரத்தில் சக்திவேல் தாங்கி, இடதுகரத்தால் இடுப்பில் சேவலை

அணைத்தபடி கிழக்கு நோக்கி அருள்பாலிக்கிறார். திருக்கயிலை மலையில் பழத்தினால் ஏற்பட்ட குழப்பத்தினால் கோபம் கொண்டு பழனிக்கு வந்தார், முருகப் பெருமான். அதன் பின் அங்கிருந்து இத்தலத் திற்கு வந்து செங்கோட்டு வேலவர் என்ற பெயருடன் காட்சி தருகிறார்.

இங்கு வந்தபின் அம்மையப்பனின் வேண்டுகோளுக்கு இணங்க தாரகா சுரன் மற்றும் அவனது தம்பியுமாகிய சூரபத்மன் இருவரையும் முருகன் வதம் செய்தார். தினமும் உச்சிக்காலத்தில் மட்டும் இவருக்கு அபிஷேகத் துடன் முதல் பூஜை நடக்கிறது.

அருணகிரிநாதர் தனது "திருப்புகழில்" இத்தலத்து முருகனைப் பற்றி பாடியுள்ளார்.

கலைச் சிற்பங்கள்

செங்கோட்டுவேலவர் சந்நிதிக்கு முன் உள்ள மண்டபத்துத்தூண்களில் காணப்படும் சிற்பங்கள், தமிழக சிற்பக் கலைத் திறனுக்கு ஒரு சிறந்த சான்றாகும்.

இம்மண்டபத்தில் வீரபத்திரர், மன்மதன், ரதி, காளி முதலிய ஒற்றைக் கல்லினாலான சிற்பங்கள் உள்ளன. இம்மண்டபத்தின் கூரைப் பகுதியில் கல்லினாலான கவிழ்ந்த தாமரை மலர், கிளிகள், கல்சங்கிலிகள் ஆகிய சிற்ப அதிசயங்கள் உள்ளன.

கோவிலின் வெளிப்பிரகாரத்தில் குதிரை அல்லது யாளிமீது உள்ள வீரர் களைத் தாங்கிய சுமார் 30 ஒற்றைக் கற்றூண்கள் சிற்ப வேலைப்பாடு மிக்கவை.

நாகேஸ்வரரின் கரு வறை, சிற்ப வேலைப் பாடுமிக்கது. கருவறை முன்மண்டபத்தில் குதிரை அல்லது யாளி மீதுள்ள வீரர்களின் கற்றூண் சிற்பங்கள் உள்ளன.

அர்த்தநாரீஸ்வரர்

சிவனின் இடப்பாகம் பெற அம்பாள் பூஜித்த லிங்கம், மூலஸ் தானத்திற்குள் உள்ளது. காலை, மதியம், மாலையில் நடக்கும் பூஜையின்போது மட்டும் இந்த லிங்கத்தை அர்த்த நாரீஸ்வரர் அருகில் வைத்து பூஜிப்பர். இந்த பூஜைகளை அம்பிகையே செய்வதாக ஐதீகம். உச்சிக்காலத்தில் இந்த லிங்கத்திற்கு அபிஷேகம் நடக்கும்.

ஆதிசேஷன், மஹாவிஷ்னு ஆகியோர் இங்குள்ள சிவபெரு மானை வழிபட்டுள்ளனர்.

ஆதிகேசவப் பெருமாள் என்ற பெயரில் மஹாவிஷ்ணு தனிக்கோயிலில் காட்சி தருகிறார். வைகாசி பிரம்மோற்ஸவத் தின் போது இவருக்கு தனியே கொடி யேற்றி 10ம் நாளில் திருக்கல்யாண மும், பின் தேரோட்டமும் நடக்கும். சிவராத்திரியன்று இரவில் இவருக்கு 4 கால பூஜை நடப்பது விசேஷம். ஏகாதசி நாட்களில் கருடசேவை நடைபெறுகிறது.

அர்த்தநாரீஸ்வரர் சதயம் நட்சத்திரத்திற்கு அதிபதியாக இருப்பதால், இந்நாளில் சுவாமிக்கு விசேஷ அபிஷேகம் நடக்கிறது.

இக்கோவிலின் தலமரமாக இலுப்பை மரம் வணங்கப்படுகிறது.

கிரிவலம்

திருவண்ணாமலை பவுர்ணமி கிரிவலம் போன்று திருச்செங்கோடு பவுர்ணமி கிரிவலத்திலும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கிரிவலம் வருகின்றனர். சித்ரா பவுர்ணமி முதலிய விஷேச காலங்களில் இரவு 12 மணி வரை கூட கிரிவலம் நடைபெறுகிறது.

கிரிவலம் தொடங்கும் பக்தர்கள் முதலில் மலை ஏறப் படி தொடங்கும் அடிவாரப் பகுதிக்குச் சென்று அங்குள்ள கஜமுக பிள்ளையாரை வணங்கி, ஆறுமுக சுவாமி கோவிலில் துவங்கி, பெரிய ஓங்காளியம்மன் கோவில், நாமக்கல் சாலை, மலைசுத்தி சாலை, வாலரைகேட், பரமத்திவேலூர் சாலை, சின்ன ஓங்காளியம்மன் கோவில், தெற்கு ரதவீதி வழியாக மீண்டும் ஆறுமுக சுவாமி கோவிலை வந்தடைவர். இந்த கிரிவலப் பாதை சுமார் 7 கிமீ சுற்றளவு கொண்டதாகும்.

திங்கள் ஒரு திருக்குறள்

இகல்

(பிறருடன் கொள்ளும் முரண்பாடு)

852



பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி இன்னாசெய் யாமை தலை.	முரண்பட்டு நின்று வெறுக்கும்படி ஒருவர் நடந்து கொண்டாலும், அவரோடு கொண்ட முரண்பாட்டைத் தவிர்க்கும் நோக்குடன், அவர்க்குத் துன்பம் செய்யாதிருப்பது உயர்ந்தது.

கருத்தோவியம்: சிவன்மலை பித்தன் **நடராசன்**

வாழ்க செங்குந்தர்! வெல்க செங்குந்தம்!

தொடக்கம். 1927 பதிவு எண்: 9/1938

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

58/89, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600 001.
தொலைபேசி: 044 - 48653014, 26680482

'கைத்தறிக் கதிரவன்'
K.P.K. செல்வராஜ்
தலைவர்
கைபேசி: 98430 43590

R.P. குமரகுருபரன்,
பொதுச் செயலாளர்
கைபேசி: 91766 90404

R. காந்தி,
பொருளாளர்
கைபேசி: 99943 75599

தேதி: 22–05–2020

பெறுநர்: **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள்,
தலைமைச் செயலகம், செயிண்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை – 600 009.

ஐயா,

பொருள்: நெசவாளர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க அனுமதியளித்ததற்கு நன்றி தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை: எங்களது கோரிக்கை மனு நாள் 30–03–2020

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு,

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாக பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பார்வையில் கண்டவாறு, கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்காக தமிழக அரசு பிறப்பித்த ஊரடங்கு சட்டத்தின் விளைவாக, நெசவாளர் சமுதாயத்தின் அனைவரும் வாழ்வின் முழு ஆதாரத்தையும் இழந்து, துயரப்பட்டு வரும் நிலையில் தலா ரூ. 5000/– நெசவாளர் குடும்பத்திற்கு 3 மாத காலம் வரை துயர் துடைப்பு நிதியாக வழங்கக் கோரியிருந்தோம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களது கோரிக்கையை கனிவாகப் பரிசீலித்து, முதற்கட்டமாக அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட கைத்தறி தொழிலாளர்களுக்கும், தற்போது 20–05–2020 தமிழக அரசின் செய்தி வெளியீடு எண்: 352ன்படி, தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு செய்யும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெறாத கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் நெசவாளர்களுக்கும் இதர அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ரூ. 2000/– வழங்கப்பட்டதைப் போன்றே வழங்க ஆணை வெளியிட்டதற்காக, நெசவாளர்களை பெருமையாக ஈன்றெடுத்துள்ள, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் எங்களது நன்றியைத் தங்களுக்குக் காணிக்கையாக்கிக் கொள்கிறோம்.

இனிவரும் காலங்களில் தங்கள் அரசு நெசவாளர்களை பாதுகாக்கும் அதே சமயத்தில் தமிழகம் முழுவதும் பரவியுள்ள இலட்சக்கணக்கான செங்குந்த சமுதாயத்தைச் சேர்ந்த நெசவாளர்களும், இதர வகை நெசவாளர்களும் அரசுக்கு உறுதுணையாக இருப்போம் என்று உளமார உறுதி கூறுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

தலைவர் பொதுச்செயலாளர் பொருளாளர்

வாழ்க செங்குந்தர்! வெல்க செங்குந்தம்!

தொடக்கம். 1927 பதிவு எண்: 9/1938

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

58/89, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600 001.
தொலைபேசி: 044 - 48653014, 26680482

'கைத்தறிக் கதிரவன்'
K.P.K. செல்வராஜ்
தலைவர்
கைபேசி: 98430 43590

R.P. குமரகுருபரன்,
பொதுச் செயலாளர்
கைபேசி: 91766 90404

R. காந்தி,
பொருளாளர்
கைபேசி: 99943 75599

தேதி: 22–05–2020

பெறுநர்:
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்,
தலைமைச் செயலகம்,
செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை – 600 009.

ஐயா,

பொருள்: நெசவாளர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர தமிழக முதல்வர் அவர்களிடம் வேண்டிக் கொள்ளுதல் தொடர்பாக.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு,

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாக பணிவான வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், நெசவாளர்களின் கோரிக்கையை பரிசீலித்து நிறைவேற்றித் தரும் தமிழக முதல்வர் அவர்களுக்கு எங்களது நன்றியை தெரிவித்து கீழ்க்கண்ட சில முக்கியமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

1. தமிழ்நாடு முழுவதிலுமுள்ள கைத்தறி மற்றும் பட்டு கைத்தறி சங்கத்திற்கு வரவேண்டிய Rebate (தள்ளுபடி மானியம்) கோடிக்கணக்கில் வராமல் நிலுவை உள்ளதால், ஊரடங்கு காலத்திற்கு முன்னதாகவே சங்கங்களில் நிதி தட்டுப்பாடு ஏற்பட்டு நெசவாளர்களுக்கு கொடுக்க வேண்டிய கூலி, முன்பணம், நூல் மற்றும் தறி உபகரணங்கள் வழங்க இயலாத நிலையில் வேலைவாய்ப்பை இழந்து வறுமையில் தள்ளப்பட்டுள்ளார்கள்.

   இந்த நிலை போக்கிட உடனடியாக தமிழக அரசு கூட்டுறவு சங்கங்களுக்கு விடுவிக்க வேண்டிய ரிபேட் தொகையை விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

2. 2019–20, 2020–21ம் ஆண்டு மைய கூட்டுறவு வங்கியிலிருந்து, பிரதம கைத்தறி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் சங்கத்திற்கு அனுமதிக்கப்பட்ட காசுக்கடன் (Cash Credit) மீதான 11% சதவீத வட்டி சதவீதத்தை அரசே ஏற்க வேண்டுமென கோருகிறோம்.

3. கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக தறிகள் முடக்கப்பட்டு, அரசு சார்ந்த கைத்தறி & பட்டு கைத்தறி நெசவாளர்கள் மட்டும் அல்லாமல், தனியார் வியாபாரிகளிடம் நெசவு செய்யும் ஒப்பந்த நெசவாளர்கள் மற்றும் தினக் கூலி நெசவாளர்கள் உற்பத்தி தொடங்காததால் தறி நெசவுக்கு வேண்டிய நாடா, அச்சு, பண்ணை இவையாவும் சேதம் அடைந்துவிட்டன. சொந்தமாக தறிகளை தூய்மைப்படுத்தி, நெசவு உற்பத்தியை மீண்டும் தொடங்க வேண்டியுள்ளது. அதற்கு தறி முத்திரா திட்டத்தின் கீழ் (20% மானியம் உட்பட்டது) ரூ.20,000/– வரை கடன் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

4. கைத்தறி & விசைத்தறி பணியாளர்கள் ஊரடங்கால் முடங்கியுள்ள காலத்தில் மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை அரசு தள்ளுபடி செய்து நெசவாளர்களைக் காக்க வேண்டுகிறோம்.

5. விசைத்தறி மற்றும் கைத்தறி & பட்டு உற்பத்தியாளர்களுக்கான சரக்குகளை விற்கவும், அவர்களுக்கு சந்தை வசதி ஏற்பாடு செய்து தங்கள் வியாபார நடவடிக்கைகளை அபிவிருத்திச் செய்து, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில், புதிய உத்வேகத்துடன் ஏற்றுமதி தொழிலில் ஈடுபடவும் தமிழகத்தில் குறைந்தது 5 இடங்களிலாவது கைத்தறிப் பூங்காக்களை(Textile Park) விரைந்து செயல்பாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

6. சேலம் கூட்டுறவு நூற்பாலை வளாகமும், திருநெல்வேலி பேட்டை கூட்டுறவு நூற்பாலை வளாகமும் தற்போது அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால், மேற்கண்ட இரண்டு மாவட்டங்களிலும் உடனடியாக ‘கைத்தறிப் பூங்கா’ ஏற்படுத்தி நெசவாளர்கள் வாழ்வில் ஒளியேற்றித் தருமாறு மெத்தப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

7. கைத்தறித் துறை செழிப்பாக வளர வேண்டுமானால் மூலப்பொருள்கள், நூல், சாயம் தோய்த்த நூல் ஆகியவற்றுக்கு விதிக்கப்படும் GST தொகையை முழுவதுமாக விலக்கிக் கொள்ள அரசு ஆவண செய்ய வேண்டுகிறோம்.

8. நெசவாளர் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் உள்நோயாளி சிகிச்சை மற்றும் மருத்துவ செலவுக்கு ரூ. 20,000/– வழங்கப்பட்டு வருகிறது. பெருகிவரும் கொரோனா நோய் தடுப்பு நிவாரணமாக இதனை ரூ. 30,000/– என உயர்த்தி, மருத்துவ செலவுகள் செய்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று கோருகிறோம்.

9. முதல்வரால் தற்போது வழங்கப்பட்டுள்ள கைத்தறி & பட்டு கைத்தறி நூல் நெசவாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.2,000/– வழங்குவதற்கு மின் நுகர்வு சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நெசவாளர்கள், வயது முதிர்ந்த நிலையில் உள்ளோர், கூலி தொழிலாளர்கள், ஏற்கனவே இலவச மின்சாரக் கட்டணத்தைப் பெறத் தவறியோர், இறந்துவிட்டவர்களின் வாரிசுகள் ஆகியோர் தற்போது வழங்கப்பட்டுள்ள நிவாரணத்தைப் பெற இயலாமல் உள்ளனர். ஆகவே, தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிவாரண தொகை ரூ.2000/– நெசவாளர் என்ற தகுதி அடிப்படையில் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்றும், இலவச மின்சாரம் பெற்றதற்கான மின்வாரிய சான்றிதழ் போன்ற எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் வழங்க ஆணையிட வேண்டுகிறோம்.

மேற்கண்ட நெசவாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்..

தங்கள் உண்மையுள்ள,

KPK [signature] [signature] [signature]

தலைவர் பொதுச்செயலாளர் பொருளாளர்

இன்னல் நீக்கிய

இரு இமயங்கள்!

பத்மஸ்ரீ
M.P.நாச்சிமுத்து செங்குந்தர்
நினைவு நாள்
ஜூன் 27

சிவத்திரு.
J.சுத்தானந்தன்
நினைவு நாள்
ஜூன் 25

செங்குந்தர் குலத்துதித்த சீரார் நம்மின்
சமுதாயக் காப்பாளர் செகமும் போற்ற ,
நங்கூரமா யிருந்த நல்லோன் ஞானச் செல்வன்
நெசவாளர் நேசனான சுத்தா னந்தன் ,
பங்களிப்பு செய்ததோடு பாசம் காட்டி
பகலிரவாய் பாடுபட்டு பாது காத்த
செங்கதிரின் ஒளிமிக்க சிந்தை யாலே ,
செழுந்தொண்டு ஆற்றியவர் நினைவு மாதம் ,

கல்வியினை ஊக்குவித்த கருணை வள்ளல்
கல்விக்கூ டமைத்திட்ட கல்வித் தந்தை,
நல்விதத்தில் குழந்தைகள் நன்றாய் கற்க
நாளெல்லாம் கண்துஞ்சாக் கடமை செய்தார்,
பல்வேறு சாதனைகள் படைத்த மேலோன்,
பயனுறவே நம்வாழ்க்கை உயர வைத்தார்,
தொல்லுலகில் இவர்பெற்றார் தூய உள்ளம்
தொண்டுசெய்தே தம்வாழ்வை நிறைத்தார் வாழ்க !

கைத்தறியின் காவலராய் காலம் தந்த
கண்ணியத்தின் பெருந்தலைவர் கடமை யாற்றி,
பொய்யின்றி மெய்யாக பணியு மீந்தே
புகழ்பெற்று நிலைபெற்றார் பத்ம ஸ்ரீயார்,
நைந்திருக்கும் நெசவாளர் நலத்தி லோங்க
நேரங்கா லம்பாரா(து) நினைவி லேற்றி,
வையத்தார் போற்றுமாறு வாழ்ந்து வந்த
வான்புகழின் நாச்சி முத்து வரமா னாரே !

தமிழகத்தின் தலைவர்கள் நினைவில் கொள்ளும்
தலைவராகத் திகழ்ந்தவர்தான் நாச்சி முத்து !
அமிழ்தான கைத்தறியில் ஆர்வம் கொண்டு
அதுவாழ தன்னையே அர்ப்ப ணித்தார்,
குமுதமலர் விரித்தாற்போல் குழந்தை உள்ளம்
கொண்டிருக்கும் இவர்நமக்குக் கோனு மானார்,
கமழ்கின்ற பெருங்குணத்தோன் நம்மில் ஊறும்
கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கலந்தார் வானில் !

கவிஞர். அ.முத்துசாமி, தாரமங்கலம்.

வாரியார் அமுத மொழி

- பறவைகளுக்கு இரு சிறகுகள், புகைவண்டிக்கு தண்டவாளங்கள், மனிதனுக்கு இரு கால்கள் மற்றும் இரு கண்கள் இருப்பது போல், மாணவர்களுக்கு இரு குணங்கள் நிச்சயம் இருக்கவேண்டும். ஒன்று அடக்கம், இன்னொன்று குருபக்தி. இந்த இருகுணங்களும் உள்ள மாணவன்தான் முன்னேற்றம் அடைவான்.
- பணிவு என்பது மனித வாழ்க்கையின் உயிர்நாடி. அதனால், நம் வாழ்க்கைத் தரம் உயர்ந்த நிலையை அடைகிறது.
- பிறருடைய குற்றங்களை அலசி, ஆராயக்கூடாது. நாம் செய்த குற்றங்களை மூடிமறைக்கவும் கூடாது.

திருமண பதிவுக் கட்டணம்

சென்னை தலைமைச் சங்க அலுவலகத்தில் திருமணத் தகவல் மையத்தில் 1 வருட ஜாதக பதிவுக் கட்டணம் - ரூ.500/-

செங்குந்த மித்திரன்

RNI No. TNTAM/2000/03982

செங்குந்த மித்திரன் சீரார் இதழ்வாழி
எங்குந்தன் பேர்பரப்பும் ஈடில்லாப் - பொங்குந்தன்
கூத்தர் குலம் வாழி! கோலத் தமிழ் வாழி!
ஏத்துநலம் வாழி இசைந்து

– வாரியார் சுவாமிகள்

மே 2020 மலர்: 20 இதழ்: 5

ஆசிரியர்:
K.P.K.செல்வராஜ்

சந்தா விபரம்

தனி இதழ் : ரூ. 15/–

1-04-2019 முதல் புதிய விளம்பரக் கட்டண விபரம்

கலர்

முழுப்பக்கம்	:	ரூ. 7,000
பின் அட்டை	:	ரூ.10,000
நடுப்பக்கம்	:	ரூ.18,000

கறுப்பு–வெள்ளை

அரைப்பக்கம்	:	ரூ. 2,000
முழுப்பக்கம்	:	ரூ. 3,500

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

South Indian Sengundha Mahajana Sangam

எண்.58, (பழைய எண்.89),
அரண்மனைக்காரன் தெரு,
சென்னை–600001.
அலுவலகம்:
044 – 48653014, 25241431
E-mail: sengunthamithiran@gmail.com
http://www.sengunthamithiran.in

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

கொரோனா துயர் துடைப்பு

நிவாரண நிதி

அன்புள்ள செங்குந்த சொந்தங்களுக்கு வணக்கம்.

இன்றைய சூழ்நிலையில், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தில் உள்ளடக்கிய ஐந்து மண்டலங்களில் உள்ள, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள, அன்றாட வாழ்வாதாரத்திற்கே சிரமப்படும் நம் சொந்தங்களுக்கு உதவி கரம் நீட்டி, அவர்தம் துயர் துடைக்க வேண்டியது நம் அனைவரது கடமையாகும்.

ஆகவே, நம் சமுதாயத்தில், மிகவும் கஷ்டப்பட்டு வாழ்கை நடத்தி வரும், கணவரை இழந்த குடும்பத்தினர், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற முதியோர்கள் போன்ற உண்மையிலேயே உதவி தேவைப்படும் சொந்தங்களை அடையாளம் கண்டு, நம் மண்டலங்களில் உள்ள, தொண்டுள்ளம் கொண்ட கொடையாளர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள், மண்டல தலைவர்/மண்டல செயலாளர் மற்றும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் உதவியுடன், ஆதரவு அளிக்க விரும்புகிறோம்.

இந்த உதவி நம் அனைத்து சொந்தங்களுக்கும் சென்றடையும் விதமாக, அரிசி, பருப்பு போன்ற அத்தியாவசிய பொருட்களை வழங்க உள்ளோம்.

ஆகவே நம்மவர்களின் துயர்துடைக்கும் இந்த புனித பணியில், பங்கு கொள்ள அனைத்து சொந்தங்களையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

ஊரடங்கு சட்டத்தின் கீழ் சமுதாய மக்கள் வேலை வாய்ப்பினை இழந்து, நமது உறவுகள் கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டு இருப்பதால் அவர்களுக்கு உதவும் பொருட்டு கூடுதலாக நிதி தேவைப்படுகின்ற நிலையில், நமது சங்க நிர்வாகிகள், செல்வந்தர்கள், தொழில் அதிபர்கள், கல்வியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பெரிய அளவில் நிதி வழங்கும்படி தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நிவாரண நிதி அனுப்ப வேண்டிய வங்கிக் கணக்கு விவரம் :

Name : **South Indian Senguntha Mahajana Sangam**
A/C No : **020100050304358**
Bank : **Tamilnadu Mercantile Bank**
Branch : **George Town Chennai - 600 001**
IFSC : **TMBL0000020**

இதுவரையில் நன்கொடை அளித்தவர்கள் :

கொடையாளர் விபரம்		நன்கொடை ரூ.
திரு. K.P.K. செல்வராஜ் அவர்கள், திருப்பூர். தலைவர், தெ.செ.ம.சங்கம்.	...	1,00,000
திரு. R.P.குமரகுருபரன் அவர்கள், விழுப்புரம் பொதுச்செயலாளர், தெ.செ.ம.சங்கம்.	...	10,000
திரு. R.காந்தி அவர்கள் மதுரை பொருளாளர், தெ.செ.ம.சங்கம்.	...	25,000
திரு. B.சத்தியஸ்ரீதர் அவர்கள் ஸ்ரீ குருவாயூரப்பன் பாலிமர்ஸ், மதுரை.	...	20,000
திரு. P.கோவிந்தசாமி அவர்கள் செயலாளர், கடலூர் மாவட்ட செ.ம. சங்கம்	...	10,000
திரு. A.அறிவழகன் அவர்கள் செ.உறுப்பினர், கடலூர் மா. செ.ம.சங்கம்	...	10,000
திரு. தேவி P. சத்தியமூர்த்தி அவர்கள் திருப்பூர்.	...	10,000
திரு. A.A.பாலசுப்பிரமணியன் அவர்கள் கோவை	...	10,000
திரு. K.K. ராமச்சந்திரன் அவர்கள் ஷார்ப் இண்டஸ்ட்ரீஸ், கோவை.	...	10,000
திரு. N.விவேகானந்தன் அவர்கள் L.ஆனந்த் ஜீவல்லரி, ஏரல், தூத்துக்குடி.	...	10,000
தூத்துக்குடி மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்	...	10,000
திரு. பழ.மாணிக்கவாசகம் அவர்கள் தலைவர், திருநெல்வேலி மாவட்ட செ.ம.சங்கம்	...	10,000
வேளச்சேரி திரு. M.E.ஜெயராமன் அவர்கள், சென்னை	...	10,000
திரு. P.அருணாசலம் அவர்கள் ஸ்ரீ குருசர்வா C.A. அகாடமி, திருப்பூர்.	...	5,000
செய்யாறு திரு. A. கணபதி அவர்கள், சென்னை.	...	5,000
திரு. S.நக்கீரன் அவர்கள், திருச்சி.	...	3,000
திரு. P.திருநாவுக்கரசு அவர்கள், மதுரை.	...	1,000
மொத்தம் (1-06-2020 வரை)		**2,59,000**

அபிராமபுரத்தில் உறவின் முறை தலைவர், திருநாகேஸ்வரன் அவர்கள் செங்குந்த உறவின்முறை சார்பாக சுமார் 45 நபர்களுக்கு கொரோனா நிதி அரிசி வழங்கினார்கள். உடன் கிளை உறவின்முறை நிர்வாகிகள் உடன் இருந்தார்கள்.

அழகன்குளத்தில் மாவட்ட துணை ஆட்சியாளர் குணசேகரன் செங்குந்தர் அவர்கள் சொந்த நிதியில் இருந்து நலிவுற்றவர்களுக்கு கொரோனா நிவாரணமாக அரிசி வழங்கினார். அந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் ராஜசேகரன் மற்றும் உறவின் முறை நிர்வாகிகள் உடன் இருந்தார்கள்.

14.05.2020 அன்று ஈரோடு மாவட்டம், கோபி அருகே உள்ள ஓலப்பாளையம் பகுதியில் உள்ள 134 ஏழை எளிய செங்குந்தர்களுக்கு அரிசி J.S இளைஞர் படை சார்பாகவும் கோபி JCI-ன் தலைவர் மணி அவர்களும் இணைந்து கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், கோபி கிளையைச் சார்ந்த முனைவர் காளீஸ்வரன், ஜீவா முருகேஷ், ஜி.பி கோபால், வின்டிவி ராமச்சந்திரன், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ் குமார், ஈரோடு மேற்கு கிளை செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், பெரியவலசு பாக்ஸர் கிருபா. சிவகிரி காமராஜ். பரணிதரன், ஓலப்பாளையம் பகுதியைச் சேர்ந்த காளியண்ணன், தண்டபாணி, சதாசிவம், சந்திரன், கோபாலகிருஷ்ணன், கேசவன், அசோக், மாரிமுத்து, வெங்கடாஜலம், லட்சுமணன், பாலமுருகன், கார்த்தி, ஹரிதாஸ், வெற்றிவேல், பாலமுருகன், பாபு, முருகன், ஜெயக்குமார் மற்றும் செங்குந்தர் குல மக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

புதுச்சேரி மாநிலம், சண்முகாபுரம், நெசவாளர் குடியிருப்பு பகுதிகளில் புதுவைச் செங்குந்தர் கல்வி நலச் சங்கம் சார்பில் கொரோனா தொற்று ஊரடங்கு காலத்தில் பாதிக்கப்பட்ட மிகவும் கஷ்ட நிலையிலுள்ள நலிவடைந்த 100 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி நிவாரணமாக தலைவர் V.P.இராமலிங்கம் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது. செயலாளர் ப.இராஜாக்கண்ணு, பொருளாளர் க.தனகோடி, மு.தண்டபாணி, வ.சுந்தரேசன், ப.இரத்தினவேல், சுந்தரமூர்த்தி, அப்பாதுரை, செந்தில், தங்கராசு மற்றும் செங்குந்தர் சங்க நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

செங்குந்தர் மகாஜன நாமக்கல் மாவட்ட தலைவர் பேராசிரியர் M.பாலதண்டபாணி அவர்கள் தனது இல்லத்திற்கு அருகில் அமைந்துள்ள பாரதி நகர் குடியிருப்பில் வசித்துவரும் பொருளாதாரத்தில் பின்தங்கிய 30 குடும்பங்களுக்கு சமையலுக்கு தேவையான அரிசி உட்பட 9 பொருட்களை வழங்கினார்.

வாழ்க செங்குந்தர்! வெல்க செங்குந்தம்!

தொடக்கம். 1927 பதிவு எண்: 9/1938

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

58/89, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600 001.
தொலைபேசி: 044 - 48653014, 26680482

'கைத்தறிக் கதிரவன்'
K.P.K. செல்வராஜ்
தலைவர்
கைபேசி: 98430 43590

R.P. குமரகுருபரன்,
பொதுச் செயலாளர்
கைபேசி: 91766 90404

R. காந்தி,
பொருளாளர்
கைபேசி: 99943 75599

தேதி: 20–04–2020

பெறுநர்: செய்தி ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்,
தினத்தந்தி நாளிதழ்,
86, ஈ.வி.கே. சம்பத் சாலை, வேப்பேரி,
சென்னை – 600 009.

ஐயா,

பொருள்: மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருமுகத்தை கொரோனா முகமாக சித்தரித்து உலகமெங்குமுள்ள தமிழர்களின் மனதைப் புண்படுத்தி இன்றைய 20–04–2020 நாளிதழில் கார்ட்டூன் சித்திரம் வரைந்து வெளியிட்டமைக்கு வருத்தம் தெரிவிக்கக் கோருதல் தொடர்பாக...

கொரோனா வைரஸ் உலகமே நடுங்கிக் கொண்டிருக்கும் வேளையில், கொரோனா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, தமிழ்த்திருநாட்டை மாறி மாறி ஆட்சி புரிந்த திராவிடக் கட்சிகளின் தலைவர், எங்கள் செங்குந்தர் சமுதாயத்தில் மலர்ந்திட்ட ஒப்பற்ற தலைவர், தமிழை உயிர் மூச்சாகக் கொண்டு தமிழர்களுக்காக வாழ்ந்தவர், நெசவாளர்கள் வாழ்க்கைத் தரம் மேம்பட உழைத்தவர், அரும்பாடுபட்டவர் பேரறிஞர் அண்ணா.

தமிழகம் கொண்டாடும் முன்னோடித் தலைவரை அவமதிக்கும் வகையில், அவரது தலையில் கொரோனா வைரசை சித்தரிக்கும் முகமூடியை பொருத்தியிருப்பது போன்ற படத்தை இன்றைய 20–04–2020 தேதியிட்ட தங்களது தினத்தந்தி நாளிதழில் கேலிச் சித்திரமாக வரைந்து வெளியிட்டுள்ளீர்கள். இது அடுக்குமா? உங்கள் பத்திரிக்கை தர்மத்துக்கு நியாயமாகத் தோன்றுகிறதா?

அண்ணாவின் பெயரால் ஆட்சி புரிந்த – புரிந்துவரும் இரு பெரும் திராவிடக் கட்சிகளின் பல லட்சம் தொண்டர்கள் இதுபற்றி பெருமை கொள்வார்களா?

கேலிச்சித்திரம் வரைவது பத்திரிக்கையாளர்கள் உரிமை என்றால் அதனை தமிழகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த சென்னை மாகாணத்தை 'தமிழ்நாடு' என்ற பெயர் சூட்டிய ஓர் அரசியல் மேதையின் முகத்தை சிதைத்து சித்திரம் எழுதி உள்ளீர்களே! அதற்கு யார் அனுமதி அளித்தது?

அண்ணாவை இம்மண்ணுக்குத் தந்த செங்குந்தர் சமுதாயம் வேதனையடைந்துள்ளது. உலகெங்கும் உள்ள செங்குந்தர் சமுதாயத்தினர் உணர்வுப்பூர்வமாக, போராட்டக்களத்தில் கண்டனம் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

தமிழர் தந்தை சி.ப.ஆதித்தனாரை ‘சபாநாயகராக’ அமர்த்தி அழகு பார்த்தவருக்கு நீங்கள் அளிக்கும் மரியாதை இதுதானா ? இது காலம் முழுவதும் வடுவாக இருக்கும். இதற்கு மருந்திடுவதோ, மன்னிப்பு கேட்பதோ தங்கள் பெருந்தன்மையை வெளிக்காட்டுவதாக அமையும்.

இக்கடிதம் கண்டவுடனே வருத்தம் தெரிவித்து விளம்பரமும் செய்தியும் வெளியிடுவது, கண்ணியம்மிக்க பத்திரிகையின் ஆசிரியர் என்ற வகையில் தங்களுக்கு கடமை உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

KPK ....

தலைவர் பொதுச்செயலாளர் பொருளாளர்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

தினத்தந்தி

அட, அனாவசியமா மக்கள் யாரும் வெளியே வரக்கூடாதுன்ற விழிப்புணர்வுக்காகத்தான் இதை மாட்டிவிட்டிருக்கோம் சார்! கொரோனா பிரச்சினை முடிஞ்சதும் நாங்களே அந்த ‘மாஸ்க்’கை கழட்டி விட்டுடறோம் சார்!

தினத்தந்தி கார்ட்டூன்

தினத்தந்தியின் நேற்றைய இதழில், சிலைக்கு முககவசம் அணிந்ததுபோல கார்ட்டூன் வெளியிடப்பட்டிருந்தது. எந்த தலைவரையோ, அரசியல் கட்சியையோ விமர்சிக்கும் நோக்கத்தில், இந்த கார்ட்டூன் பிரசுரிக்கப்படவில்லை. எனினும், இந்த கார்ட்டூன் யார் மனதையாவது புண்படுத்தி இருந்தால் தினத்தந்தி வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறது.

20-04-2020 அன்று வெளியான தினத்தந்தி கார்ட்டூன் படத்திற்கு நம்முடைய சங்கம் சார்பில் கண்டனக் கடிதம் அனுப்பப் பட்டது. மறுநாள் 21-04-2020 அன்று வெளியான தினத்தந்தி நாளிதழில் வருத்தம் தெரிவித்து செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

கொரோனா நிவாரண பொருளுதவி அறிவிப்பு

கொரோனா நிவாரண பொருளுதவி வேண்டும் கிளைச் சங்கங்கள் தங்களது மாவட்டத் தலைவரைத் தொடர்பு கொண்டு அவர்களின் வாயிலாக தலைமைச் சங்கத்திற்கு கடிதம் மூலம் தெரிவித்தால் தேவையான உதவிகள் பரிசீலித்து பகிர்ந்தளிக்கப்படும்.

மாவட்டத் தலைவர்கள் கவனத்திற்கு

தற்போது தமிழக அரசால் புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய மாவட்டங்களின் தலைவர்களுக்கு செங்குந்தமித்திரன் உறுப்பினர்கள் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் தலைவர்கள் தங்கள் கிளைச் சங்க நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு இப்பட்டியலில் உள்ள சந்தாதாரர் அதே முகவரியில் வசிக்கின்றர்களா? அவர்களுக்கு தவறாமல் இதழ் சென்றடைகின்றதா? என்பதையும் அவர்களின் தொடர்பு மொபைல் எண்ணையும் பெற்று, காலமானவர்கள் இருந்தால் அவர்களை பட்டியலில் இருந்து நீக்க தாங்கள் அனுமதியும் அளித்து வருகின்ற 31.08.2020க்குள் தலைமைச் சங்கத்திற்கு அனுப்பி வைக்க அன்புடன் வேண்டுகின்றோம்.

செயற்குழு உறுப்பினர்களுக்கு அன்பு வேண்டுகோள்!

தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நமது செங்குந்தமித்திரன் மாத இதழுக்கு குறைந்தபட்சம் ஒரு விளம்பரமாவது பெற்றுத் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இல்லம் தோறும் செங்குந்த மித்திரன் கொண்டு சேர்ப்போம்!

செங்குந்தர்கள் குரலாக ஒலிக்கும் செங்குந்தமித்திரன் மின் இதழை ஒவ்வொரு செங்குந்தரும் தங்களுடைய உறவினர்களுக்குப் பகிர்ந்து, சமுதாய வளர்ச்சிக்கு உதவிடவும், உறுதுணையாக இருக்கவும் வேண்டுகிறோம்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்
ஆயுள் உறுப்பினர்,
செங்குந்த மித்திரன் ஆயுள் சந்தா
தகவல் படிவம்

ஆயுள் உறுப்பினர் எண் :

செங்குந்த மித்திரன் சந்தா எண் :

புகைப்படம்

1. பெயர்
2. தந்தை / கணவர் பெயர்
3. வயது — பிறந்த தேதி
4. கல்வி — 5. இரத்த வகை
6. தொழில்
7. முகவரி — அஞ்சல் எண்
8. மாவட்டம்/மாநிலம்
10. மொபைல் எண்
11. வாக்காளர் அட்டை எண்
12. ஆதார் எண்
13. மின்னஞ்சல் முகவரி

நமது சங்கத்தின் சட்ட திட்டங்களை மதித்து நடப்பேன் எனவும், செங்குந்த சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்கு என்னால் இயன்றளவு ஒத்துழைப்பேன் எனவும் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மை எனவும் உறுதியளிக்கிறேன்.

நாள்: கையொப்பம்

அனுப்பவேண்டிய முகவரி: 58, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600001.

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து 31-08-2020-க்குள்
தலைமை சங்க முகரிவக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

விருதுநகர் மாவட்டம் கொரோனா நிவாரணப் பணி நன்கொடை

வ. எண்	உதவிய அமைப்பு / கொடையாளர்	பயன்பெற்ற பகுதி	பயன்பெற்றோர் விபரம்	நிவாரணத் தொகை. ரூ
1.	பூபால்பட்டி செங்குந்தர் பொதுப்பண்டு	இராஜபாளையம்	240 குடும்பத்தினர் தலா ரூ.4000/– நிதியுதவி	ரூ. 9,60,000
2.	செங்குந்தர் துவக்கப்பள்ளி ஆசிரியர்கள்	இராஜபாளையம்	பள்ளியில் படிக்கும் 150 மாணவர்கள் குடும்பத்தினருக்கு ரூ.400/. மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.	ரூ. 60,000
3.	வே.முத்துக்குமார்	ஸ்ரீவில்லிபுத்தூர்	50 நபர் வீதம் தொடர்ந்து 50 நாட்கள் மதிய உணவு வழங்கப்பட்டது.	ரூ. 1,25,000
4.	வே.முத்துக்குமார்	ஸ்ரீவில்லிபுத்தூர்	300 நபர்களுக்கு 5 கிலோ அரிசி வீதம் வழங்கப்பட்டது.	ரூ. 60,000
5.	சிவகாசி வட்டார செங்குந்தர் உறவின்முறை	சிவகாசி	190 குடும்பத்தினருக்கு ரூ.800/– மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.	ரூ. 1,52,000
6.	வெள்ளைக்கோட்டை செங்குந்தர் ஊர் உறவின்முறை டிரஸ்ட்	அருப்புக்கோட்டை	300 நபர்களுக்கு 5 கிலோ அரிசி + ரொக்கம் ரூ. 200 வழங்கப்பட்டது.	ரூ. 1,35,000
7.	வெள்ளைக்கோட்டை செங்குந்தர் ஊர் உறவின் முறை டிரஸ்ட் வெள்ளைக்கோட்டை செங்குந்தர் தொடக்கப்பள்ளியின் ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் நிர்வாகத்தினர்	அருப்புக்கோட்டை	செங்குந்தர் தொடக்கப்பள்ளியில் படிக்கும் மாணவ–மாணவியர் 250 குடும்பத்தினருக்கு ரூ. 300/– மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.	ரூ. 75,000
8.	வெள்ளைக்கோட்டை செங்குந்தர் ஊர் உறவின்முறை டிரஸ்ட் வெள்ளைக்கோட்டை செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி நிர்வாகத்தினர் ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் பழைய மாணவர்கள்	அருப்புக்கோட்டை	செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியரின் 180 குடும்பத்தினர்களுக்கு ரூ.300/ மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.	ரூ. 54,000

விருதுநகர் மாவட்டம் கொரோனா நிவாரணப் பணி நன்கொடை

வ. எண்	உதவிய அமைப்பு / கொடையாளர்	பயன்பெற்ற பகுதி	பயன்பெற்றோர் விபரம்	நிவாரணத் தொகை.ரூ
9.	அருப்புக்கோட்டை நாகநாதர் கோவில் செங்குந்தர் உறவின்முறை திருமிகு.P.T.ராஜன் மற்றும் உள்ளூர் வள்ளல் பெருமக்கள்.	அருப்புக்கோட்டை	180 குடும்பத்தினர்களுக்கு ரூ.320/– மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.	ரூ. 57,600
10.	திருமிகு. ம.அய்யனார் Ex.M.C., முன்னாள் மாநில செயற்குழு உறுப்பினர், திரு. அ.பழனிவேல், மாநில செயற்குழு உறுப்பினர்	அருப்புக்கோட்டை	116 குடும்பத்தினர்களுக்கு ரூ.500/– மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் மற்றும் இதர நன்கொடைகள் வழங்கப்பட்டது.	ரூ. 72,000
11.	மலையடிப்பட்டி செங்குந்த மகாஜன சங்கம்	இராஜபாளையம்	110 குடும்பத்தினர்களுக்கு ரூ.540/– மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.	ரூ. 59,400
12.	அம்மையார்பட்டி செங்குந்தர் சமுதாயம்	அம்மையார்பட்டி	39 குடும்பத்தினர்களுக்கு ரூ.1000/– நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.	ரூ. 39,000
13.	முகவூர் செட்டியார்பட்டி செங்குந்தர் மகாஜன உறவின்முறை	முகவூர்	90 குடும்பத்தினர்களுக்கு ரூ.500/– மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.	ரூ. 45,000
14.	திருமிகு.P.T.ராஜன் மற்றும் உள்ளூர் வள்ளல் பெருமக்கள்.	முகவூர், அம்மையார்பட்டி, மலையடிப்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர், கோபாலபுரம், புதுப்பட்டி	ஏழை, எளிய செங்குந்த மக்கள் 160 குடும்பத்தினர்களுக்கு ரூ.200/. மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.	ரூ. 32,000
		மொத்தம்	2355	19,26,000

அறிவிப்பு

இந்தப் பக்கத்தில் வெளிவந்துள்ள விருதுநகர் மாவட்டப் பட்டியலைப் போன்று ஒவ்வொரு மாவட்டமும் தாங்கள் செய்துள்ள கொரோனா நிவாரண உதவிகளை பட்டியலிட்டுத் தெரிவித்தால் வரும் இதழில் பிரசுரம் செய்யப்படும்.

ஜெயங்கொண்டம்

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பேருந்து நிலையம் ஆட்டோ ஓட்டுநர்கள் 15 நபர்களுக்கு கொரோனா ஊரடங்கு உத்தரவு முன்னிட்டு ரூ.400 மதிப்புள்ள நிவாரண பொருட்களை ஜெயங்கொண்டம், காவல்துறை ஆய்வாளர் தமிழரசி, அரியலூர் மாவட்ட செங்குந்தர் சங்க மாவட்ட செயலர் து.ப.புனிதம் மற்றும் Lion.R.K. சண்முகம் தினத்தந்தி ராமச்சந்திரன் ஆகியோர் வழங்கினார்கள். நிகழ்ச்சிக்கு ஆட்டோ சங்கத் தலைவர் ஆனஸ்ட்ராஜ் தலைமை தாங்கினார். பொருளாளர் சிவசங்கர். வீரமணி போன்றோர் பங்குபெற்றனர். இதற்கான நிவாரணப் பொருட்கள், கடலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத் தலைமை மாநில செயற்குழு உறுப்பினர் திரு A.அறிவழகன் அவர்கள் மூலம் வழங்கப்பட்டது.

கந்தம்பாளையம்

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் வட்டம் கந்தம்பாளையம் செங்குந்தர் குல ஸ்ரீ சப்த கன்னிமார் ஆலய அறக்கட்டளை சார்பாக 09-05-2020 அன்று ஊர் நாட்டாண்மைக்காரர் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் ஏழை நெசவாளர்களுக்கு கொரோனா நிவாரணமாக இலவச உணவுப் பொருட்கள் மற்றும் நிதி உதவி சமூக இடைவெளியைப் பின்பற்றி வழங்கப்பட்டது.



அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு உட்பட்ட செங்குந்தபுரம் செங்குந்தர்கள் நண்பர்கள்குழு சார்பாக. 144 தடை உத்தரவை முன்னிட்டு 110 நெசவாளர்களுக்கு, ரூ 310 மதிப்புள்ள அரிசி, காய்கறி பொருட்கள் வழங்கப்பட்டன. இதை, அரியலூர் மாவட்ட செங்குந்தர் சங்க மாவட்ட செயலர் து.ப.புனிதம், Ex. நகர் மன்ற உறுப்பினர், சி.சுப்ரமணியன், அரசு.போ.கழகம் T.S.ரவி, வீ.சாமிநாதன், P.C. கார்த்தி, சகோதரர் P.C.பாபு ஆகியோர் வழங்கினர்.

முன்னாள் தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினர் வேளச்சேரி திரு.M.E.ஜெயராமன் அவர்கள் 14-05-2020 அன்று தூய்மைப் பணியாளர்களுக்கும் சமுதாய மக்களுக்கும் தனது சொந்த செலவில் ரூ.35,000/- மதிப்புள்ள நிவாரண உதவிகளை வழங்கினார்.

சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் திரு. U.V.சடையப்பன் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கொரோனா வைரஸ் பாதிப்பால் வேலை வாய்ப்பு இன்றி இருக்கும் நம் செங்குந்த நெசவாளர்கள் குடும்பத்திற்கு நிவாரண உதவிகள் சேலம் மாவட்ட சங்கத்தின் சார்பிலும் சேலம் அம்மாப் பேட்டை அருள்மிகு செங்குந்தர் குமரகுரு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் மற்றும் அருள்மிகு செங்குந்தர் மாரியம்மன் திருக்கோயில் அமைந்துள்ள ஆன்மீக குழுக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து நிவாரண உதவிகள் வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

ஒரு குடும்பத்திற்கு ஐந்து கிலோ அரிசி மற்றும் மளிகை பொருள்கள் என்று சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் முதன்மை தலைவர் திரு A.லோகநாதன், பொதுச்செயலாளர் திரு. P.P.ராஜகோபால், பொருளாளர் திரு K.P.நக்கீரன், முதன்மை செயலாளர் திரு. S.சரவணன், துணை தலைவர் கள் திரு.K.P.மகாலிங்கம், தாரை அ.குமரவேல், திரு M.செந்தில்நாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சேலம் அம்மாப்பேட்டை பகுதியில் சுமார் 3200 குடும்பங்களுக்கு ரூபாய் 6,50,0000 மதிப்பில் கீழ்க்கண்டபடி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளை சங்கத்தின் தலைவர் மற்றும் நிர்வாகிகள் ஆன்மிக குழுக்களின் தலைவர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

1) சேலம் அம்மாப்பேட்டை பகுதியில் 350 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது

2) சேலம் மாவட்டம் வலசையூர் பகுதியில் சுந்தர்ராஜன் காலனி, தேவாங்க காலனி, பாலாஜி காலனி,

ஜெஜெ காலனி, சத்யா காலனி ஆகிய பகுதிகளில் 250 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

3) சேலம் அம்மாப்பேட்டை நாமமலை காலனி பகுதியில் 170 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

4) சேலம் அம்மாப்பேட்டை சத்யா நகர் காலனி பகுதியில் 80 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

5) சேலம் அம்மாப்பேட்டை கிருஷ்ணன் புதூர் பகுதியில் 250 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

6) சேலம் அம்மாப்பேட்டை ஆதிசெல்வகணபதி தெரு பகுதியில் 150 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

7) சேலம் அம்மாப்பேட்டை பண்டரிநாதர் தெரு பகுதியில் 275 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

8) சேலம் அம்மாப்பேட்டை 40 அடி ரோடு பகுதியில் 160 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

9) சேலம் அம்மாப்பேட்டை காந்தி மைதானம் அண்ணா மலை பகுதியில் 350 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

10) சேலம் அம்மாப்பேட்டை இராமநாதபுரம் பகுதியில் 170 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

11) சேலம் அம்மாப்பேட்டை புதுத் தெரு பகுதியில் 50 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

12) சேலம் அம்மாப்பேட்டை அருணாசலம் நான்கு தெரு பகுதியில் 300 குடும்பகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

13) சேலம் அம்மாப்பேட்டை தியாகி நடேசன் நான்கு தெரு பகுதியில் 300 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

14) சேலம் அம்மாப்பேட்டை காமராஜர் நகர் காலனி பகுதியில் 200 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

15) சேலம் அம்மாப்பேட்டை கந்தப்பன்தெரு வெங்கடாசலம் தெரு பகுதியில் 200 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

16) சேலம் அம்மாப்பேட்டை தூய்மை பணியாளர்களுக்கு 50 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

மேற்கண்ட பகுதிகளில் சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் மற்றும் நிர்வாகி கள் சார்பில் சிறப்பான முறையில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் செங்குந்தர் இளைஞரணி மூலம் 10-04-2020 அன்று அனைத்து மக்களுக்கும் 18 தெருக்களிலும் வீடு வீடாக சென்று கபசுர குடிநீர் வழங்கப்பட்டது. மேலும், செங்குந்த சமுதாய மக்களால் சமுதாய மக்களுக்கு 21-04-2020 அன்று 54 குடும்பங்களுக்கு ரூ. 800/- பெறுமான அரிசி மற்றும் மளிகை சாமான்கள் வீடு வீடாக சென்று வழங்கப்பட்டது. 2வது முறையாக செங்குந்தர் திருமண மண்டபத்தில் வைத்து 03-05-2020 அன்று ரூ. 500/- மதிப்புள்ள அரிசி மற்றும் மளிகை சாமான்கள் வழங்கப்பட்டது. 3-05-2020 முதல் சமுதாய சங்கத்தின் மூலம் தினம் 30 நபர்களுக்கு மதிய உணவு வீடு வீடாக சென்று வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பணி தொடர்ந்து நடைபெறும் என்றனர்.

புதுச்சேரி மாநிலம், கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த மாணிக்க செட்டியார் நகர், மீனாட்சிப்பேட்டை, இலாசுப்பேட்டை ஆகிய பகுதிகளிலும், புதுவைச் செங்குந்தர் கல்வி நலச் சங்கம் சார்பில் கொரோனா தொற்று ஊரடங்கு காலத்தில் பாதிக்கப்பட்ட மிகவும் கஷ்ட நிலையிலுள்ள நலிவடைந்த 120 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி நிவாரணமாக தலைவர் V.P.இராமலிங்கம் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது. செயலாளர் ப.இராஜாக்கண்ணு,பொருளாளர் க.தனகோடி, மு.தண்டபாணி, வ.சுந்தரேசன், ப.இரத்தினவேல் மற்றும் க.புனிதவேல், க.ஆறுமுகம், ஆர்.சண்முகம், சிவக்குமரன், செல்வராஜ், மோகன்ராஜ், திலசை இரத்தின சின்னசாமி, தேவ.வைத்தியநாதன், கதர் இரத்தின இராமச்சந்திரன், வே.அருள், மீனாட்சிபேட்டை ஆ.பாலசுப்ரமணியன், ஆதிமூலம், வெங்கடேசன் மற்றும் செங்குந்தர் சங்க நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம் ரெகுநாதபுரத்தில் நமது சமுதாய மக்களுக்கு ரெகுநாதபுரம் ஊர்தலைவர் திரு. R.ஆதிமுத்து செங்குந்தர் சார்பாக 30 குடும்பங்களுக்கு அரிசி வழங்கினார். அதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் K.குணசேகரன், சு.முத்துமாரி ஒன்றிய கவுன்சிலர் நாகநாதன், உறவின்முறை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


பொன்விழா காணும் பாரம்பரியம்
SINCE 1961
50
NATIONAL
SINCE 1961
NATIONAL
COTTON DHOTIES AND SHIRTINGS
MADE WITH 100% SUPER FINE COTTON
NATIONAL KHADI STORES
2/646 A & 2/646 B, VENUS GARDEN,
MANGALAM MAIN ROAD,
ANDIPALAYAM (PO)
TIRUPUR - 641 687
PHONE:0421 2262180, 2262380
FAX:2262124
EMAIL:khadiking@airtelmail.in

சென்னை பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தில் வழங்கிய அரிசி மூட்டை குன்றத்தூர் செங்குந்தர் பேரவை தலைவர் P. சந்திரசேகர் செயலாளர், S.பழனி, பொருளாளர் S.ஞானப்பிரகாசம் குன்றத்தூர் பேரவை சார்பாக சென்னை செங்குந்தர் பேரவை செயலாளர் T.V.சரவணன் குன்றத்தூர் செங்குந்தர் பேரவை துணைச்செயலாளர் கே.எஸ்.ராஜி ஆகிய இருவரும் சேர்ந்து குன்றத்தூர் செங்குந்தர் பேரவை அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கினார்கள்.

10.05.2020 ஈரோடு மாவட்டம், நஞ்சை ஊத்துக்குளி கிளை உள்ள 35 ஏழை எளிய செங்குந்தர்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள் J.S இளைஞர் படை மற்றும் நஞ்சை ஊத்துக்குளி கிளை இணைந்து கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி veecop tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், மாநில செயற்குழு உறுப்பினர் பெருந்துறை தோப்பு பாளையம் கிட்டு என்கிற V.கிருஷ்ணசாமி, வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார், ஈரோடு மேற்கு கிளை செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், பெரியவலசு பாக்ஸர் கிருபா, Na.S.பிரதீப் செங்குந்தர், கிளை தலைவர் செல்வராஜ், செயலாளர் ஈஸ்வரன், பொருளாளர் பாலு, துணைத்தலைவர் வினோத்குமார், துணைச்செயலாளர் பிரகாஷ், செயற்குழு உறுப்பினர் ஆறுமுகம், முன்னாள் தலைவர் மாணிக்கம், லோகநாதன், காமாட்சி அம்மன் கோவில் நிர்வாகி சிதம்பரம், அர்ஜுனன் ருத்ரமூர்த்தி, பி கண்ணன், நாட்டாமை கார்த்திகேயன், கிளை சங்க நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

கொரோனாவால் பாதிக்கப்பட்டு வேலையிழந்து உள்ள ஏழை, எளிய மக்களுக்கு சென்னைப் பெருநகர் செங்குந்த மகாசன சங்கத்தின் சார்பாக 120 மூட்டை அரிசியை 3 கிலோ வீதம் பிரிக்கப்பட்டு அதனை குன்றத்தூர் 300, அனகாப்புத்தூர் 150, பம்மல் 100, மேப்பூர் 100, மயிலாப்பூர் 50, மூன்றாங் கட்டளை 50, சைதாப் பேட்டை 275 என மொத்தமாக 1000 பேருக்கு நமது சென்னைப் பெருநகர் செங்குந்த மகாசன சங்கத்தின் சார்பில் தலைவர் திரு.D.ஆறுமுகம், சங்க பொருளாளர் திரு.S.ரமேஷ், சமுதாய பொருளாதார தொண்டு மன்றத் தலைவர் திரு.R.ராமகிருஷ்ணன் அவர்கள், சைதை உள்ளூர்க்குழுத் தலைவர் திரு.S.தங்கராஜ் அவர்கள், திருக்காரணி திரு. S.ஸ்ரீதர் அவர்கள் மற்றும் திரு.M.ராஜ்வேல் ஆகியோரும் வழங்கினார்கள்.

இதுதவிர, சென்னைப் பெருநகர் செங்குந்த மகாசன சங்கத் தலைவர் திரு.D.ஆறுமுகம், அவர்கள் தமது சொந்த செலவில் சுமார் 50 மூட்டை அரிசி, மளிகை சாமான்கள் 160 பேருக்கும் மற்றும் காய்கறிகள் அடங்கிய பை 160 பேருக்கும் வழங்கினார்.

சென்னைப் பெருநகர் செங்குந்த மாகசன சங்கம் செயலாளர் திரு. T.V.சரவணன் அவர்கள் தனிப்பட்ட முறையில் குன்றத்தூரில் உள்ள ஏழை எளிய மக்கள் சுமார் 1000 பேருக்கு அரிசி வழங்கினார்.

குன்றத்தூர் செங்குந்தர் பேரவை தலைவர் திரு.S.சந்திரசேகர் அவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்கள் 500 பேருக்கு அரிசி வழங்கினார்.

மயிலாப்பூர் செங்குந்தர் மகாசபை சார்பாக ஏழை மக்களுக்கு மளிகை பொருட்கள் அடங்கிய பையும் மற்றும் முக கவசமும் சுமார் 70 பேருக்கு வழங்கினார்கள்.

இவை அனைத்தும் செங்குந்த மகாசன சங்கத்தின் சார்பாகவும் மற்றும் அதன் கிளைச்சங்கங்கள் சார்பாகவும் வழங்கப்பட்டது

திருநெல்வேலி மாவட்ட கிளைச் சங்கங்களில் கொரோனா நிவாரண உதவி

திருநெல்வேலி மாவட்டத்தில் செங்குந்த மகாஜன சங்கக் கிளைகள் 8 உள்ளன. இக்கிளைகள் சார்பாக சமுதாய மக்களுக்கு கொரோனா நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அம்பாசமுத்திரம் கிளையில் 1200 குடும்பங்களுக்கு செங்குந்தர் சங்க நிர்வாகிகள், இளைஞர் அணியினர் ஏற்பாட்டில் கபசுர குடிநீர் வழங்கப்பட்டது. 54 குடும்பங்களுக்கு தலா 5 கிலோ அரிசி, ரூ. 500/- மதிப்புடைய மளிகை சாமான்கள் வழங்கப்பட்டது.

104 குடும்பங்களுக்கு தலா 5 கிலோ அரிசி மற்றும் ரூ. 500/- மதிப்புடைய மளிகை சாமான்கள் வழங்கப்பட்டது. மொத்த நிவாரணப் பொருட்கள் மதிப்பு ரூ. 1,15,000/-. இதுதவிர இரண்டு தெருக்களில் நபர் 1க்கு ரூ. 1000/- வீதம் 129 நபர்களுக்கு ரூ. 1,29,000/- வழங்கப்பட்டிருக்கிறது.

கல்லிடை கிளை சார்பாக நமது உறவுகள் அனைவருக்கும் கபசுர குடிநீர் வழங்கப்பட்டது. ரூ. 1.75,000 மதிப்பிற்கு அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் 950 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

திருநெல்வேலி கிளை சார்பாக 900 குடும்பங்களுக்கு அனைத்து தெருக்களுக்கும் சென்று கபசுர குடிநீர் விநியோகிக்கப்பட்டது. கிளைகள் மூலமாக 305 குடும்பங்களுக்கு ரூ. 600/- மதிப்புள்ள அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டது. மொத்தம் 305 பயனாளிகள் மதிப்பு ரூ. 1,85,000/-.

இடைகால் கிளையில் மொத்தமுள்ள 200 குடும்பங்களில் 60 குடும்பங்களுக்கு ரூ. 40,000/- மதிப்பிலான மளிகைப் பொருட்களும், அரிசியும் வழங்கப்பட்டது.

பிரம்மதேசம் கிளையில் உள்ள 200 குடும்பங்களில் மிகவும் வறுமையில் இருந்த 6 குடும்பங்ளுக்கு செங்குந்தர் சொந்தங்கள் ரூ. 4000/- மதிப்பிற்கு அரிசி, மளிகைப் பொருட்களை வழங்கியிருக்கின்றனர்.

வீரவநல்லூர் கிளையில் 100 குடும்பங்கள் உள்ளனர். உறவினர்களுக்கு கபசுர குடிநீரும், முகக் கவசங்களும் வழங்கப்பட்டது. எவருக்கும் நிவாரண உதவி வழங்கப்படவில்லை.

சேரன்மாதேவி கிளையில் 70 குடும்பங்கள் உள்ளனர். நிவாரண உதவி எவருக்கும் வழங்கப்படவில்லை. ஆங்காங்கே உள்ள பக்கத்து வீட்டு உறவினர்கள் சிலருக்கு உதவி செய்து வருகிறார்கள். மொத்த மதிப்பு ரூ. 7000/-

பாரதியார் நகர் கிளையில் 80 குடும்பங்கள் உள்ளனர். அதில் 25 குடும்பங்களுக்கு தலா ரூ. 1000/- வீதம் ரூ. 25000/- வழங்கியுள்ளனர்.

மொத்த பயனாளிகள் 1504. மொத்த நிவாரணத் தொகை ரூ. 6.73 லட்சம்

தென்காசி மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் சார்பாக கொரோனா நிவாரணப் பணியாக ஏழை நெசவாளர்களுக்கு பலசரக்கு மற்றும் காய்கறிகள் வழங்கும் நிகழ்வு 21.05.2020 மற்றும் 22.05.2020 ஆகிய இரண்டு நாட்களும் சங்கரன் கோவில் செங்குந்தர் நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது.

செங்குந்த மகாஜன சங்க மாவட்ட தலைவர் திரு A.சங்கரன், மாவட்ட செயலாளர் திரு P.மாரிமுத்து, ஆகியோர் தலைமையிலும், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் S.லட்சுமணன் முன்னிலையிலும், முதற்கட்டமாக 100 ஏழை நெசவாளர் களுக்கு, இரண்டாம் கட்டமாக 106 நெசவாளர்களுக்கும், நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு சிறப்பித் தவர்கள் மாநில செயற்குழு உறுப்பினர் S. கல்யாணசுந்தரம், மாநில செயற்குழு உறுப்பினர் G.செல்வகணேஷ் மற்றும் சமூக வளர்ச்சி மன்ற நிர்வாகிகள் L.முப்பிடாதி, கோட்டியப்பன், S.பாலசுப்ரமணியன், C.S.M. S.சங்கர சுப்பிரமணியன், MGM M. நாராயணன், RGM. S. சண்முகம், A.S.S.T. கந்தசாமி, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் செயலாளர் T.S.A. சுப்பிரமணியன், M.A.P திருமலைவேல், சங்கரன் கோவில் செங்குந்தர் முன்னேற்ற சங்க செயலாளர் N. சுப்பிரமணியன், செங்குந்தர் முன்னேற்ற சங்க பொருளாளர் K. சித்திரபுத்திரன் (எ) ஆனந்த் ஆகியோரும்,

தென்காசி மாவட்ட செங்குந்த

மகாஜன சங்க இளைஞரணி அமைப்பாளர் G.S. முருகேசன், செங்குந்தர் முன்னேற்ற சங்க துணை தலைவர்கள் M.கந்தவேல், P.சிதம்பரம், செங்குந்தர் முன்னேற்ற சங்க துணைச் செயலாளர்கள் S.சுப்பிரமணியன், S.கந்தவேல், P.முத்தையா, செங்குந்தர் முன்னேற்ற சங்க சட்ட ஆலோசகர் K. சரவணன் B.Com., B.L., தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க சங்கரன்கோவில் கிளை இளைஞரணி G.சுப்பையா, செங்குந்தர் முன்னேற்ற சங்க செயற்குழு உறுப்பினர்கள் S.ராம சுப்பிரமணியன், R.சங்கரநாராயணன், S.ராமகிருஷ்ணன், A.S. தளபதி ராஜ், A.மாரியப்பன், S.கணேசன், R.கோபாலகிருஷ்ணன், P. முருகன், S.சிவராமன், P. சங்கர், S. முத்தையா, R.L. மாரிமுத்து, M. சங்கரநாராயணன், P.முருகேசன், P.அருணாசலம், P.பாடாலிங்கம், M.ஜெயராமன், S.முப்பிடாதி, K.ஏகாம்பரம் மூர்த்தி, P.பாலசுப்பிரமணியன், G.சக்திவேல், G.முருகேசன், A.R. ராஜ், A. சந்திரசேகர், A.வேல்முருகன், S.சேதுராமன், M.வீரபுத்திரன், கணபதி முப்பிடாதி கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்விற்கு பெரும் நிதி உதவி அளித்த கடலூர் மாவட்டம் திட்டக்குடி திரு P.T.ராஜன் அவர்களும், குடியாத்தம் திரு S.அருணோதயம் அவர்களும் மற்றும் சங்கரன்கோவில் முக்கிய பிரமுகர்களும் நிதி அளித்துள்ளனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை செங்குந்தர் முன்னேற்ற சங்க நிர்வாகிகளும் உறுப்பினர்களும் செய்திருந்தனர்.

13.05.2020 அன்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை கிளை உள்ள 37 ஏழை எளிய செங்குந்தர்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள். J.S இளைஞர் படை மற்றும் பெருந்துறை கிளையும் இணைந்து கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், ஈரோடு அரசு (G.P) வழக்கறிஞர் M.அருள்முருகன். மாநில செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்புபாளையம் V.கிருஷ்ணசாமி, தாண்டாம்பாளையம் T.Kவஜ்ரவேல், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார், ஈரோடு மேற்கு கிளை செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், பெரியவலசு பாக்ஸர் கிருபா. Na.S.பிரதீப், RVT ரவி செங்குந்தர், கிளை தலைவர் ராஜகோபாலன், செயலாளர் செந்தில் குமரன், பொருளாளர் கணேஷ்குமார், துணைத்தலைவர் ஜெயக்குமார், துணைச் செயலாளர் ராமகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர் கலைச்செல்வன், இளைஞர் அணி கார்த்திகேயன், நடராஜ், வெங்கடாஜலம், கிளை சங்க நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

யாளி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.,
YALEY CHIT FUNDS (P) LTD.,

GST NO : 33AAACY0719M2Z9

Since 1986

மத்திய மாநில அரசுகளின் சீட்டு நிதிச் சட்டப்படி பதிவு பெற்ற சீட்டு நடத்தும் நிறுவனம்

தெய்வத்திரு
Dr. Lion யாளி S.மதிவாணன்
நிறுவனர்

223, எழில் இல்லம், மேட்டூர் ரோடு, ஈரோடு - 638011
Ph : 0424 - 2259007, 4020258 / Email : yaleychitfunds@gmail.com

மாத தவணை	மாதங்கள்	சீட்டு தொகை
₹ 2,00,000	50	1,00,00,000
₹ 1,00,000	50	50,00,000
₹ 50,000	50	25,00,000
₹ 50,000	40	20,00,000
₹ 25,000	40	10,00,000
₹ 12,500	40	5,00,000
₹ 40,000	30	12,00,000
₹ 20,000	30	6,00,000
₹ 10,000	30	3,00,000
₹ 40,000	25	10,00,000
₹ 20,000	25	5,00,000
₹ 10,000	25	2,50,000
₹ 4,000	25	1,00,000
₹ 2,000	25	50,000

புதிய சீட்டில் இணைய தொடர்புக்கு

Jc பிரேம்சரண் மதிவாணன்
நிர்வாக இயக்குநர்
94433 28386

பொது மேலாளர்
94433 28701

தினசரி, வார மற்றும் மாத கலெக்ஷன்கள் உண்டு

03.05.2020 அன்று ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 164 செங்குந்தர்களுக்கு அரிசி மற்றும் காய்கறிகள் கொடுக்கப்பட்டது. சென்னிமலையில் உள்ள (1) சென்னிமலை டவுன் கிளை மற்றும் (2) பாரதி நகர் கிளை மற்றும் (3) மேலப்பாளையம் பகுதி மற்றும் காந்திநகர் பகுதி. குமாரபுரி பகுதி மற்றும் (4) M.P.N புரம் (தோப்புபாளையம்) கிளை மற்றும் (5) சென்னிமலை 1010 காலனி கிளை. (6) M.P.N நகர் கிளை (7) முகாசி அனுமன்பள்ளி கிளைஆகிய பல்வேறு கிளையில் இருக்கும் செங்குந்தர் குல நெசவாளிகளுக்கு J.S இளைஞர் படை சார்பாகவும் மற்றும் சென்னிமலையில் சுற்றியுள்ள பல்வேறு கிளை சார்பாகவும் அத்தியாவசிய உணவு பொருட்கள் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், தாண்டாம்பாளையம் T.K.வஜ்ரவேல், பெருந்துறை தோப்புபாளையம் கிட்டு என்கிற கிருஷ்ணசாமி, வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார், வீரப்பன்சத்திரம் கிளை துணை தலைவர் பாலாஜி, தமிழ் புலவர் பெருமான் சேலம் ப.பாலன், Na.S.பிரதீப் செங்குந்தர், SES குப்புராஜ், குமாரபுரி ஆனந்தன், கிரி, சரவணன், சிவசுப்பிரமணியம், இளங்கோவன், ஐயப்பன், சுரேஷ், திருமதி கலைவாணி, சென்னிமலை மற்றும் முகாசி அனுமன்பள்ளி கிளை சார்ந்த நிர்வாகிகள், அனைத்து கிளை தலைவர் செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள், கிளை சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

அனைவரது வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டிய ஒரு மூலிகைச்செடி துளசி.

இதன் வேறு பெயர்கள்: துழாய், திவ்யா, பிரியா, துளவம், மாலலங்கல், விஷ்ணுபிரியா, பிருந்தா, கிருஷ்ணதுளசி, ஸ்ரீதுளசி, ராமதுளசி

இனங்கள்: நல்துளசி, கருந்துளசி, செந்துளசி, கல்துளசி, முள்துளசி, நாய்துளசி (கஞ்சாங்கோரை, திருத்துழாய்)

தாவரப்பெயர்கள்: Ocimum, Sanctum, Linn Lamiaceae, Labiatae (Family)

வளரும் தன்மை:

வடிகால் வசதியுள்ள குறுமண் மற்றும் செம்மண், வண்டல்மண், களி கலந்த மணற்பாங்கான இருமண், பாட்டு நிலம் தேவை. கற்பூரமணம் பொருந்திய இலைகளையும் கதிராக வளர்ந்த பூங்கொத்துகளையும் உடைய சிறுசெடி. தமிழகமெங்கும் தானே வளர்கின்றது. துளசியின் தாயகம் இந்தியா. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுக்கும் பரவியுள்ளது. துளசியை விதை மற்றும் இளம் தண்டுக் குச்சிகள் மூலம் பயிர் பெருக்கம் செய்யலாம். மண்ணில் கார அமில நிலை 6.5 - 7.5 வரை இருக்கலாம். வெப்பம் 25 டிகிரி முதல் 35 டிகிரி.

துளசியின் இலை, தண்டு, பூ, வேர் அனைத்துப் பகுதிகளும் மருத்துவ குணம் வாய்ந்தவை.

பயன்கள்:

தெய்வீக மூலிகையும், கல்ப மூலிகையும் ஆகும். வீட்டு உபயோகம், மருந்து, வாசமுடைய பூச்சி மருந்துகள், வாசனைப் பொருட்கள். துளசியின் கசாயம் இட்டும், சூரணம் செய்தும் சாப்பிடலாம். இருமல், சளி, ஜலதோசம் மற்றும் தொற்று நீக்கி, கிருமி நாசினி, பல்வேறு வியாதிகளையும்,

பூச்சிகளையும் கட்டுப்படுத்தும் தடுக்கும் ஆற்றல் படைத்தது. துளசி நம் உடலில் வெப்பத்தை உண்டாக்கி கோழையை அகற்றி உடலின் உள்ளே இருக்கின்ற வெப்பத்தை ஆற்றக்கூடிய தன்மை உடையது.

வியர்வையை அதிகமாகப் பெருக்கக் கூடிய குணமும் இதற்கு உண்டு. இது குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, இருமல் போக துளசி சாற்றுடன் சிறிது தேன் கலந்து கொடுத்தால் குணமாகும். உடம்பில் ஏற்படுகின்ற கொப்புளங்களுக்கு துளசி இலையை நீர்விட்டு அரைத்து பூசி வந்தால் அவை எளிதில் குணமாகும். சரும நோய்களுக்கு துளசி சாறு ஒரு சிறந்த நிவாரணி.

இலைகளை இட்லி வேகவைப்பது போல ஆவியில் அவித்துப் பிழிந்து சாறு 5மி.லி. காலை, மாலை சாப்பிட்டு வர பசியை அதிகரிக்கும். இதயம் கல்லீரல் ஆகியவற்றை பலப்படுத்தும். சளியை அகற்றும், தாய்பாலை மிகுக்கும். இலை கதிர்களுடன் வாட்டி பிழிந்த சாறு காலை மாலை 2 துளி வீதம் காதில் விட்டு வர 10 நாட்களில் காது மந்தம் தீரும். விதைச் சூரணம் 5 அரிசி எடை தாம்பூலத்துடன் கொள்ள தாது கட்டும். மழைக் காலத்தில் துளசி இலையை தேநீர் போலக் காய்ச்சி குடித்து வந்தால் மலேரியா, விஷக்காய்ச்சல் போன்ற நோய்கள் வராது. தொண்டையில் புண் ஏற்பட்டு துன்பப்படுகிறவர்கள் துளசி இலைக் கசாயத்தை குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

பேன் தொல்லை நீங்க துளசியை இடித்து சாறு எடுத்து அத்துடன் சமஅளவு எலுமிச்சை சாறு கலந்து வாரம் ஒரு முறை தலையில் தேய்த்து ஒரு மணி நேரம் குளித்து வர பேன், பொடுகு தொல்லை நீங்கும்.

துளசி இலையை இடித்துப் பிழிந்த சாற்றுடன் சிறிதளவு கற்பூரம் கலந்து பல் வலியுள்ள இடத்தில் பூசி வர வலி குறையும். வெட்டுக் காயங்களுக்கு துளசி இலைச் சாற்றை பூசி வந்தால் அவை விரைவில் குணமாகும். வீடுகளில் துளசி இலைக் கொத்துக்களை கட்டி வைத்தாலும், வீட்டைச் சுற்று துளசி செடிகளை வளர்த்தாலும் கொசுக்கள் வராது.

துளசி இலை நல்ல நரம்பு உரமாக்கியாகச் செயல்படுவதோடு, ஞாபக சக்தியையும் வளர்க்கிறது. துளசி மணி மாலை அணிவதால் அதிலிருந்து மின் அதிர்வுகள் ஏற்பட்டு நம்மை பல நோய்களிலிருந்து காக்கிறது. எளிமையான கருத்தடைச் சாதனமாகக் கொள்ளவும் ஏற்றது. தினமும் காலையில் வெறும் வயிற்றில் 15 கிராம் அளவு ஆண், பெண் இருவரும் துளசியைச் சாப்பிட்டு வந்தால் ஆறு மாதத்திற்குப் பின் கருத்தரிக்காது.

துளசி குணமாக்கும் நோய்கள்:

உண்ட விஷத்தை முறிக்க, சளி, இருமல், கோழை, கபக்கட்டு குணமாக, இளைப்பு குணமாக, பற்று, படர்தாமரை, சிரங்கு போன்ற தோல் நோய்கள் குணமாக, விஷஜுரம், ஜன்னிவாத ஜுரம் குணமாக, வயிற்றுப்போக்குடன் இரத்தம் போவது நிற்க, காது குத்துவலி, காது வலி குணமாக, தலைசுற்று குணமாக போன்ற பிரச்சனைகளையும் ஆற்றல் மிக்கது துளசி.

வாத நோயுற்றவர்களின் வயிற்று வலி, வயிற்று உப்பிசம் குணமாக, மின்சாரம் தாக்கியவரைக் காப்பாற்ற, அஜீரணம் குணமாக, கெட்ட ரத்தம் சுத்தமாக, குஷ்ட நோய் குணமாக, பிரசவ வலி குறைய, மூக்கு சம்பந்தமான வியாதிகள் குணமாக, காக்காய்வலிப்புக் குணமாக, ஜீரண சக்தி உண்டாக, தாதுவைக் கட்ட, சொப்பன ஸ்கலிதம் குணமாக, இடிதாங்கியாகப் பயன்பட, சிறுநீர் சம்பந்தமான வியாதி குணமாக, மூத்திரத் துவாரவலி குணமாக, கண்ணில் விழுந்த மண், தூசியை வெளியேற்ற, வாதரோகம் குணமாக, பித்தம் குணமாக, அம்மை அதிகரிக்காதிருக்க, பாம்பு விஷத்தை முறிக்க, தேள் கொட்டு, வண்டுகடி விஷப்பூச்சியின் விஷம் நீங்கவும் முறையாகப் பயன்படுத்தலாம்.

மேலும், இது குழந்தைகள் வாந்தியை நிறுத்த, குழந்தைகள் வயிற்றுப் போக்கை நிறுத்த, சகல விதமான வாய்வுகளும் குணமாக, மாலைக்கண் குணமாக, எலிக்கடி விஷம் நீங்க, இரணத்தில் இரத்தம் ஒழுகினால் நிறுத்த, வாந்தியை நிறுத்த,தனுர்வாதம் கணமாக, வாதவீக்கம் குணமாக, மலேரியா, இன்புளூயன்சா காய்ச்சல்கள் குணமாக, காய்ச்சலின் போது தாகம் தணிய, வாய்வுப் பிடிப்பு குணமாக எனப் பல்வேறு மருத்துவப் பயன்களை ஒருங்கே பெற்ற தெய்வீகத் தாவரம் துளசி என்று மருத்துவ நூல்கள் போற்றிப் புகழ்கின்றன.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

பி.மேட்டுப்பாளையம்

29-04-2020 ஈரோடு மாவட்டம் பி.மேட்டுப்பாளையம் கிளையில் இருக்கும் செங்குந்தர் குல நெசவாளிகளுக்கு J.S இளைஞர் படை சார்பாகவும் மற்றும் பி. மேட்டுப்பாளையம் கிளை சார்பாகவும் அத்தியாவசிய உணவு பொருட்கள் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார், மேற்கு கிளைச் செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், Na.S.பிரதீப் செங்குந்தர் மற்றும் பி. மேட்டுப்பாளையம் கிளையைச் சார்ந்த திரு.சி.தர்மராஜ் தலைவர், செயலாளர் திரு. ஜி.சிவகுமார், பொருளாளர் கே.தனசேகரன், துணைத் தலைவர் கே.சிதம்பரம், துணைசெயலாளர் ஏ.ஆறுமுகம், செயற்குழு உறுப்பினர் எம்.கே.தங்கவேல், கிளை சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

அம்பாசமுத்திரம்

அம்பாசமுத்திரம் அகஸ்தியர் அன்னதான கமிட்டி சார்பாக ஏழைகளுக்கு அரிசி மற்றும் பலசரக்கு பொருள் வழங்கப் பட்டது நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அகஸ்தியர் கோவில் அறங்காவலர். திரு சங்கு சபாபதி, சங்கரன் கோவில் அறங்காவலர் ராஜகோபால், போராசிரியர் திரு. சண்முகசுந்தரம், கமிட்டி தலைவர் முருகேசன், செயலாளர் S.P.C.பாலமுருகன் மற்றும் சமுதாய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை பழைய பேட்டை 50வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினரும் செங்குந்தர் மாவட்ட மகளிரணி தலைவி யுமான திருமதி. J.ராஜேஸ்வரி சார்பாக 28.04.2020 அன்று காலை 9 மணிக்கு தூய்மை பணியாளர்கள் மற்றும் ஏழை பொது மக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது

13.05.2020 அன்று ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி அருகே உள்ள பொம்மன் பட்டி உள்ள 40 ஏழை எளிய செங்குந்தர் களுக்கு அரிசி J.S இளைஞர் படை சார்பாக கொடுக்கபட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், ஈரோடு அரசு (G.P) வழக்கறிஞர் M.அருள்முருகன். K.P ராமலிங்கம், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார், ஈரோடு மேற்கு கிளை செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்புபாளையத்தை சேர்ந்த V.கிருஷ்ணசாமி, தாண்டாம்பாளையம் T.K.வஜ்ரவேல், பெரியவலசு பாக்ஸர் கிருபா. Na.S.பிரதீப், R.V.T ரவி செங்குந்தர், உத்திரமூர்த்தி, கவுந்தப்பாடி அருகே உள்ள பொம்மன்பட்டி பகுதி சார்ந்த ஊர் தலைவர் நாராயணன் செங்குந்தர் அவர்கள், கவுன்சிலர் விநாயகம் அவர்கள், கா. கோவில் தலைவர் வடிவேல், மு. கோவில் தலைவர் சிவலிங்கம் அவர்கள், கோவிந்தசாமி, தர்மராஜ், முருகேசன், முன்னாள் கவுன்சிலர் லோகநாதன் அவர்கள், பழனிசாமி, பூபதி, ஜி. பழனிசாமி, கந்தசாமி, கோவில் நிர்வாகிகள் மற்றும் செங்குந்தர் குல மக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்

29.04.2020 ஈரோடு மாவட்டம். நெசவாளர் காலனி கிளையில் இருக்கும் செங்குந்தர் குல நெசவாளிகளுக்கு J.S இளைஞர் படை சார்பாகவும் மற்றும் நெசவாளர் காலனி கிளை சார்பாகவும் அத்தியாவசிய உணவு பொருட்கள் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார், வீரப்பன்சத்திரம் கிளை துணை தலைவர் பாலாஜி? தமிழ் புலவர் பெருமான் சேலம் பாலன், Na.S.பிரதீப் செங்குந்தர். நெசவாளர் காலனி கிளையைச் சார்ந்த திரு. கே.எம் தனசேகரன் தலைவர், செயலாளர் ஆர். ஜெகநாதன், பொருளாளர் பி. லோகநாதன், துணைத் தலைவர் ஆறுமுகம், துணை செயலாளர் ஆர்.சண்முகம், செயற்குழு உறுப்பினர் எஸ்.பழனிச்சாமி, கிளை சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

14.05.2020 அன்று ஈரோடு மாவட்டம், அருகே உள்ள சித்தோடு பகுதியில் 100 ஏழை எளிய செங்குந்தர் குடும்பங்களுக்கு அரிசி வழங்கப்பட்டது இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், மேற்கு கிளைச் செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்புபாளையத்தை சேர்ந்த V.கிருஷ்ணசாமி, தாண்டாம்பாளையம் T.K.வஜ்ரவேல், செங்குந்தர் நகர் பிரதீப், கிளை சங்க நிர்வாகிகள், தலைவர் E.ஏகநாதன், துணைத் தலைவர் S.சக்திவேல், செயலாளர் A.கணேஷ், இணைச் செயலாளர் D. சண்முகசுந்தரம், பொருளாளர் S. சக்திவேல், E.மாரியப்பன் மற்றும் சித்தோடு செங்குந்தர் குல மக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

1.5.2020 அன்று ஈரோடு மாவட்டம் வெண்டிபாளையம் கிளையில் இருக்கும் செங்குந்தர் குல நெசவாளிகளுக்கு J.S இளைஞர் படை சார்பாகவும் மற்றும் வெண்டிபாளையம் கிளை சார்பாகவும் 50 நபர்களுக்கு காய்கறிகள் உணவு பொருட்கள் அரிசி 25 நபர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, VeecopTex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்புபாளையத்தை சேர்ந்த V.கிருஷ்ணசாமி, தாண்டாம்பாளையம் T.K.வஜ்ரவேல், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார். வீரப்பன்சத்திரம் கிளை துணை தலைவர் S.பாலாஜி? தமிழ் புலவர் பெருமான் சேலம் ப.பாலன் அவர்கள், Na.S.பிரதீப் செங்குந்தர் மற்றும் வெண்டிபாளையம் ஊர் ரவீந்திரன், ஊர் கொத்துக்காரர் ஈ.பி. மோகன் மற்றும் திரு குணசேகரன், வெண்டிபாளையம் இளைஞர் அணி கிளை நிர்வாகிகள் பிரதாப், விக்ரம், ராகுல் ராஜசேகர், கார்த்தி, பிரபு, மௌலீஸ்வரன், கோபிநாத், சுரேந்தர், தினேஷ்குமார், விஜி, சந்தோஷ், அஜித், சுந்தரலிங்கம், அரவிந்த்ராஜ், ஜெயசீலன் மற்றும் செங்குந்த மகாஜன சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருபுவனம்

தஞ்சாவூர் மாவட்டம் திருபுவனத்தில் கொரோனோவின் காரணமாக பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட 120 செங்குந்த குடும்பங்களுக்கு ரூபாய் 40,000/- மதிப்புள்ள நிவாரண பொருட்களாக அரிசி, பருப்பு, ஆயில் மற்றும் காய்கறிகள் 01-05-2020 அன்று திருபுவனம் கிளை சங்கத்தின் சார்பாக வழங்கப்பட்டது மேலும் இந்த நிவாரணப் பொருட்களை கிளை சங்க பொறுப்பாளர்கள் T.ரங்கசாமி, V.சிகாமணி, R.கந்தசாமி, D.சிவலிங்கம், S.நடராஜன், G. தியாகராஜன், D.மகாலிங்கம், G.இராமலிங்கம், K.ஜெயராஜ், M.சேகர், S. வைரவேல், S. தேசிய விநாயகம், S.கிருஷ்ணன், C. மாணிக்கம், P.K.S. கிருஷ்ணன், C. முருகேசன் ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டது.

உலகிலேயே மிகச் சிறந்த ஆலயமணி எது தெரியுமா?

- கோயில் என்று சிறப்புப் பெயர் பெற்ற சிதம்பரத்தில் உள்ள ஆலயமணியே உலகில் உள்ள மிகச் சிறந்த மணியாகும்.
- ‘சிகண்டி பூரணம்’ என்று சித்தர்களால் அழைக்கப்படும் இந்த மணியிலிருந்து எழும் தெய்வீக ஒலி எளிதில் நம்மை ஆழ்நிலை தியானத்தில் ஆழ்த்தி விடும் தன்மை உடையது.
- தியானத்தில் முன்னேற்றம் அடைய விரும்புபவர்கள் இந்த சிகண்டி பூரண மணி ஓசையைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருத்தல் நலம்
- வள்ளலார் பெருமானுக்கு அருள் வழங்கி அனுகிரகம் அளித்த மணியே தில்லை சிதம்பர தலத்தில் விளங்கும் சிகண்டி பூர்ணம் என்ற ஆலய மணியாகும்.
- உலகிலேயே சிறந்த ஆலய மணி, இதற்கு இணையான மணி உலகத்தில் வேறெங்கும் கிடையாது.
- சீவனைச் சிவமாக்கும் ஒப்பற்ற இறைச் சக்தியுடன் பூரிக்கும் மணியே சிகண்டி பூர்ணமாகும்.
- இதன் மகத்துவத்தை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. அவரவர் ஆன்ம அனுபவத்தால் மட்டுமே உணர முடியும்.
- சிதம்பரம் ஸ்ரீநடராஜர் சன்னதியில் ஒலிக்கும் உலகிலேயே மிகச் சிறந்த ஆலயமணி சிகண்டி பூரணத்தின் ஓசை ,
- 59 நொடி ஒலிக்கும் !! இந்த சிகண்டி பூரண மணி சத்தத்தைக் (தேவ கானத்தைக்) கேட்டால் உங்கள் ஆயுளில்12 விநாடிகள் அதிகமாகும்... !!!

கல்லிடைக்குறிச்சி நம் சமுதாய சொந்தங்கள் அனைத்து குடும்பங்களுக்கும் 5 கிலோ அரிசி வீதம் 950 வீடுகளுக்கும் நேரில் சென்று வழங்கப்பட்டது.

17-05-2020 அன்று செங்குந்தர் சமூக வட்டார தலைவர் அருப்புக் கோட்டை மணவாளன் தலைமையில், ஊர் உறவின் முறை தலைவர் ராமசாமி, விஜயராம், ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில், செயற்குழு உறுப்பினர்கள் க,சண்முகவேல், அ.பழனிவேல் ஆகியோர் வரவேற்புரையாற்றினர். கோரோனா சிறப்பு உதவிகளை முன்னாள் மாவட்ட தலைவர் அண்ணாதுரை, தொழிலதிபர் செல்வராஜ் ஆகியார் வழங்கினர். ஏ.கே.மணி சிறப்புரையாற்றி னார். நிர்வாகிகள் மற்றும் சமுதாய மக்கள் கலந்து கொண்டனர், கோரோனா சிறப்பு நிதியுதவி வழங்கிய நன்கொடை வள்ளல் கடலூர் மாவட்டம் பி.டி.ராஜன் அவர்களுக்கும் உதவி செய்த தென்னிந்திய மண்டல செயலாளர் பாலசுப்ரமணி அவர்களுக்கும் அருப்புக்கோட்டை வட்டார செங்குந்த மகாஜன சங்கம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

7-05-2020 அன்று ஈரோடு மாவட்டம் வெள்ளித் திருப்பூர் கிளையில் உள்ள 20 ஏழை எளிய செங்குந்தர்களுக்கு அரிசி மற்றும் காய்கறிகள், J.S இளைஞர் படையும் மற்றும் வெள்ளித்திருப்பூர் கிளையும் இணைந்து வழங்கினார். இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி, Veecop Tex சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், வீரப்பன்சத்திரம் கிளை துணைத் தலைவர் பாலாஜி, தமிழ் புலவர் பெருமான் சேலம் பா.பாலன் ஐயா அவர்களும் Na.S. பிரதீப், R. வைரம் செங்குந்தர் மற்றும் வெள்ளித் திருப்பூர் கிளை நிர்வாகிகள் தலைவர் S.தங்கவேல், செயலாளர் S.சிவலிங்கம், பொருளாளர் T.A.மாது, துணைத் தலைவர் T.P.சித்தேஸ்வரன், துணை செயலாளர் R.பாலசுப்ரமணியன், செயற்குழு உறுப்பினர் A.மாதேஸ்வரன் மற்றும் ஊர் செங்குந்தர் சொந்தங்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்..

3.5.2020 ஈரோடு மாவட்டம். அரசூர் கிளையில் இருக்கும் செங்குந்தர் குல நெசவாளிகளுக்கும் கூலித் தொழிலாளர்களுக்கும் J.S இளைஞர் படை சார்பாகவும் மற்றும் அரசூர் கிளை நிர்வாகிகள் சார்பாகவும் 350 நபர்களுக்கு உணவு பொருட்கள் அரிசி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி, Veecoptex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், தமிழ் புலவர் பெருமான் சேலம் ப.பாலன், பாபு செங்குந்தர், அரசியல் கட்சி செங்குந்தர் பிரமுகர்கள் மணியகாரர் காவல்துறையினர் முன்னிலையில் கிளை தலைவர் A.P.பழனியப்பன், செயலாளர் M சீனிவாசன், பொருளாளர் A.K.மாரியப்பன், துணைத் தலைவர் A.S.சாமியப்பன், துணைச் செயலாளர் A.அர்த்தனாரீஸ்வரர், செயற்குழு உறுப்பினர், A.V.M.குணசேகரன் மற்றும் கிளை நிர்வாகிகள் செங்குந்தர் இளைஞர்களுடன், செங்குந்த பொதுமக்கள் முன்னிலையில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரம் செங்குந்தர் வாழும் நடுவிற்பட்டி பகுதியில் கொரோனா நிவாரண பணிகள் செங்குந்தர் நடுநிலைப் பள்ளியில் வைத்து 15.05.2020 வெள்ளிகிழமை நடைபெற்றது. இதில் 250 மாணவர் களுக்கு அவர்களின் குடும்பத்திற்கு அரிசி பை ஒன்று, மளிகை சாமான்கள் மற்றும் காய்கறிகள் அடங்கிய தொகுப்பு தலா ஒன்று வீதம் சுமார் ஒன்றரை லட்சம் மதிப்பிலான நிவாரணப் பொருட்களை சமுதாய தலைவர் திரு.P.செல்வராஜ், திரு. கருப்பசாமி, திரு.வெயிலு கந்தன், திரு.மாரிமுத்து முன்னிலையில் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் திரு மு.பாலமுருகன் எட்டையபுரம் பேரூராட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை பள்ளி தலைமை ஆசிரியர் திரு. கு.செல்வ மாரியப்பன் மற்றும் ஆசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

தஞ்சை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவரும், தஞ்சை மாநகர் செங்குந்தர் கல்விச் சங்கத்தின் தலைவருமான Lion. S. சிவா அவர்கள் தஞ்சாவூர் நகர மக்கள் 300 பேருக்கு நான்கு லட்சம் ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருட்களையும், தஞ்சை மாவட்டத்திற்கு கொரோனா நிவாரணமாக ரூபாய் ஒரு இலட்சமும் வழங்கினார்.

கொரோனா ஆட்டம்

என்று தணியு மிந்த கொரோனா வேகம்
என்று மடியு மிந்த கூற்றின் தாகம்?
என்று எம்மைப் பிடித்த பயமது போகும்
என்று உலகை விட்டு உறுதியாய் மாயும்?
அன்றொ ருநாளில் நீயும் அவதரித் தாயே
அகிலமும் மிரளவே ஆட்டிப் படைக்கி றாயே!
இன்று மிங்கே இருந்துத் தொலைக்கி றாயே!
இன்னல் பலவும் தந்து நிலைக்கி றாயே!

பஞ்சமா பாதகம் எல்லாம் புரிகின் றாயே
பசியும் பிணியும் பதுங்கியே தருகின் றாயே!
நெஞ்சமும் உமக்கிலை நெறியும் தவறி னாயே
நேர்மை மருத்துவர் நிம்மதி குதறி னாயே!
கொஞ்சமும் கருணை யின்றி அழிக்கி றாயே!
கதறும் மனித குலத்தை ஒழிக்கி றாயே!
பிஞ்சும் பூவுமாய்ப் பிடித்துப் பறிக்கி றாயே!
பேதை மக்களைப் பல்லின்றிக் கொறிக்கி றாயே!

வேலை செய்ய இயலாது தடுக்கி றாயே
வேளை தோறும் இன்னல் கொடுக்கி றாயே!
ஆளை மாய்க்கும் நோயாய் இருக்கி றாயே
அடுத்த வரையும் பகையாய் உறிக்கி றாயே!
நாளை கடத்த முடியாது முடக்கி னாயே
நாளும் வீட்டில் கிடந்திட அடக்கி னாயே!
ஏழை பாழை மக்களை மிரட்டு றாயே
இன்னு முங்கள் இனத்தைத் திரட்டு றாயே!

கவிஞர். அ.முத்துசாமி,
தாரமங்கலம்.

M.P. நாச்சிமுத்து M. ஜெகநாதன் பொறியியல் கல்லூரி

சுத்தானந்தன் கல்வி நகர்,

சென்னிமலை, ஈரோடு - 638 112.

BSI FS 558356 ISO 9001 : 2015

Phone : 04294 - 250242, 250220, 251617

E-mail : mpnmjec@mpnmjec.ac.in Visit us at : www.mpnmjec.ac.in

'உத்யோக் ரத்னா'
திரு. ஜெ. சுத்தானந்தன் B.Sc.
நிறுவனர்

Counselling Code 2713

'பாரத் வித்யா சிரோமணி'
Dr. வசந்தா சுத்தானந்தன் M.A., B.Ed.
தாளாளர்

B.E.

- Civil Engineering
- Computer Science Engineering
- Electronics and Communication Engineering
- Electrical and Electronics Engineering
- Mechanical Engineering

கல்விச் சேவையில் 35 வருடங்கள் MPNMJEC

B.Tech. I.T.

M.E.

- CAD CAM
- Computer Science and Engineering
- Power Systems Engineering
- Structural Engineering
- VLSI - Design

M.B.A
M.C.A

Placement Record 394 Offers

தொடர்புக்கு : 98652 33600, 98655 33800, 98655 33700

17.05.2020 அன்று ஈரோடு மாவட்டம், ஈரோடு மேற்கு கிளை உள்ள 20 ஏழை எளிய செங்குந்த குடும்பங்களுக்கு அரிசி மற்றும்? காய்கறிகள் J.S இளைஞர் படை மற்றும் செங்குந்த மகாஜன சங்கம் ஈரோடு மேற்கு கிளையும் இணைந்து வழங்கின. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், மாநில செயற் குழு உறுப்பினர் தாண்டாம்பாளையம் T.K.வஜ்ரவேல், வழக்கறிஞர் ஜெ.கே. என்கிற ஜெகதீஸ்குமார், பெரியவலசு பாக்ஸர் கிருபா, Na.S.பிரதீப் செங்குந்தர், செங்குந்த மகாஜன சங்க ஈரோடு மேற்கு கிளை செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், பொருளாளர் தினமலர் சக்திவேல், மாவட்ட பிரதிநிதி ஜெயக்குமார், பி. எஸ். சிவகுமார், பி. எஸ். பிரகாஷ்குமார், எஸ்.கனகசபாபதி, கிளை சங்க நிர்வாகி கள் மற்றும் ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வாழ்த்துக்கள்

வேலூர் மாவட்டம் சத்துவாச்சேரியைச் சேர்ந்த (லேட்) திரு. வி.ரெங்கநாதன் செங்குந்தர் திருமதி. வசந்தி தம்பதியரின் மகன் செல்வன் கலைவாணன் அகில இந்திய குடிமைப்பணித் தேர்வில் 2018ம் நேரடி இ.கா.ப தேர்வு பெற்று தற்போது புதுடில்லி மாநகர காவல்துறையில் உதவி காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறார்.

அவருக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்



17.05.2020 அன்று ஈரோடு மாவட்டம், கோபி, காசிபாளையம் கிளையில் உள்ள 45 ஏழை எளிய செங்குந்த குடும்பங்களுக்கு அரிசி J.S இளைஞர் படை மூலம் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி. veecop tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், மாநில வழக்கறிஞர் அணி செந்தில்நாதன், ஈரோடு மேற்கு கிளை செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்புபாளையத்தை சேர்ந்த V.கிருஷ்ணசாமி, தாண்டாம்பாளையம் T.K.வஜ்ரவேல், வழக்கறிஞர் ஜெகதீஸ்குமார், பெரியவலசு பாக்ஸர் கிருபா, Na.S.பிரதீப் செங்குந்தர், R.V.T.ரவி மற்றும் கோபி - காசிபாளையம் கிளை சார்ந்த தலைவர் மாரிமுத்து, செயலாளர் பழனிசாமி, பொருளாளர் சுப்ரமணியம், துணைத்தலைவர் பூபதி, துணை செயலாளர் பார்த்திபன், செயற்குழு உறுப்பினர் சாமிநாதன், கிளைச் சங்க நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

அருப்புக்கோட்டை நகரம் பெரிய புளியம்பட்டி பகுதியில் 22.04.2020 அன்று அருப்புக் கோட்டை பெரிய புளியம்பட்டி பகுதி செங்குந்த மகாஜன கிளைச் சங்கத் தலைவர் ம.அய்யனார் Ex.MC., மாநில செயற்குழு உறுப்பினர் அ.பழனிவேல் BSc., ஆகியோர் தங்கள் குடும்ப நிதியில் இருந்து மொத்தம் ரூபாய் 62,000/- மதிப்பிற்கு, செங்குந்தர் குல மக்கள் 116 பேருக்கு தலா அரிசி 10 கிலோ மற்றும் காய்கறி செலவுக்கு ரூ.100ம் வழங்கினார்கள். மேற்படி திட்டம் நல்ல முறையில் செயல்பட இப்பகுதியில் வசிக்கும் செங்குந்தர் இளைஞர் அணியினரும் - பங்குனித் திருவிழா தீச்சட்டி குழுவினரும் ஒத்துழைப்பு கொடுத்தனர்.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்..

கோபி கணக்கம்பாளையம்

28.04.2020 அளவில் ஈரோடு மாவட்டம். கோபி செட்டிபாளையம் தாலுக்கா கணக்கம்பாளையம் கிளையில் இருக்கும் செங்குந்தர் குல நெசவாளிகளுக்கு J.S இளைஞர் படை சார்பாகவும் மற்றும் கணக்கம்பாளையம் கிளை சார்பாகவும் அங்குள்ள 75 நபர்களுக்கு அத்தியாவசிய உணவு பொருட்கள் கொடுக்கப் பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி வீரப்பன்சத்திரம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்பு பாளையத்தை சேர்ந்த V.கிருஷ்ணசாமி, தாண்டாம் பாளையம் T.K.வஜ்ரவேல், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ் குமார், வீரப்பன்சத்திரம் கிளை துணை தலைவர் பாலாஜி? தமிழ் புலவர் பெருமான் சேலம் ப.பாலன் அவர்கள், Na.S.பிரதீப் செங்குந்தர் மற்றும் கணக்கம்பாளையம் கிளையைச் சார்ந்த தேவராஜன், வெள்ளிங்கிரி, பகவதி ராஜ், பரமேஸ்வரன், பாலமுருகன், பூபதி, கிளை உறுப்பினர்கள் முருகேசன், கோபால், வெற்றி, தேவி, அமுதாகுமார், வேதநாயகம், அங்கப்பன், மயில்சாமி, லோகநாதன், பழனிச்சாமி, அருணாச்சலம், மோகனசுந்தரம், சுகந்தி, லிங்கேஸ்வரமூர்த்தி இளைஞர் அணி மற்றும் இந்நிகழ்வில் கலந்துகொண்ட செங்குந்தர் பெருமக்கள் முன்னிலையில் உணவுப் பொருள் வழங்கப்பட்டது.

பாவேந்தரின்

அனுபவ மொழிகள்

* **செய்யத் துணிபவனுக்கு, எண்ணத் துணிபவனுக்குத்தான் வெற்றி கிட்டுகிறது.**
* **சுயேச்சையான எண்ணங்களையும், பரந்த நோக்கங்களையும் வளர்க்க முற்படவேண்டும்**
* **மனிதன் தன் வாழ்வில் மனமறிந்த தவறுகளைச் செய்யக்கூடாது.**
* **அவ்வாறு தவறிழைத்துவிட்டாலும் மீண்டும் அத்தகைய தவறுகளைச் செய்யக் கூடாதென்பதே தமிழ்ப் பெரியார்கள் கூறிய முறையாகும்.**
* **எல்லாவிதமான நன்மைகளையும் கொடுக்கின்ற "கல்வி' இல்லாத வீட்டை 'இருண்ட வீடு' என்போம்.**

கந்தசஷ்டி கவசம் உருவான வரலாறு

சென்னிமலை தண்டபாணி படைப்பெலாம் போற்றி
நலம் கண்டு சுப்பிரமணியன் கழல் போற்றிக் கந்தசஷ்டிக்கவசம்
விண்டவன் தாள் நீழல் மேவிய தேவராயப் பெரியார்
முண்டகம் அன்னத்தால் போற்றுவான் இன்னருள் முன்னிற்கவே.

தேவராயன் என்ற பெயர் கடவுளுக்கு நிகரானவர். ராயர் என்பதற்கு தலைமைப் பணி செய்பவன் என்று பொருள். காங்கேயம் அருகில் உள்ள மட விளாகம் என்னும் ஊரைச் சேர்ந்த இவர் மைசூர் தேவராஜ உடையாரின் காரியஸ்தரில் ஒருவராக இருந்தவர்.



முருகப்பெருமானுடைய அடியார்களில் பலர் எவ்வளவோ பாடல்களை எழுதி இருந்தாலும் அவை எல்லாவற்றைக் காட்டிலும் தனிச் சிறப்புடன் திகழ்வது கந்தசஷ்டி கவசம். இதை தினமும் உச்சரிக்காத முருக பக்தர்களும் இல்லை. அவர்கள் தங்கள் இல்லத்தில் அதிகாலையில் அந்தப் பாடலை கேட்டு பரவசம் அடையாத நாட்களும் இல்லை.

இவ்வளவு சிறப்பு மிக்க கந்த சஷ்டிக் கவசத்தை இயற்றியவர் பாலதேவராய சுவாமிகள். இவர் முருகப் பெருமானின் திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழனி, சுவாமி மலை, திருத்தணி, பழமுதிர்ச் சோலை ஆகிய அறுபடை வீடுகளுக்கும் தனித் தனியே கந்தசஷ்டிக் கவசம் பாடியுள்ளார். தற்போது வழக்கில் உள்ள கந்தசஷ்டிக் கவசம் இரண்டாம் படை வீடான திருச்செந்தூருக்கு உரியதாகும்.

அனல் வாதம் புனல் வாதம் என்றால் என்ன?

அனல் வாதம் என்பது ஒன்றை அனலில் வெந்து விடாமல் அப்படியே எடுப்பது ஆகும். புனல் வாதம் என்பது ஒன்றை நீரோட்டத்திற்கு எதிராக ஏறிவரச் செய்வது ஆகும். இந்த சஷ்டி கவசத்தை பாடிய பின் அதை எங்கே அரங்கேற்றலாம் என முருகனை வேண்டி நின்றபோது யாமிருக்க பயமேன் என்று சென்னி மலை முருகனாகிய மூலவர் தண்டாயுதபாணி எனது திருக்கோயிலில் அரங்கேற்றுக என்று முருகன் அசரீரியாக கட்டளையிட்டார். அதன்படி சென்னிமலை திருக்கோயிலில் ஐப்பசி மாதம் கந்த சஷ்டி அன்று அறுபடை வீட்டிற்கும் தனித்தனியாக கவசத்தை இயற்றினார்.

பாம்பன் சுவாமிகள் முருகன் அடியாராகத் திகழ முக்கிய கருவியாக இருந்தது கந்த சஷ்டிக் கவசம் என்றால் அது மிகையல்ல. பாம்பன் சுவாமிகளுக்கு இளம் பருவத்திலேயே முருகப் பெருமானை குறித்து நூல் ஒன்றை படிக்க ஆவல் ஏற்பட்டது. உடனே அப்பகுதியில் இருந்த புத்தகக் கடையில் கந்தசஷ்டி கவசத்தினை வாங்கி அதனை நாள்தோறும் 36 முறை பாராயணம் செய்தார்.

36-விளக்கம்

30- ஒரு மாதத்தின் நாட்கள் 30

6- ஆறுபடை வீட்டை குறிக்கும்

என அவரது வரலாறு கூறுகிறது. இதன் பின்னரே பாம்பன் சுவாமிகள் முருகப் பெருமானை நெருங்க வழி கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது .இதன் மூலம் கந்தசஷ்டி கவசத்தின் பெருமையை நாம் உணர முடிகிறது .

துன்பம் போக்கும்

ஒரு மனிதனுக்கு ஏற்படும் துன்பங்கள் மற்றும் நோய்கள் அனைத்தையும் குறிப்பிட்டு அவற்றை முழுமையாக நீக்க உதவும் பெருமைமிக்க கருவியாக திகழ்வது கந்தசஷ்டி கவசம் என்பதை அனுபவத்தினால் மட்டுமே உணர முடியும்.'

கந்தசஷ்டி கவசத்தை பாடுவோரை நோய் அண்டாது. மனம் வாடாது. குறைவின்றி பதினாறு பேறு பெற்று நெடுநாள் வாழ்வார்கள். நவக்கிரகங்களும் மகிழ்ந்து நன்மை அளித்திடும். என்பது நம்பிக்கை மட்டுமல்ல. அனுபவரீதியாக உணர்ந்த உண்மையும் கூட தேவராய சுவாமிகள் பாடிய பாடலில் ஒரு பாடல் .

வந்தவினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்குமே
செந்தில்நகர்
சேவகா என்று திருநீறு அணிபவர்க்கு
மேவ வாராதே வினை.

இந்த பாடல் தெய்வம் திரைப்படத்தில் வருகிறது .

கந்த சஷ்டி கவசம் குறிப்புகள்

1. கந்தசஷ்டி கவசம் தேவராய சுவாமிகளால் ஆறுபடை வீட்டிற்கும் இயற்றப்பட்ட கவசம் ஆகும்.
2. ஐப்பசி மாத கந்தசஷ்டி அன்று வேற்று மதத்தவர்களிடம் அனல் வாதம் புனல் வாதம் செய்து சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி அருளால் ஆறுபடை வீட்டிற்கும் ஸ்ரீ கந்தஷ்டி கவசத்தை இயற்றினார் தேவராய சுவாமிகள்.
3. இந்த கவசம் முருகனின் ஆறுபடை வீடுகளில் இரண்டாவது படை வீடாகிய திருச்செந்தூர் தளத்திற்குரிய கவசம் ஆகும். இந்த கவசத்தின் வரிகள் 244 ஆகும்.
4. சென்னிமலைக்கு மற்றொரு பெயர் சிரகிரி. அதனால் தான் சிரகிரி வேலன் சீக்கிரம் வருக என அழைக்கிறார் தேவராய சுவாமிகள்.
5. சாந்தானந்த சுவாமிகள் அருளிய கந்தகுரு கவசத்தில் சென்னிமலைக்குமரா சித்தர்க்கு அருள்வோனே என்று குறிப்பிடுகிறார்.
6. அருணகிரி நாதர். அருளிய திருப்புகழில் சகசிரிகிரிப் பதிவேளே என்று குறிப்பிடுகிறார்.

சென்னிமலை திருக்கோயில் குறிப்புகள்

1. இத்திருக்கோயில் சுமார் 3000 ஆண்டுகள் பழமைவாய்ந்த பிரார்த்தனை சிறப்புமிக்க மலைக்கோயிலாகும். மூலவர் தண்டாயுதபாணி கோலத்தில் அருள்பாலித்து வருகிறார்.
2. சித்தர்களில் ஒருவர் பின் நாக்கு சித்தர் வாழ்ந்து முக்தி அடைந்த திருத்தலம்.
3. ஸ்ரீ பாலன் தேவராயசுவாமிகளால் ஸ்ரீ கந்தசஷ்டி கவசம் அரங்கேற்றம் செய்யப்பட்ட திருத்தலம்.
4. வளர்பிறை சஷ்டி திருநாளில் விரதம் கடைப்பிடிப்போர் குழந்தை பேறு பெற்று வரும் சிறப்பு பெற்ற திருத்தலம்.
5. மூலவர் தினசரி அபிஷேகத்திற்கு எருதுகள் மூலம் படிவழியே திரு மஞ்சனம் கொண்டு செல்லும், சிறப்பு பெற்ற திருத்தலம்.
6. 12.12.1984 அன்று உலகமே வியக்கும் வண்ணம் 1320 திருப்படிகளில் இரட்டைமாட்டு வண்டி மலையேறி அதிசயம் நிகழ்ந்த திருத்தலம்.

கவிஞர் ச.மல்லிகா எழுதிய முருகன் மும்மணி மாலை புத்தகம் பக்கம் 76-77, 61-62 ம் பக்கத்தில் வரும் சரணம்

கற்றதெல்லாம் உன்
கந்த சஷ்டி தானப்பா
பாமாலை சூட பாட்டெழுத வைத்தவனே
போற்றி புகழ்வேன் பார்த்து மகிழ்வேன்–

பாடல் வரிகள் அருமையிலும் அருமை.

அருளாளர் அருளிச் செய்த மாலை

1. அண்ணாமலை முதலியார் - இரத்தினகிரி பாலமுருகன் மணிமாலை
2. குமாரசுவாமி புலவர் - இரட்டை மணிமாலை
3. பொன்னம்பலம் பிள்ளை - மாலை சித்திரகவி திருவிரட்டை மணிமாலை
4. இரத்தினம் - இரத்தினகிரி பாலமுருகன் மணிமாலை
5. வேதநாகன் - தொண்டை மானாற்று செல்வச் சந்நிதி முருகன் பாமாலை
6. கந்தப்ப அய்யர் - தயாநிதி மாலை
7. வைத்திலிங்கம் பிள்ளை - திரு சந்நிதி தோத்திரமாலை
8. சிதம்பர சுவாமிகள் - திருப்போரூர் முருகன் மாலை
9. சொக்கன் - நல்லூர் நான் மணிமாலை
10. கந்தப்ப தேசிகர் - தணிகை தயாநிதி மாலை
11. உருத்திரசாமி - சண்முகப் பாமாலை.
12. அண்ணாமலை முதலியார் - பாலமுருகன் பாமாலை.
13. கடுக்கன் தியாகராஜா தேசிகர் - திரு ஏரக நவரத்தினமாலை.
14. இராமலிங்க அடிகளார் - தெய்வ மணிமாலை.
15. செந்தமிழ்வாணி ச. மல்லிகா - முருகன் மும்மணிமாலை

தொகுப்பு: **வே. சந்திரசேகர்,**
மஞ்சக்கொல்லை

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

04.05.2020 ஈரோடு மாவட்டம் துடுப்பதி உள்ள லட்சுமி புரம் கிளையில் உள்ள 55 ஏழை எளிய செங்குந்தர்களுக்கு அரிசி மற்றும் முட்டை, மளிகை பொருட்கள், காய்கறிகள், J.S இளைஞர் படை மற்றும் ஈரோடு டாக்டர் கே கிருஷ்ணமூர்த்தி, ஈரோடு டாக்டர் செந்தில் என்கிற பாலகுமாரன் துடுப்பதி பள்ளிக்கூடத்தில் குடும்பத்தினர் மற்றும் லட்சுமிபுரம் கிளையுடன் இணைந்து வழங்கினர். இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், முன்னாள் மாவட்டத் தலைவர் வி.ஆர்.எம். அங்கப்பன், மாநில செயற்குழு உறுப்பினர் பெருந்துறை தோப்புபாளையம் V.கிருஷ்ணசாமி, வழக்கறிஞர் ஜெகதீஸ்குமார், வீரப்பன் சத்திரம் கிளை துணை தலைவர் பாலாஜி, தமிழ் புலவர் பெருமான் சேலம் ப.பாலன், Na.S.பிரதீப் செங்குந்தர், டி.எஸ்.ரகுபதி, டி.பி.ஜெயராஜ், டி.ஆர்.நவ பாரதி, ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் அவர்கள், டி.ஏ.அர்ஜுனன், திரு டி.எஸ்.பாலமுருகன், டி.பி.வரதராஜ், டி.எஸ்.அர்த்தனாரி, டி. ஏ. தங்கவேல் மற்றும் இளைஞர் படை டி.வி.மதியழகன் மற்றும் டி.என். சங்கர், லட்சுமிபுரம் கிளை சங்க நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

ஆரஞ்சு, திராட்சை, ஆப்பிள், முட்டைகோஸ், காரட், கைக்குத்தல் அரிசி அல்லது கேழ்வரகு, மீன், வெங்காயம், வெள்ளைப் பூண்டு, தக்காளி மேற்கண்ட பத்து உணவுகளும் (மீன்தவிர) தினமும் உணவில் இடம் பெற்றால் புற்றுநோய் விரைந்து குணமாகும். புற்றுநோய் வரவிடாமலும் தடுக்கலாம்.

ஆரஞ்சுப் பழத்தில் உள்ள டெர்பினஸ் என்ற பொருள் நுரையீரல் புற்றுநோயைத் தடுக்கும், திராட்சைச் சாறு உடலின் எந்தப் பகுதியிலும் புற்றுநோய்க் காரணிகள் தோன்றாமல் பார்த்துக் கொள்ளும்.

07-05-2020 ஈரோடு மாவட்டம் பவானியில் உள்ள குருப்பநாயக்கன் பாளையம் கிளையில் உள்ள 30 ஏழை செங்குந்தர்களுக்கு அரிசி மற்றும் காய்கறிகள், J.S இளைஞர் படையும் மற்றும் குருப்பநாய்க்கன் பாளையம் கிளையும் இணைந்து வழங்கினார். இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, Veecop Tex சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், வீரப்பன்சத்திரம் கிளை துணைத் தலைவர் பாலாஜி, தமிழ் புலவர் பெருமான் சேலம் பா. பாலன், Na.S. பிரதீப், R. வைரம் செங்குந்தர். வழக்கறிஞர் ஜெகதீஷ்குமார், குருப்பநாயக்கன்பாளையம் கிளை நிர்வாகிகள் தலைவர் K.A.வச்சரவேல், செயலாளர் P.விஸ்வநாதன், பொருளாளர் K.P. பிரகாஷ், துணைத் தலைவர் K.K.குணசேகரன், துணை செயலாளர் G.பாலதண்டாயுதபாணி, செயற்குழு உறுப்பினர் K.M.திருமூர்த்தி மற்றும் ஊர் செங்குந்தர் சொந்தங்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

28.04.2020 ஈரோடு மாவட்டம். சிவகிரியில் உள்ள 2 கிளையில் இருக்கும் செங்குந்தர் குல நெசவாளிகளுக்கு J.S இளைஞர் படை சார்பாகவும், சிவகிரி வடக்குபாளையம் கிளை மற்றும் சிவகிரி இளைஞர் கிளை சார்பாக 35 நபர்களுக்கு அத்தியாவசிய உணவு பொருட்கள் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, Veecoptex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்புபாளைம் V.கிருஷ்ணசாமி, தாண்டாம் பாளையம் T.K.வஜ்ரவேல், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார். வீரப்பன் சத்திரம் கிளை துணை தலைவர் பாலாஜி? தமிழ் புலவர் பெருமான் சேலம் ப.பாலன், Na.S.பிரதீப் செங்குந்தர், S.P.S.கமலக்கண்ணன், சிவகிரி வடக்குபாளையம் கிளை நிர்வாகிகள் மற்றும் சிவகிரி இளைஞர் அணி நிர்வாகிகள், இந்நிகழ்வில் கலந்துகொண்ட செங்குந்தர் பெருமக்கள் முன்னிலையில் உணவுப் பொருள் வழங்கப்பட்டது.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்..

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்..

1-5-2020 ஈரோடு மாவட்டம். வெள்ளோடு கிளையில் இருக்கும் செங்குந்தர் குல நெசவாளிகளுக்கு J.S இளைஞர் படை சார்பாகவும் மற்றும் வெள்ளோடு கிளை சார்பாகவும் 25 நபர்களுக்கு காய்கறிகள் உணவு பொருட்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, Veecoptex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், தாண்டாம் பாளையம் T.K.வஜ்ரவேல், தோப்புபாளையம் கிருஷ்ணசாமி, வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார், வீரப்பன்சத்திரம் கிளை துணை தலைவர் S.பாலாஜி? தமிழ் புலவர் பெருமான் சேலம் ப.பாலன், Na.S.பிரதீப் செங்குந்தர், கிளைத் தலைவர் L. இளங்கோ, செயலாளர் செ. கார்த்திகேயன், பொருளாளர் செ. தியாகராஜன், துணைத் தலைவர் ஏ.சு. சிதம்பரம், துணைச் செயலாளர் S.வரதராஜன், யு.உதயகுமார் பூந்துறை நிர்வாகிகள் மற்றும் ஊர் செங்குந்த பொதுமக்கள் முன்னிலையில் இந்நிகழ்வில் உணவுப் பொருள் வழங்கப்பட்டது.

போளூர் வட்டம், மாம்பட்டு எழுவாம் பாடி கிராமத்தில் திருவண்ணாமலை செங்குந்த மகாஜன சங்கம் சார்பில், 23 செங்குந்த ஏழை குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் வீதம் மாவட்ட தலைவர் V.சிவா, தலைமையில் தலைமைச்சங்க செயலாளர் சீனி.காரத்திகேயன் முன்னிலையில் எழுவாம்பாடி கிராம பொறுப்பாளர்களுடன் த.செ.கு.உறுப்பினர் S.அழகேசன் மாவட்ட பிரதிநிதி ஜெமினி நாகராஜன் பொருளாளர் V.ஆசைத்தம்பி ஆகியோர் உடனிருந்து வழங்கினார்கள்.

சமைக்க.. ருசிக்க..

அவல் கேசரி

தேவையானவை:

அவல்	- 2 கப்
சீனி	- 1 கப்
நெய்	- 1/2 கப்
முந்திரிப்பருப்பு	- 15-20
ஏலக்காய்	- 3 (பொடியாக்கி)
கேசரிப்பவுடர்	- 1 சிட்டிகை

செய்முறை: மேலே கூறிய எல்லாப் பொருட்களையும் எடுத்துத் தயாராக வைக்கவும். முந்திரிப்பருப்பை 2 டீஸ்பூன் நெய்யில் வறுத்து வைக்கவும். அவலை நன்றாக சிவக்க வறுத்து எடுத்துக் கொள்ளவும்.

அடுப்பில் சட்டியை வைத்து ஒரு தம்ளர் தண்ணீரில் கேசரிப் பவுடரை கலந்து கொதிக்க விடவும். தண்ணீர் கொதித்ததும் அவலைப் போட்டு வேக விடவும். அவல் வெந்து வரும் போது சீனியைச் சேர்க்கவும். சீனி நன்றாக சேர்ந்து இளகிய பதம் வந்ததும் நெய்யை சேர்த்து , நெய் பிரிந்து வரும் பதத்தில் ஏலக்காயைப் பொடியாக்கி, முந்திரிப்பருப்புடன் சேர்த்துப் போட்டு கிளறி இறக்கவும்.

மெல்லிய சூட்டுடன் பரிமாற சுவையாயக இருக்கும்.

கற்பூரவல்லி சட்னி

தேவையானவை:

கற்பூரவல்லி இலைகள்	- 15,
தேங்காய்த் துருவல்	- கால் கப்
பச்சை மிளகாய்	- 2
புளி	- சிறிது
பெருங்காயம்	- 1 சிட்டிகை
கடுகு, உளுந்தம் பருப்பு	- தலா கால் டீஸ்பூன்
உப்பு	- தேவைக்கேற்ப
எண்ணெய்	- அரை டீஸ்பூன்.

செய்முறை: கற்பூரவல்லி இலை களை நன்றாக கழுவி வைக்கவும். வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு பச்சை மிளகாய், கற்பூரவல்லி இலைகள், தனித்தனியாக சேர்த்து வதக்கி ஆற விடவும். அனைத்தும் நன்றாக ஆறிய பின் மிக்சியில் போட்டு பெருங்காயம், உப்பு தேங்காய்த் துருவல், புளியை சேர்த்து அரைத்துக் கொள்ளவும். அதே வாணலியில் மீதமுள்ள எண்ணெய் விட்டு சூடானதும் கடுகு, உளுந்தம் பருப்பு, கறிவேப்பிலை போட்டு தாளித்து சட்னியில் சேர்த்து கலந்து பரிமாறவும்.

கற்பூரவல்லி காரமானது என்பதால் தேவைக்கேற்ப மிளகாயைக் குறை வாகப் பயன்படுத்தவும். தேங்காய்த் துருவல் சேர்ப்பதற்குப் பதிலாக சிறிது வெல்லம் சேர்த்து அரைக்கலாம்.

30-04-2020 ஈரோடு மாவட்டம். விஜய மங்கலம் கிளையில் இருக்கும் செங்குந்தர் குல நெசவாளிகளுக்கு J.S இளைஞர் படை சார்பாகவும் மற்றும் விஜயமங்கலம் கிளை சார்பாகவும் 23 நபர்களுக்கு காய்கறிகள் உணவு பொருட்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி, Veecoptex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்புபாளையத்தை சேர்ந்த V.கிருஷ்ணசாமி, தாண்டாம் பாளையம் T.K.வஜ்ரவேல், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார். வீரப்பன்சத்திரம் கிளை துணை தலைவர் S.பாலாஜி? தமிழ் புலவர் பெருமான் சேலம் ப.பாலன், இளைஞரணி துணை அமைப்பாளர் ராமகிருஷ்ணன் Na.S.பிரதீப் செங்குந்தர், V.N.அர்தனாரி முதலியார் வீர சங்கிலிமுருகேசன், V.R.கோபால கிருஷ்ணன், V.M.பெருமாள், V.S. ஆனந்த முருகன், V.K.வெங்கடாசலம், V.J.சீனிவாசன் கிளை நிர்வாகிகள் மற்றும் ஊர் செங்குந்த பொதுமக்கள் முன்னிலையில் உணவுப் பொருள் வழங்கப்பட்டது.

பழையபேட்டை அழகப்புரம் நெசவாளர்கள் 35 நபர்களுக்கு செங்குந்தர் மகாஜன சங்கத்தின் அமைப்பு செயலாளர் சோலை.மணியன் அவர்கள் நிவாரண பொருள் வழங்கினார். அவர்களுடன் இளைஞரணி தலைவர் கேபிள் ராஜ் (எ) அங்கப்பன், செயலாளர் பழையபேட்டை செந்தில், பொருளாளர் MAPP A.பாலசுந்தரம், A.ஜவஹர், C.ராமசந்திரன், N.அருணா, சொ.மீனாட்சிசுந்தரம், போட்டோ மணி, ஆட்டோ மூக்கையா, பிச்சையா, சங்கரலிங்கம், ரமேஷ் பாண்டி, முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

04.05.2020 ஈரோடு மாவட்டம் துடுப்பதி பகுதி உள்ள 70 ஏழை எளிய செங்குந்தர்களுக்கு அரிசி, முட்டை, மளிகை பொருட்கள், காய்கறிகள் ஆகியவை J.S இளைஞர் படை மற்றும் துடுப்பதி செங்குந்தர்கள் இணைந்து வழங்கினர். இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, veecop tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், முன்னாள் மாவட்டத் தலைவர் வி.ஆர்.எம்.அங்கப்பன், மாநில செயற்குழு உறுப்பினர் பெருந்துறை தோப்புபாளையம் V.கிருஷ்ணசாமி, வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார், வீரப்பன்சத்திரம் கிளை துணை தலைவர் பாலாஜி? தமிழ் புலவர் பெருமான் சேலம் ப.பாலன், Na.S.பிரதீப் செங்குந்தர், பெரிய தனக்காரர் டி.எஸ். கிருஷ்ணசாமி, நல்லசிவம், டி.எஸ்.எஸ். அரிசி மண்டி அவர்கள், ஏ.சி.சுப்பிரமணியம், டி.ஜி.குப்புராஜ், டி.எம்.கந்தசாமி, தமிழ்நாடு வெள்ளிங்கிரி, நவ பாரதி ஒன்றிய கவுன்சிலர், கார் பாலு, ரகுபதி அவர்கள், மகாதேவன், மனோகரன் அவர்கள் மற்றும் துடுப்பதி செங்குந்த சங்க நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

மருத்துவத் தகவல்கள்

வெயிலுக்குப் பயந்து ஏசி அறைகளில் புகுந்துகொண்டால் தண்ணீர் அதிகம் குடிக்கத் தேவையில்லை என்று நீங்கள் நினைத்தால், அது தவறு. ஏ.சி. வாசிகள் தினமும் ஒரு லிட்டர் நீராவது மற்றவர்களைவிட அதிகம் குடிக்க வேண்டும் என்கிறார்கள் டாக்டர்கள்.

உருளைக்கிழங்கு சிப்ஸ் புற்று நோயை அதிகரிக்கும். எனவே, அவித்த உருளைக்கிழங்கை மட்டுமே உணவில் சேர்க்கவும்.

புதுச்சேரி மாநிலம் நெட்டப்பக்கம் பகுதியில் புதுவைச் செங்குந்தர் கல்வி நலச் சங்கம் சார்பில் கொரோனா தொற்று ஊரடங்கு காலத்தில் பாதிக்கப்பட்ட மிகவும் கஷ்ட நிலையிலுள்ள நலிவடைந்த பொது மக்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு 10 கிலோ அரிசி நிவாரணமாக தலைவர் V.P.இராமலிங்கம் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது. செயலாளர் ப.இராஜாக்கண்ணு, பொருளாளர் க.தனகோடி, உள்ளூர் தலைவர் NAB, த.இராமசாமி, ப.இரத்தினவேல், R.T.கண்ணன் மற்றும் செங்குந்தர் சங்க நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அப்சர்வேட்டரி பகுதியில் தலைமை சங்க செயற்குழு உறுப்பினர் S.R.தங்கராஜ் நிவாரண பொருள்கள் வழங்கினார்.

ஈரோடு மாவட்டம் மொண்டிபாளையம் பூதபாடி கிளையில் உள்ள மொத்தம் 45 ஏழை எளிய செங்குந்தர்களுக்கு அரிசி. மற்றும் காய்கறிகள். J.S இளைஞர் படை மற்றும் மொண்டிபாளையம் பூதபாடி கிளையுடன் இணைந்து வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, Veecop tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்புபாளையத்தை சேர்ந்த V.கிருஷ்ணசாமி, தாண்டாம்பாளையம் T.K.வஜ்ரவேல், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார், வீரப்பன்சத்திரம் கிளை துணை தலைவர் பாலாஜி, தமிழ் புலவர் பெருமான் சேலம் ப.பாலன், Na.S.பிரதீப் செங்குந்தர், ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் திரு.திவ்யநாதன், மொண்டிபாளையம் பூதபாடி கிளை தலைவர் சுரேஷ், செயலாளர் ரவிசங்கர், பொருளாளர் கவின்குமார், துணைத் தலைவர் ஆறுமுகம், துணை செயலாளர் பாலமுருகன், மாவட்ட பிரதிநிதி சசிகுமார், பிரகதீஸ்வரன், செந்தில்குமார், ரஜினிகாந்த், பழனிசாமி, கிளை சார்ந்த நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

29.04.2020 ஈரோடு மாவட்டம். சலங்கபாளையம் கிளையில் இருக்கும் செங்குந்தர் குல நெசவாளிகளுக்கு J.S. இளைஞர் படை சார்பாகவும் மற்றும் சலங்கபாளையம் கிளை சார்பாகவும் அத்தியாவசிய உணவு பொருட்கள் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி? Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார், வீரப்பன் சத்திரம் கிளை துணை தலைவர் பாலாஜி, தமிழ் புலவர் பெருமான் சேலம் ப.பாலன், Na.S.பிரதீப் செங்குந்தர், சலங்கபாளையம் கிளையைச் சார்ந்த தலைவர் எஸ்.பி.செங்கோட்டையன், செயலாளர் கே.பி.ராமலிங்கம், பொருளாளர் ஆர்.சண்முகம், துணைத்தலைவர் எம்.கருணாநிதி, துணை செயலாளர் தமிழ்செல்வன், செயற்குழு உறுப்பினர் கே.சீனிவாசன், கிளை சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

'காட்மேன்' இணைய தொடரை

தடை செய்!

அமைப்புகள் கொந்தளிப்பு;
அதிரடியில் இறங்குமா அரசு

'காட்மேன்' இணையத் தொடரை தடை செய்யவேண்டும்!

ஜீ டிவி-யின் ஜீ5 என்கிற ஓடிடி தளத்தில் வரப்போகும் காட்மேன் என்ற இணைய தொடரின் டிரெய்லர் வெளியாகியுள்ளது. அத்தொடர் வரும் ஜூன் 12 முதல் ஒளிபரப்பாகும் எனக் கூறப்படுகிறது. அதில் இந்து மதத்தையும், குறிப்பிட்ட சாதியையும் இழிவுபடுத்தும் வகையில் காட்சிகளும் வசனங்களும் இடம்பெற்றிருக்கிறது. தணிக்கைக்கு உட்படாத, இதுபோன்ற தொடர்களை அனுமதித்தால், எதிர்காலத்தில், பிற மதம் மற்றும் சாதிகளையும் இழிவுபடுத்தும் வகையிலும், தேசவிரோத கருத்துக்களை பரப்பும் வகையிலும், தொடர்கள் வெளியாக வாய்ப்பாகிவிடும் என, பல்வேறு அமைப்புகளும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

31-05-2020 நாள் வெளியான தினமலர் நாளிதழில் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத் தலைவர் அவர்களின் கண்டனப் பேட்டியும் வெளியிடப்பட்டுள்ளது.

K.P.K.செல்வராஜ், தலைவர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்:

திரைப்படங்களுக்கு தணிக்கை துறை இருப்பது போல், சின்னத்திரை, 'ஆன்லைன்' திரைப்படங்களை வெளியிடுவதற்கும் தணிக்கை துறை ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம், இதுபோன்ற பிரச்னைகளை தவிர்க்கலாம். திரைப்படங்களை பார்ப்பவர்களுக்கு கேளிக்கை வரி விதிப்பது போல், வெப் சீரியல்கள் பார்ப்பவர்களுக்கும் கேளிக்கை வரி விதிக்கப்பட வேண்டும். இதன் மூலம் அரசுக்கும் வருவாய் கிடைக்கும். திரைப்படங்களை விட ஆபாச காட்சிகள், வசனங்கள் அதிகமாக இதுபோன்ற ஆன்லைன் படங்களில் வருகின்றன. இதை வேரோடு களைய வேண்டும். சர்ச்சைக்குரிய ஆன்லைன் சீரியல் காட்சிகளை நீக்க வேண்டும். அதற்காக அவர்கள் மன்னிப்பு கோர வேண்டும்.

உங்கள் பக்கம்

அன்பும், பண்பும், ஆன்மீகமும், வீரமும், விவேகமும் நிறைந்த செங்குந்த சொந்தங்களுக்கு, வணக்கம்.

உலகின் பல நாடுகளுடன், பல்வேறு செயல்களில் போட்டி போட்டுக் கொண்டு முதல் 10 இடங்களில் நமது இந்தியா முன்னேறி வந்து கொண்டிருப்பது பெருமிதமாக இருக்கிறது, பாராட்டுக்கள்...!

ஆனால், 'கொரோனா' பாதிப்பிலும் முன்னேறி வந்து கொண்டிருப்பது கவலை அளிக்கிறது. நமது அரசு தீவிரமாக வைரஸைத் தடுப்பதற்கு பாடுபட்டுக் கொண்டிருந்தாலும் மக்கள் ஒத்துழைப்புக் கொடுக்காததனால் வைரஸ் பரவி, பெருகிவிட்டது.

மக்கள் சுயக்கட்டுப்பாட்டுடன் அரசு வழிகாட்டுதல்படி நடந்து கொண்டால் முற்றிலுமாக வைரஸ் பரவுவதைத் தடுத்துவிடலாம். நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்வது நம் கையில்தான் உள்ளது.

கொரோனாவால் வாழ்க்கையும், வருமானமும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசும், பொதுமக்களும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகிறார்கள். இன்னமும் மனித நேயம் தேயவில்லை என்பதை இது காட்டுகிறது.

இந்த நற்பணியில் நம் சமுதாயப் பெருமக்களும் தங்களால் இயன்றளவு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்து வருகிறார்கள். இது பொதுமக்களிடையே நமது சமுதாயத்தைப் பற்றி உயர்வான கருத்தை மேலும் அதிகரித்திருக்கிறது.

தலைமைச் சங்க அறிவிப்புகள் மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதன்படி தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினர்கள் செயலாற்றி தங்களது சங்கத்திற்கு பெருமை சேருங்கள்.

வெற்றி பெற்றவர்கள் மௌனமாக இருப்பது அடக்கத்தின் அடையாளம். ஆர்ப்பாட்டம் இன்றி அடக்கமாக இருந்தால், சிலர் அவர்களின் பலம் தெரியாமல் கூக்குரல் இடுவார்கள். அவர்களுக்காக இதோ ஒரு குட்டிக் கதை.

கோவில் யானை ஒன்று நன்றாகக் குளித்துவிட்டு நெற்றியில் பட்டை தீட்டிக் கொண்டு சுத்தமாக வந்து கொண்டிருந்தது. ஒரு ஒடுக்கமான பாலத்தில் அது வரும்போது எதிரே சேற்றில் குளித்துவிட்டு ஒரு பன்றி வாலை ஆட்டிக் கொண்டே வந்தது. யானை ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்று

அதற்கு வழிவிட்டது. அந்தப் பன்றி, எதிரே இருந்த இன்னொரு பன்றியிடம் பார்த்தாயா, அந்த யானை என்னைக் கண்டு பயந்துவிட்டது! என்று சொல்லிச் சிரித்தது.

அந்த யானையைப் பார்த்து இன்னொரு யானை, அப்படியா நீ பயந்து விட்டாயா? என்று கேட்டது. அதற்கு கோயில் யானை, நான் தவறி இடறிவிட்டால் பன்றி நசுங்கிவிடும். மேலும், நான் சுத்தமாக இருக்கிறேன். பன்றியின் சேறு என் மேல் விழுந்து நானும் அசுத்தமாகி விடுவேன் இந்தக் காரணங்களால், நான் ஒதுங்கிக் கொண்டேன் என்றது.

தன் பலம், பலவீனம் தெரிந்தவர்கள் அடக்கத்தில் சிறந்தவர்களாக இருப்பார்கள் என்பதற்கு இக் குட்டிக் கதை எடுத்துக்காட்டாகும்.

தாய்க்குப் பின் தாரம் என்பார்கள். இருவரையும் ஒருங்கே இழப்பது என்பது எவ்வளவு வேதனை தரக்கூடிய நிகழ்வு.

நமது பொதுச் செயலாளர் திரு. R.P.குமரகுருபரன் அவர்களின் தாயாரும், மனைவியும் அடுத்தடுத்து ஒரே வாரத்தில் இயற்கை எய்தியிருப்பது அவருடைய குடும்பத்தாருக்கு மட்டுமல்லாது, நமது சங்க உறுப்பினர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவர்களுடைய ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

மீண்டும் சந்திப்போம்
பிரியமுடன்..

KPK செல்வராஜ்

செங்குந்தர்

எண்ணங்கள்.. ஆலோசனைகள்.. சொந்தக் கருத்து..

ஏப்ரல் மாத மித்திரன் இதழ் காற்றின் வழியாக கைகளில் கிடைக்க பெற்றோம் மகிழ்ச்சி. வியாதியை விட பயங்கரமானது பயமே என்பதை பக்குவமாக தலைவர் மடலில் சிறப்புடன் சொல்லபட்டது அருமை.

சிவன்மலையில் நம் குல கடவுளின் அரசாட்சியும் உத்தரவு பெட்டி வழிபாட்டு முறையும் அறிந்து மனம் நெகிழ்ந்துவிட்டது தலவரலாறு சொல்லும் அழகே அழகு தான்.

தமிழக அரசிடம் நிவாரண கோரிக்கை மனு மற்றும் மனித நேய கடிதம் காலத்திற்கு ஏற்ற நல்ல செயல் பாடுகள் மனதார பாராட்டுவோம்.

அண்ணல்தங்கோவின் வரலாறு கட்டுரை நம் குலத்திற்கு சிறப்பு. மகளிர் பக்கம் மற்றும் மருத்துவ பகுதி கோடைகால சிறப்பு பகுதியா என எண்ண வைத்தது.

உங்கள் பக்கத்தில் அன்னதான மகிமையை கர்ணனுடன் ஒப்பிட்டு சொன்னது நல்ல உதாரணம்.

- அ.சுந்தரேஸ்வரன், தென்காசி.

❧❧❧

சிவன்மலை ஆன்மீக கட்டுரை மிகவும் பெருமை சேர்க்கும். சிவன் மலையின் சிறப்புகளை பட்டியலிட்டு கூறுகின்றார் கட்டுரை ஆசிரியர். தல வரலாறு கோயில் சிறப்புகள் அருமை. திருநள்ளாறு சனிபகவான் கோயில் செல்வதும் சூரியனார் கோவில் செல்வதும் சிவன்மலை செல்வதும் ஒன்றாகும் என்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஆண்டவர் உத்தரவுப் பெட்டி பக்தர்கள் கனவுப் பொருள் வைக்க முருகன் கூறுவது மனது நெகிழ்வு அடைந்தது.

கொரோனாவுக்காக வெள்ளி வேல் வைத்து வழிபாடு செய்து வருகின்றனர் என்பது மெய்சிலிர்க்க வைக்கிறது. ஆன்மீக பணி சிறக்க வாழ்த்துக்கள். முருகன் அருள் அனைவரும் கிடைக்கும் என உறுதி கொள்வோம்.

- தி.க.வேல்முருகன், திட்டக்குடி.

❧❧❧

வாரியார்தாசன் அவர்கள் எழுதிய தண்டியடிகள் நாயனார் ஆன்மீகக் கட்டுரை அருமை. தண்டியடிகள் திருவாரூரில் அவதாரம் செய்தார். ஆண்டவனுக்கு தனக்கு கண் தெரியாத போதும். தொண்டு செய்து வந்தார். சமணர் வாதம். தனக்கு கண் வரும் உங்களுக்கு கண் போகும் என்றார். சிவனை வணங்கினார். அவர் சொல் பழித்து இவருக்கு கண் வந்தது. சமணர் கண்போனது மன்னன் வியந்து போனான். அடிகளை வணங்கிவிட்டு சமணரை வெளியேறும்படி செய்தார். அடிகளின். பெருமை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன் நன்றி கோடி.

- கே.ஆளவந்தான், சின்னசேலம்.

❧❧❧

செங்குந்த மகாஜன சங்க செயற் குழு உறுப்பினர்கள் பட்டியலை அழகு வண்ணத்தில் புகைப்படங்கள்.. அலைபேசி எண்களுடன் தொகுப் பாய் வழங்கும் பெருமை மித்திரன் இதழுக்கு பெருமை. நல்ல பயனுள்ள தொகுப்பு. சிறந்த தொகுப்பு.

- V.இராஜமருதவாணன், திட்டக்குடி.

தலைவர் அவர்கள் ஆணைப்படி நம்மவர்கள் ஊர் ஊராய் பற்பல இடங்களில் கொரானா நிவாரண உதவிகள் தொடர்ந்து வழங்கும் பணிகள், புகைப்படங்கள் தொகுப்பு கண்ணையும் கருத்தையும் ஈர்த்தது மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி வணக்கம்.

- வேல்.வெற்றிவேந்தன், திட்டக்குடி.

ஏப்ரல் மாத செங்குந்தமித்திரன் உங்கள் பக்கம் கட்டுரையில் அன்னதானம் செய்வதற்கு தாங்கள் சரியான விளக்கங்கள் கொடுத்து கர்ணனை உதாரணம் காட்டி அன்னதானத்திற்கு பெருமையை எங்களுக்கு கூறிய தெ.செ.ம. சங்கத்தின் தலைவருக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- செ.மோகன்,

தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினர்,
இராமநாதபுரம்.

மிக நேர்த்தியாக வண்ணமயமாக இருக்கிறது சென்ற மாத இதழ்.

- கு.பா.இரவீந்திரன்,

முதல் குரல் ஆசிரியர், சென்னை.

ஏப்ரல் மாத செங்குந்த மித்திரன் மாத இதழின் மேல்அட்டையில் கு.மு.அண்ணல் தங்கோ அவர்களின் படம் இடம் பெற்றிருப்பது அருமை அவர் விடுதலை போராட்ட வீரர் மட்டுமல்ல பன்முகம் கொண்டவராக திகழ்ந்துள்ளார் என்றும் மேலும் நமது சமுதாய சொந்தம் என்று தெரியவந்துள்ளது மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. மேலும் தலைவர் மடல் உங்கள் பக்கம் கருத்துக்கள் யாவும் சிறப்பு அம்சமாக உள்ளது.

- து.தணிகாசலம்,

தலைமை சங்க செயற்குழு உறுப்பினர்,
காஞ்சிபுரம்.

ஏப்ரல் மாத செங்குந்த மித்திரன் இதழ் மிகச் சிறப்பாக தயாரித்த மாநிலத் தலைவர் K.P.K.செல்வராஜ் அவர்களுக்கு அன்பு கலந்து பாராட்டுகள்.

- S.M.செந்தில்,

மாவட்டத் தலைவர் (கள்ளக்குறிச்சி),
தேவபாண்டலம்.

மித்திரன் ஏப்ரல் மாத மின் இதழ் அருமை அற்புதம். பாராட்ட வார்த்தைகள் இல்லை.

- வெ.தண்டபாணி, திண்டுக்கல்.

காலத்திற்கேற்ற திருக்குறள் கற்பனை வளத்தோடும் கருத்து செறிவோடும் கூடிய ஓவியத்தை வரைந்த சிவன்மலை பித்தன் அவர்களுக்கு பாராட்டுக்கள்.

- K.பூவதி,

இடுவாய்

09.05.2020 ஈரோடு மாவட்டம், D.G புதூர் கிளை உள்ள 45 ஏழை எளிய செங்குந்தர்களுக்கு அரிசி மற்றும்? மளிகை பொருட்கள். J.S இளைஞர் படை மற்றும் T.G புதூர் கிளையும் இணைந்து கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், சத்தியமங்கலம் லோகநாதன், மாநில வழக்கறிஞர் அணி செந்தில்நாதன், மாநில செயற்குழு உறுப்பினர் பெருந்துறை தோப்புபாளையம் கிட்டு என்கிற V.கிருஷ்ணசாமி, வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ் குமார், ஈரோடு மேற்கு கிளை செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், பெரியவலசு பாக்ஸர் கிருபா. Na.S.பிரதீப் செங்குந்தர், கிளை தலைவர் வேலுச்சாமி, செயலாளர் நாராயணசாமி, பொருளாளர் தங்கராஜ், துணைத்தலைவர் மாரிச்சாமி, துணைப் பொருளாளர் கணேஷ்குமார், மாவட்ட பிரதிநிதி சீனிவாசன், ஊர் நாட்டாமை சின்னப்ப முதலியார், எழில் செல்வராஜ், ஆறுமுகம், மருதாசலம் மற்றும் கிளை சங்க நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

பாரதிதாசன்
பொன்மொழிகள்

- கலையைப் பரிகசிக்கக் கூடாது. அவற்றை வளர்க்க வேண்டும்.
- கலை உயர்ந்ததாய் இருக்க வேண்டுமானால், கலைக்குக் காரணமான எண்ணங்களும் உயர்ந்ததாய் இருக்க வேண்டும்.
- பாடும்போது பாடல்களில் பாவமும் இசையும் மட்டும் வெளிப்பட்டால் போதாது. கருத்தும் விளக்கமுற வேண்டும்.
- நன்றாய் அமைந்த பாடல் தன் கருத்தின் வழி மனிதனைத் திருப்புகிறது. இதுதான் பாட்டினிடத்தில் உள்ள குறிப்பிடத் தக்க மேன்மை.

செய்யாறு குறிஞ்சி குகன் மேட்ரிமோனி

(செய்யாறு வட்டச் செங்குந்தர் நலவாழ்வு சங்கத்தால் இயக்கப்படுகிறது)

(செங்குந்தர் திருமண தகவல் மையம்)

குறிஞ்சி குகன் நிலையம்

15/2, கோபால் தெரு, கிருபானந்தவாரியார் நகர்,
ரேணு மஹால் அருகில், செய்யாறு – 604 407. தி.மலை மாவட்டம்.
மேலும் தொடர்புக்கு: **04182 - 222784, 89739 32751, 94871 07254**

www.cheyyarkurinjikuganmatrimony.com

E-mail : sengunthars manamaalai@gmail.com

அன்புள்ள சொந்தங்களே,

தங்கள் வீட்டில் திருமணத்திற்குக் காத்திருக்கும் வரனின் முழு ஜாதக விபரத்துடன் (Bio Data) + புகைப்படத்தை (Post Card Size) இணைத்து நேரில் (அல்லது) ஆன்லைனில் (Online) பதிவு செய்யுங்கள். பொருத்தமான வரன் உள்ளது. வரனின் திருமணம் முடியும் வரை பதிவு நீடிக்கும்.

திருமணம் நடந்து முடிந்த உடன் நீக்க தகவல் தெரிவிக்கவும்.

சேவைக் கட்டணம்: ரூ. 1000/- மட்டுமே!

CHEYYAR TALUK SENGUNTHAR WELFARE SOCIETY payable - CHEYYAR
என்ற பெயருக்கு DD (or) Postal Money Order (or) Indian Overseas Bank (IOB),
Cheyyar Branch, A/c No. 189101000007819 IFSC CODE: IOBA0001891
NEFT/IMPS Banking ஏதாவது ஒன்றிற்கு சேவை கட்டணம் அனுப்பலாம்.

வரன் பார்க்க வாங்க:
பகல் 10:00 - 1:00 மாலை 4:00 - 7:00 மணி வரை
விடுமுறை: பிரதி சனிக்கிழமை மற்றும் நமது பண்டிகை நாட்கள்.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

13.05.2020 ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி கிளை உள்ள 100 ஏழை எளிய செங்குந்தர்களுக்கு அரிசி மற்றும்? காய்கறி J.S இளைஞர் படை மற்றும் கவுந்தப்பாடி கிளையும் இணைந்து கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், ஈரோடு அரசு (G.P) வழக்கறிஞர் M.அருள்முருகன், K.P ராமலிங்கம், மாநில செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்புபாளையம் V.கிருஷ்ணசாமி, தாண்டாம்பாளையம் T.K.வஜ்ரவேல், வழக்கறிஞர் ஜெ.கே என்கிற ஜெகதீஸ்குமார், ஈரோடு மேற்கு கிளை செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், பெரியவலசு பாக்ஸர் கிருபா, Na.S.பிரதீப் . R.V.T ரவி செங்குந்தர், கவுந்தப்பாடி பகுதியைச் சார்ந்த பரஞ்சோதி ராஜ்குமார், அழகுமணி, காளியப்பன், ரமேஷ், உத்திரமூர்த்தி, ரவி, தர்மகர்த்தா குமாரவேல், கிளை தலைவர் சீனிவாசன், செயலாளர் காளீஸ்வரன், பொருளாளர் சுந்தரவடிவேல், துணைத்தலைவர் பழனிவேலு, துணைச் செயலாளர் கொளந்தைசாமி, மாவட்ட பிரதிநிதி கருணாம்பதி மற்றும் கிளை சங்க நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

மருத்துவத் தகவல்கள்

நம்மைத் தாக்கும் பல கிருமிகள் நம் கைகளைத்தான் முதலில் தஞ்சமடைகின்றது. கையிலிருந்து வாய், மூக்குத் துவாரம் வழியாக நமக்குள் புகுந்துவிடுகிறது. எனவே, நேரம் கிடைக்கும் போதெல்லாம் கை கழுவி சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். சளி, இருமல் என்று எந்த நோயும் உங்களைத் தாக்காது.

கல்லீரலை மிகக் கடுமையாகப் பாதித்து மரணத்தை விளைவிப்பதில் கணிசமான பங்கு ஹெபடைடிஸ்–சி–க்கு உண்டு. ஏதோ ஒரு காரணத்தினால் இரத்தம் ஏற்றவேண்டிய கட்டாயம் ஏற்படும்போது ஹெபடைடிஸ்=சி வைரஸ் ரத்தத்தில் உள்ளதா என்பதை அவசியம் கண்டறிய வேண்டும்.

நெல்லையில் உலக மகளிர் தின விழா

திருநெல்வேலி பழையபேட்டையில் மார்ச் 8 உலக மகளிர் தினத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள், மருத்துவ முகாம் மற்றும் பேரணி நடந்தது. ராஜேஸ்வரி தலைமை வகித்தார். ராஜலட்சுமி முன்னிலை வகித்தார். மீனா, லக்ஷிதா வரவேற்றனர். ராஜம்மாள் இறைவணக்கம் பாடினார். பொற்கொடி சங்க உறுதிமொழி வாசித்தார்.

மாநகர செங்குந்தர் மகாஜன சங்கத் தலைவர் மாணிக்கவாசகம் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து பரிசளிப்பு விழா நடந்தது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கனரா வங்கி மேலாளர் பிச்சம்மாள் பரிசு வழங்கிப் பாராட்டினார். விழாவில், மாநகர செங்குந்தர் மகளிரணி தலைவர் ராஜேஸ்வரி, செயலாளர் அமிர்தம், பொருளாளர் மீனா, துணைத் தலைவர்கள் பொற்கொடி, அருணாதேவி, துணைச் செயலாளர்கள் ராமலட்சுமி, லட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிகளை கற்பகசுபா, வள்ளி, முத்து பழனி தொகுத்து வழங்கினர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை செங்குந்தர் மகாஜன சங்கம், பாவேந்தர் பாரதிதாசன், சமுதாயக் கல்விக் குழுவினர் செய்திருந்தனர்.

8-3-20 ஞாயிறு காலை 10 மணியளவில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மகளிரணி சார்பாக உலக மகளிர் தின விழாவை முன்னிட்டு Dr.S.சுகுமார் அவர்களின் இலவச பல் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. 54 பயனாளிகள் பயனடைந்தனர். பற்பசை மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டன.

நாமக்கல் கவிஞர் இல்லத்தில் நடந்த விவேகானந்தர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சியில்
சோழாஸ் P.ஏகாம்பரம் அவர்களுக்கு விவேகானந்தர் விருதினை சேலம்
ஸ்ரீ ராம கிருஷ்ணா ஆஸ்ரமத்தின் அரங்காவலர் தாரை அ.குமரவேலு வழங்குகிறார்.
அருகில் Dr.R.குழந்தைவேலு, முனைவர் T.M. மோகன் ஆகியோர் உள்ளனர்.

தாரை டிராவல்ஸ் & டூர்ஸ்

தினசரி: சென்னை, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி

சுற்றுலா மற்றும் ஆன்மீக யாத்திரைக்கு
சொகுசு பேருந்துகள். இரயிலில் (Full Compartment)
ஏற்பாடு செய்து தரப்படும்.

Domestic and International
சுற்றுலாவுக்கு விமான டிக்கெட்கள்
புக் செய்து தரப்படும்.

சென்னை
"தாரை இராஜ மாளிகை" # 1, லோகநாதன் நகர், 3 வது தெரு,
100 அடி சாலை,சூளைமேடு, சென்னை - 600094
போன் : 044 - 23612016 செல்: 95001 23403 - 04 -05 -06 -07 -08

சேலம்
ஜுஹா ரெஸிடென்சி, சரவணா பேக்கரி,
புதிய பஸ் நிலையம், சேலம். போன்: 0427-2445055
செல்: 95001 23401 - 02 - 09

தாரை சிட்ஸ் (பி) லிமிடெட்

THARAI CHITS (P) LTD,

தாரை 'திரு' மாளிகை 36, எல்.ஐ.சி காலனி, சேலம்-4. ✆ **0427-4042845, 4972846**

ரூ. 2,00,000 (இரண்டு லட்சம்) முதல் ரூ. 50,00,000 (ஐம்பது லட்சம் வரை) நடத்தப்படும்.

மேலாண்மை இயக்குனர் பாவலர் Rtn. MPHF. P.P. **தாரை அ. குமரவேலு,** M.A., M.Phil.,

சேலம் நிர்வாகி — **தாரை கு. இராஜகணபதி,** B.E., M.B.A.,
சென்னை நிர்வாகி — **தாரை கு. திருஞானசம்பந்தம்,** B.E., M.B.A.,
இயக்குனர் — **தாரை கு. தமிழ்ச்செல்வம்,** B.E., M.B.A.,

தாரை மெடிக்கல் ஏஜென்சி

Ph :0427-4042847

(மொத்த மருந்து விற்பனை நிறுவனம்)

தாரைப்புள்ளிக்காரர் இல்லம், 11/1, பிருந்தாவன், 7வது குறுக்கு தெரு,
வசந்தம் ஹோட்டல் அருகில், ஃபேர்லேண்ட்ஸ், சேலம்-636 004.

இராமநாதபுரம் மாவட்டம், ரெகுநாதபுரம் கிளையின் சார்பாக கொரோனா நிதி உதவி ரெகுநாதபுரம் உறவின் முறையின் நிதியில் இருந்தும், கடலூர் மாவட்டம், திட்டக்குடி செயற் குழு உறுப்பினர் P.T.ராஜன் நிதியில் இருந்தும் சுமார் 270 நபர்களுக்கு அரிசி வழங்கப்பட்டது. இதில் செயற்குழு உறுப்பினரும் கிளையின் தலைவர் K.குணசேகரன், மாநில இளைஞர் அணியின் துணை அமைப்பாளர் சு.முத்துமாரி, ஊர் தலைவர் ஆதிமுத்து, செயலாளர் தேவதாஸ், பொருளாளர் சந்தானம், சங்க நிர்வாகிகள் முத்துச்சாமி, கதிரேசன், ஒன்றிய கவுன்சிலர் நாகநாதன், திலீப்குமார், மணிமேகலை மற்றும் இளைஞர் அணியினர் கலந்து கொண்டு கொரோனா நிதி உதவிகள் வழங்கினார்கள்.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

29-04-2020 அன்று ஈரோடு மாவட்டம், செந்தாம் பாளையம் கிளையில் இருக்கும் செங்குந்தர் குல நெசவாளி களுக்கு J.S இளைஞர் படை சார்பாகவும் மற்றும் செந்தாம் பாளையம் கிளை சார்பாக அத்தியாவசிய உணவு பொருட்கள் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி Veecop tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார், வீரப்பன் சத்திரம் கிளை துணை தலைவர் பாலாஜி? தமிழ் புலவர் பெருமான் சேலம் ப.பாலன், Na.S.பிரதீப் செங்குந்தர் மற்றும் செந்தாம்பாளையம் கிளையைச் சார்ந்த பாலு என்கிற மோகனசுந்தரம், பூபதிராஜன், கணேசன், மாரியப்பன், சத்தியமூர்த்தி, பூபதி, பழனிசாமி, மருதாச்சலம். மெத்தை செல்வம், சுந்தர், சபரி, பிரபு, காசிலிங்கம், மாரிமுத்து மற்றும் கிளை சங்க உறுப்பினர்கள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கொரோனா ஊரடங்கு காலத்தில் சங்கரன்கோவில் நகரில் வாழ்வாதாரம் இழந்து தவித்து வருகின்ற செங்குந்தர் குல மக்களில் 3500 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக நலத்திட்டங்கள், சங்கரன்கோவில் செங்குந்தர் பேரிடர் மீட்பு குழுவோடு இணைந்து, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேசன், அக்னி இறங்கும் பக்தர்கள் சேவா சங்கம், செங்குந்தர் அபிவிருத்தி சங்க தெரு மெம்பர்கள், செங்குந்தர் எழுச்சி பேரவை, திருமுருகன் சிறு விசைத்தறி கூலி தொழிலாளர்கள் சங்கம், சமூக வளர்ச்சி மன்றம், செங்குந்தர் இளைஞரணி சாதிராம் அறக்கட்டளை ஆகிய அமைப்புகளின் ஒத்துழைப்போடு, இராமச்சந்திரா நர்சரி பள்ளி, சிவா நர்சரி பள்ளி, கிருபானந்த வாரியார் துவக்கப் பள்ளி, செங்குந்தர் சமுதாய நலக்கூடம், திருப்பூர் குமரன் நகர் ஆகிய இடங்களிலும் மேலும், அவரவர் இல்லம் தேடி நேரில் சென்று நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தனி வட்டாட்சியர் NH74LA தென்காசி, ஒருங்கிணைப்பாளர் தன்னார்வலர் குழு மற்றும் நிவாரணப் பணிகள் வட்டாட்சியர் திரு. S.ரவிக்குமார் அவர்கள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார்கள்.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்..

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க மாநிலத்தலைவர் திரு. K.P.K.செல்வராஜ் அவர்களின் பரிந்துரையின் பேரில் கள்ளக்குறிச்சி மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் மற்றும் தேவபாண்டலம், அ.பாண்டலம் செங்குந்த மகாஜன சங்கம் சார்பில், தூய்மை பணியாளர் மற்றும் பொதுமக்களுக்கு அரிசி, மளிகைப் பொருள்கள் வழங்கப்பட்டது. மாவட்டத் தலைவர் S.M.செந்தில், மாநில செயற்குழு உறுப்பினர் K.வேலு, தலைவர் வீ.கண்ணன், செயலாளர் G.பரமசிவம், பொருளாளர் T.சிவக்குமார் மற்றும் தொண்டு மன்ற நிர்வாகிகள் அ.து.சண்முகம், இராசு, தாமோதரன், க.பெரியதம்பி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விருதுநகர் மாவட்டம், அருப்புக் கோட்டை நகரம், வெள்ளைக்கோட்டை செங்குந்தர் ஊர் உறவின்முறை டிரஸ்ட்க்கு கட்டுப் பட்ட மகமைதாரர் களின் 300 குடும்பங் களுக்கு தலா 5 கிலோ அரிசி மற்றும் 200 ரூபாய் ரொக்கமாகவும் (ரூ.1,35,000) வழங்கப்பட்டது. உறவின்முறைக்கு கட்டுப்பட்ட தொடக்கப் பள்ளியில் பயிலும் 250 மாணவ மாணவிகளின் பெற்றோர்களுக்கு 300 ரூபாய் பெறுமான பலசரக்கு பை (ரூ.75,000) ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் நிர்வாகத்தினர் சார்பாக வழங்கப்பட்டது. மேலும் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் 180 மாணவ மாணவியர்களின் குடும்பங்களுக்கு ரூபாய் 300 பெருமானமுள்ள பலசரக்கு பை (ரூ.54,000) நிர்வாகத்தினர் ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் பழைய மாணவர்கள் சார்பாக வழங்கப்பட்டது. .

17.05.2020 அன்று ஈரோடு மாவட்டம், அந்தியூர் எண்ணமங்கலம் கிளையில் உள்ள 35 ஏழை எளிய செங்குந்த குடும்பங்களுக்கு அரிசி J.S இளைஞர் படை மூலம் கொடுக்கப் பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், செங்குந்த மகாஜன சங்க ஈரோடு மேற்கு கிளை செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்புபாளையம் V.கிருஷ்ணசாமி, தாண்டாம்பாளையம் T.K.வஜ்ரவேல், வழக்கறிஞர் ஜெகதீஸ்குமார் அவர்கள், பெரியவலசு பாக்ஸர் கிருபா. Na.S.பிரதீப் செங்குந்தர், R.V.T .ரவி மற்றும் எண்ணமங்கலம் கிளை சார்ந்த பச்சமுத்து, அர்த்தனாரி, தலைவர் சண்முகம், செயலாளர் செல்வராஜ், பொருளாளர் சேகர், மாவட்ட பிரதிநிதி மகேந்திரன், கௌரவத் தலைவர் ராசு, ரவி, சரவணன் கிளைச் சங்க நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

07-05-2020 ஈரோடு மாவட்டம் அந்தியூர் கிளையில் உள்ள 45 ஏழை செங்குந்தர்களுக்கு அரிசி மற்றும் காய்கறிகள், J.S இளைஞர் படையும் மற்றும் அந்தியூர் கிளையும் இணைந்து வழங்கினர். இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி, Veecop tex சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், வீரப்பன்சத்திரம் கிளை துணைத் தலைவர் பாலாஜி, தமிழ் புலவர் பெருமான் சேலம் பா. பாலன், Na.S. பிரதீப், R. வைரம் செங்குந்தர், அந்தியூர் கிளை நிர்வாகிகள் தலைவர் M. பாலகுரு, செயலாளர் G. சக்திவேல், பொருளாளர் G.சீனிவாசன், துணைத்தலைவர் ஆ.தா. ஜீவரத்தினம், துணை செயலாளர் J.N. பழனிவேல், செயற்குழு உறுப்பினர் A. செந்தில்குமார் மற்றும் ஊர் செங்குந்தர் சொந்தங்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்..

24.05.2020 ஞாயிற்றுக்கிழமை ஈரோடு மாவட்டம், கொடுமுடி கிளையில் 40 ஏழை செங்குந்தர் குடும்பங்களுக்கு அரிசி மற்றும் காய்கறிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், மேற்கு கிளைச் செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்புபாளையத்தை சேர்ந்த V.கிருஷ்ணசாமி, தாண்டாம்பாளையம் T.K.வஜ்ரவேல், பாக்ஸர் கிருபா, தனபால்(Tnstc), அ.குப்புராஜ், தலைவர், S.E.S., ஈரோடு மற்றும் கொடுமுடி கிளை நிர்வாகிகள் T.பாஸ்கரன் காவல்துறை (ஓய்வு), வெண்ணிலா பாலு முன்னால் வார்டு உறுப்பினர், S.கோபு, LIC சோமு, T.சுப்ரமணியம் பரிமளா, மெடிக்கல் கோபால், கிரி, ஜெயபிரகாஷ்(TNSTC), நாச்சிமுத்து ஆசிரியர் மற்றும் கொடுமுடி பகுதியை சேர்ந்த செங்குந்தர் குல ஊர் பெரியவர்களும் சான்றோர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

* நல்லவர்களின் உபதேசத்தை காது கொடுத்து கேட்க வேண்டும். சாதுக்களின் நல்ல வார்த்தைகள் காது வழியாக உண்ணும் உணவு போன்றது.
* இறைவன் நமக்கு செய்யும் அத்தனை செயலும் அருள் தான். சில நேரத்தில் சோதனை குறிக்கிடும் போது, துன்பம் போல தோன்றலாம். ஆனால், அதுவும் கூட அறியாமை தான்.
* பலர் சேர்ந்து முறையுடும் போது அரசு அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுப்பது போல, பலர் இணைந்து நடத்தும் கூட்டு பிரார்த்தனைக்கும் உடனடியாக பலன் கிடைக்கும்.

வாரியார் அருள் மொழிகள்

தெய்வத்திரு. **கே.எம்.கோவிந்தராசனார்** அவர்கள்

நிறுவனர் : கே.எம்.ஜி. கல்வி நிறுவனங்கள்
குடியேற்றம் நகராட்சி முன்னாள் சேர்மன் (1964-1969)
1993-ஆம் ஆண்டு குடியேற்றம் நகரில் 2 நாட்கள் நடைபெற்ற
அகில உலக செங்குந்தர் மகாஜன சங்கத்தின்
மாபெரும் மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவர்

திருவள்ளுவர் தொடக்கப்பள்ளி
திருவள்ளுவர் மேனிலைப் பள்ளி
கே.எம்.ஜி. கல்வியியல் கல்லூரி
கே.எம்.ஜி. கலை & அறிவியல் கல்லூரி

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் நிரந்தர இணைவு பெற்றது.
பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது.
தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் (NAAC) B+ தர மதிப்பீடு பெற்றது.

இளநிலை (UG)

B.A	- ஆங்கிலம்
B.B.A	- வணிக ஆள்முறையியல்
B.Com(General)	- வணிகவியல்
B.Com(CA)	- கணினி பயன்பாட்டு வணிகவியல்
B.C.A	- கணினி பயன்பாட்டியல்
B.Sc	- கணினி அறிவியல்
B.Sc	- உயிர்வேதியியல்
B.Sc	- நுண்ணுயிரியல்
B.Sc	- வேதியியல்
B.Sc	- கணிதம்

முதுநிலை (PG)

M.A	- ஆங்கிலம்
M.Com(General)	- வணிகவியல்
M.Com(CA)	- கணினி பயன்பாட்டு வணிகவியல்
M.Sc	- உயிர்வேதியியல்
M.Sc	- தகவல் தொழில்நுட்பவியல்
M.Sc	- கணிதம்
M.Sc	- வேதியியல்
M.Sc	- பயன்பாட்டு நுண்ணுயிரியல்
M.B.A	-

ஆய்வியல் நிறைஞர் (M.Phil)

M.Phil	- வணிகவியல்
M.Phil	- உயிர்வேதியியல்
M.Phil	- கணினி அறிவியல்
M.Phil	- கணிதம்
M.Phil	- வேதியியல்

முனைவர் பட்டப்படிப்பு (Ph.D)

Ph.D	- வணிகவியல்
Ph.D	- உயிர்வேதியியல்
Ph.D	- நுண்ணுயிரியல்
Ph.D	- வேதியியல்

கே.எம்.ஜி கல்வி நிறுவனங்களின் நிர்வாகக் குழு

K.M.G.பாலசுப்பிரமணியன்

K.M.G.சுந்தரவதனம் B.A.,B.G.L.,

K.M.G.இராஜேந்திரன் B.Sc.,M.L.,
வழக்கறிஞர்

K.M.G.முத்துக்குமார் B.Com.,

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்..

10.05.2020 அன்று ஈரோடு மாவட்டம், சோலார் புதூர் கிளை உள்ள 30 ஏழை எளிய செங்குந்தர்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள். J.S இளைஞர் படை மற்றும் சோலார் புதூர் கிளை இணைந்து கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M. ஆசைத்தம்பி, veecop tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N. நந்தகோபால், செயற்குழு உறுப்பினர்கள் பெருந்துறை தோப்புபாளையத்தை சேர்ந்த V.கிருஷ்ணசாமி, தாண்டாம்பாளையம் T.K.வஜ்ரவேல், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ்குமார், ஈரோடு மேற்கு கிளை செயலாளர் கவிமாமணி சேலம் பாலன், பெரியவலசு பாக்ஸர் கிருபா, Na.S.பிரதீப் செங்குந்தர், கிளை தலைவர் செல்வம், செயலாளர் அங்கமுத்து, பொருளாளர் சீனிவாசன், துணைத்தலைவர் பொன்னுசாமி, துணை செயலாளர் கோவிந்தராஜ், செயற்குழு உறுப்பினர் தியாகராஜன், பச்சையப்பன், வீரப்பன், குருசாமி, செந்தில், வேலுசாமி, கிளை சங்க நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

மருத்துவத் தகவல்கள்

அலுவலகத்தில் எங்குப் போக வேண்டும் என்றாலும் லிப்ட் பயன்படுத்துவது மோசமான பழக்கம். அலுவலகத்தில் பெரும்பாலான நேரங்களில் உட்கார்ந்து கொண்டுதான் பணி செய்கிறோம். அலுவலகத்துக்குள் எங்காவது போக வேண்டும் என்றால் மட்டுமே நடக்கிறோம். அந்த நேரத்திலும் லிப்ட் உபயோகிப்பது உங்கள் தேவையில்லாத கொழுப்புச் சத்தைக் குறைக்க உதவாது. லிப்ட் ஏறாமல் நடந்து படியேறுங்கள். உடல் மெலியும், உள்ளமும் சுறுசுறுப்பாக இருக்கும்.

இராணிப்பேட்டை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் சோளிங்கர் கிளை சார்பாக வசதியற்ற சமுதாய சொந்தங்கள் 140 பேருக்கு அரிசி, பருப்பு, எண்ணெய் போன்ற மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது, நன்கொடையாளர்கள் திரு. வ.கு.சம்பத், திரு. ச. சுந்தரமூர்த்தி, செயற்குழு உருப்பினர், திரு. ந.த. பாஸ்கரன், மாவட்ட பொருளாளர், திரு. ட. அருணாச்சலம், திரு. ச.நித்தியானந்தம், திரு.சி. முரளி, ஆகியோரின் நிதி உதவியுடன், திரு.பா.விஸ்வநாதன், கிராமணி, திரு.வரதன் கிராமணி மற்றும் அனைத்து பெருந்தனக்காரர்கள், திரு. கா.கதிர்வேல் சோளிங்கர் செ.ம. சங்கத்தலைவர், திரு. கார்த்தி, செயலர், மற்ற சமுதாய சொந்தங்கள் களப்பணியுடன் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

புதுச்சேரி மாநிலம், புதுவைச் செங்குந்தர் கல்வி நலச் சங்கம் சார்பில் சங்க அலுவலக வளாகத்தில் கொரோனா தொற்று ஊரடங்கு காலத்தில் பாதிக்கப்பட்ட மிகவும் கஷ்ட நிலையிலுள்ள நலிவடைந்த பெத்து செட்டிப் பேட்டை, சாந்தி நகர், ஆனந்தா நகர், சாந்தி நகர் வடக்கு ஆகிய பகுதிகளைச் சார்ந்த 250 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி நிவாரணமாக தலைவர் V.P.இராமலிங்கம் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது. செயலாளர் ப.இராஜாக்கண்ணு, பொருளாளர் க.தனகோடி, ப.இரத்தினவேல், த.மாணக்கம், RT கண்ணன், K.தண்டபாணி, சுந்தரேசன் மற்றும் செங்குந்தர் சங்க நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

இராஜபாளையம் பூபால்பட்டி செங்குந்தர் பொதுப்பண்டு நிர்வாகத்தின் கீழ் இயங்கும் செங்குந்தர் சுப்பிரமணிய சுவாமி துவக்கப்பள்ளி ஆசிரியப் பெருமக்கள் தமது பள்ளியில் பயிலும் மாணவர்கள் குடும்பத்திற்கு கொரோனா நிவாரணமாக ஒவ்வொருவருக்கும் தங்களது சொந்த பணத்தில் தலா 5 கிலோ, அரிசி 1 கிலோ, பருப்பு, உப்பு, காய்கறிகள்,

மற்றும் மசாலா பொடிகள் உட்பட பொருட்கள் நிவாரணமாக வழங்கினார்கள். இந்த சிறப்புமிக்க நிகழ்ச்சியில் பொதுப்பண்டின் தலைவரும் பள்ளியின் செயலாளருமான திரு எஸ்.சுந்தரம், முன்னாள் தலைவர் திரு பொ.சக்திமோகன், துணைத்தலைவர் பொ.உத்தண்ட ராமர், செயலாளர் சி.திருப்பதி, பொருளாளர் ஆ.இராமகிருஷ்ணன் நிர்வாக கமிட்டி உறுப்பினர்கள் சே.செந்தில்குமார், உ.உத்தண்டமணி, எஸ்.முத்துராம கிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டு ஆசிரியப் பெருமக்களை வாழ்த்தினர். முன்னதாக தலைமை ஆசிரியர் மு.மகேஸ்வரி வரவேற்புரையாற்றினார். ஆசிரியர்கள் அய்யம்பெருமாள், க.சொர்ணவள்ளி, ஆ.விஜயலட்சுமி, ச.பிரேமா ஆகியோர் சிறப்பான ஏற்பாடு செய்திருந்தனர். நிவாரணப் பொருட்களை பெற்றுக்கொண்டு பெற்றோர்கள் நன்றி தெரிவித்தனர்.

நெல்லை பழைய பேட்டை 50வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினரும் செங்குந்தர் மாவட்ட மகளிரணி தலைவியுமான திருமதி. J.ராஜேஸ்வரி மற்றும் திரு. ரத்தினவேல் ADSP (Rtd) அவர்கள் சார்பாக பொது மக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கப் பட்டது. செங்குந்தர் மாநகர மகளிரணி துணை தலைவர் திருமதி. அருணா தேவி சார்பாக முகக்கவசம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாநகர மகளிரணி செயலாளர் திருமதி. அமிர்தம் மற்றும் துனை தலைவர் திருமதி. ராசம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

SENGUNTHAR ENGINEERING COLLEGE
(AUTONOMOUS)

Estd. 2001

BSCIC · IAS-ANZ · ISO 9001 REGISTERED

Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai

Accredited by NAAC with "A" Grade & Recognized Under Section 2(f) and 12(B) of UGC Act, 1956

TIRUCHENGODE (Po.), NAMAKKAL - 637 205,
TAMIL NADU, INDIA.

B.E.
CIVIL | CSE*
ECE* | EEE*
MECH*
*Permanently Affiliated

MBA

Ph.D
CSE | ECE

TNEA 2617

M.E.
Structural Engg.
CSE |
VLSI DESIGN

SENGUNTHAR COLLEGE OF ENGINEERING

Estd. 2007

GABCB

(Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai)
An ISO 2001 : 2015 Certified Institution
TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)

B.E.
MEDICAL ELECTRONICS ENGG.*
*Permanently Affiliated
ROBOTICS & AUTOMATION

B.Tech.
INFORMATION TECHNOLOGY

TNEA 2629

M.E.
COMM & NETWORKING
MEDICAL ELECTRONICS

SENGHUNDHAR COLLEGE OF PHARMACY

SENGHUNDHAR COLLEGE OF PHARMACY
Estd. 2017

GABCB

Approved by AICTE, New Delhi & Pharmacy Council of India (PCI)
Affiliated to The Tamil Nadu Dr.M.G.R. Medical University, Chennai
TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)

D.PHARM. | **B.PHARM.**
Lateral Entry

For Admission Contact

Phone : 04288 - 254716, 255716, 253716, 255727

Cell : 93674 74849, 93600 53352

Log on : www.scteng.co.in | www.scew.org | www.scpt.co.in

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

04.05.2020 ஈரோடு மாவட்டம், நம்பியூர் உள்ள ஏழை எளிய செங்குந்தர்களுக்கு அரிசி மற்றும்? மளிகை பொருட்கள், காய்கறிகள், J.S இளைஞர் படை மற்றும் செங்குந்த மகாஜன சங்கம் நம்பியூர் கிளையுடன் இணைந்து கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி, Veecop Tex கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், மாநில வழக்கறிஞர் அணி சார்ந்த செந்தில்நாதன் அவர்கள் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர் பெருந்துறை தோப்புபாளையம் கிட்டு என்கிற V.கிருஷ்ணசாமி, வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ் குமார், வீரப்பன்சத்திரம் கிளை துணை தலைவர் பாலாஜி, தமிழ் புலவர் பெருமான், சேலம் ப.பாலன், Na.S.பிரதீப் செங்குந்தர், செ.மா.ச நம்பியூர் கிளை நிர்வாகிகள் கேஸ் ஏஜென்சி டாக்டர் டி.என்.பழனிவேல், செ.ம. சங்கம் நம்பியூர் கிளை தலைவர் இலக்குமணன், செயலாளர் சுப்ரமணியன், பொருளாளர் சாமிநாதன், துணை தலைவர் சண்முகசுந்தரம், துணை செயலாளர் தனஞ்செயன், மாவட்ட பிரதிநிதி செங்கோடன், ராஜேந்திரன், ரத்தினவேல், சக்திவேல், பாக்கியராஜ் மற்றும் கிளை சங்க நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

கைகளை அடிக்கடி சோப்பால் கழுவவும்.

வெளியில் செல்லும்போது முகக்கவசம் அணியவும்.

தண்ணீரை அதிகம் பருகுவது அவசியம்.

சங்கரன்கோவில் நகராட்சிக்கு உட்பட்ட திருவுடையாபுரம் தெரு, தேவிபட்டணம் தெரு, பாரதியார் 8ம் வீதி லெட்சுமியாபுரம் 7ம் தெரு பகுதிகளில் வசிக்கும் செங்குந்தர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதை அடுத்து திட்டக்குடி தொழிலதிபரும் கடலூர் மாவட்ட செங்குந்த மகாசன சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் P.T.ராஜன் அவர்களின் நன்கொடை மூலம் 100 செங்குந்தர் குடும்பங்களுக்கு தேவையான அரிசியை சங்கரன்கோவில் அபிவிருத்தி சங்க செயலாளர் M.A.சங்கர மகாலிங்கம், பொருளர் P.G.P.ராமநாதன் துணைசெயலர் சிவசுப்பிரமணியம், S.நடராஜன் மற்றும் M.சங்கரன், முருகன், சங்கர மகாலிங்கம், வெள்ளி முருகன், லெட்சுமி நாராயணன், A. ராமசாமி, P.சண்முகவேல், அ.முத்து மற்றும் செங்குந்தர் சங்க நிர்வாகிகள் முன்னிலையில் 14.5.2020 காலை வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை S. சங்கரன் அவர்களும் நன்கொடை பெற உதவியாக இருந்த தென்மண்டல செயலாளர் தேவகோட்டை பாலசுப்ரமணியம் அவர்களுக்கும் சங்கரன்கோவில் செங்குந்தர் சொந்தங்களின் சார்பில் நன்றிகளை தெரிவிக்கப்பட்டது.

உடலுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கிறதா இல்லையா என்பதை நமது கண்களைப் பார்த்தே கண்டுபிடித்து விடலாம். கண்ணைச் சுற்றிலும் தடிப்பாகக் காணப்பட்டால் நீர்ச்சத்துக் குறைவு என்று அர்த்தம். ஏர்கண்டிஷன் அறைகளிலேயே இருப்பவர்களுக்கு இந்தத் தடிப்பு இருக்கும். இதற்குத் தண்ணீர் நிறைய குடிப்பது மட்டும்தான் மருந்து.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

07-05-2020 அன்று ஈரோடு மாவட்டம் பவானி, குருவரெட்டியூர் கிளையில் உள்ள 30 ஏழை செங்குந்தர்களுக்கு அரிசி மற்றும் காய்கறிகள், J.S இளைஞர் படையும் மற்றும் குருவரெட்டியூர் கிளையும் இணைந்து வழங்கினார். இந்நிகழ்வில் செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் திரு சோழா M. ஆசைத்தம்பி, Veecop Tex சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், வீரப்பன்சத்திரம் கிளை துணைத் தலைவர் பாலாஜி, தமிழ் புலவர் பெருமான் சேலம் பா. பாலன், Na.S.பிரதீப், R. வைரம் செங்குந்தர் மற்றும் குருவரெட்டியூர் கிளை நிர்வாகிகள் தலைவர் K. தனராசு, செயலாளர் A. புவனேஸ்வரன், பொருளாளர் P. முனுசாமி, துணைத் தலைவர் A.பாலவெங்கடேஷ், துணை செயலாளர் G. மாணிக்கம், செயற்குழு உறுப்பினர் E.பிரகாஷ் மற்றும் ஊர் செங்குந்தர் சொந்தங்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

வாரியார் அமுத மொழிகள்

* மகிழ்ச்சி என்பது அவரவர் மனநிலையைப் பொறுத்தது. பணக்காரரோ, ஏழையோ யாராக இருந்தாலும் போதும் என்ற மனதை இறைவனிடம் வேண்டிப் பெற வேண்டும்.
* முதுமைக்கு தேவையானதை இளமையிலும், மறுபிறவிக்கு தேவையானதை இப்பிறவியிலும் தேட வேண்டும்.
* கண்ணிக்குத் தெரிந்த உயிர்களுக்கு தொண்டு செய்வதோடு, கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்கும் தொண்டு செய்ய வேண்டும்.
* கல்வி, தானம், உடல்நலம் மூன்றிலும் தேர்ச்சி பெற இடைவிடாத முயற்சியும், பயிற்சியும் அவசியம்.



செல்வ வளங்களைப் பெற்றுத்தரும் 5 மரங்கள்

இதில் ஏதாவது ஒன்று உங்கள் வீட்டில் இருந்தால் கூட நீங்கள் அதிர்ஷ்டசாலிதான்.

வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்பது நல்லது. எந்த மரமாக இருந்தாலும் அது நமக்கு சுத்தமான காற்றையும், குளிர்ச்சியையும், நிழலையும், ஆரோக்கியத்தையும் தரும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. அதிலும் குறிப்பாக சில மரங்கள், நமக்கு வாஸ்து பிரச்சனைகளை தீர்க்கக் கூடிய மரமாகவும், செல்வ வளத்தை தரக்கூடிய மரமாகவும், அதிர்ஷ்டத்தை தரக்கூடிய மரமாகவும் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. அந்த மரங்கள் என்னென்ன? அந்த மரங்களை நம் வீட்டில் எப்படி வைக்க வேண்டும்? என்பதைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

1. மாதுளை மரம்

இயற்கையாகவே சூரியனிடம் இருந்து வரக்கூடிய புற ஊதா கதிர்களின் தாக்கத்தை தன்வசம் ஈர்த்துக் கொள்ளும் தன்மை இந்த மரத்திற்கு உண்டு. வீடுகளில் இந்த மரத்தினை தென் கிழக்கு மூலையில் வைப்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது. இதன் மூலம் வீட்டின் செல்வ வளம் அதிகரிக்கும் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் செயற்கை உரம் சேர்க்காத மாதுளங்கனி நம் குழந்தைகளுக்கு கிடைக்கும் அல்லவா?

2. பெரிய நெல்லி மரம்

அறுசுவைகளும் சேர்ந்திருக்கும் இந்த நெல்லிக்காய் மரத்தினை, நம் வீட்டில் வளர்த்து வருவதன் மூலம் நேர்மறை ஆற்றல் அதிகரிக்கும். குறிப்பாக இந்தப் பெரிய நெல்லிக்காய்களை பைரவருக்கு வைத்து, பூஜை செய்து மற்றவர் களுக்கு தானமாக கொடுப்பது மிகவும் சிறப்பு.

புதன்கிழமை அன்று உங்கள் வீட்டில் இருக்கும் நெல்லிக்கனி களை, எடுத்து அரைத்து தலையில் தேய்த்துக் குளித்து விட்டு, அதன் பின்பு தங்கம் வாங்கச் செல்வது மிகவும் சிறப்பானது. இப்படி தங்கம் வாங்கினால் மேலும் மேலும் சேரும் என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்று.

இதுமட்டுமல்லாமல் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் இந்த நெல்லிக்கனி, உங்கள் வீட்டில் இருந்தால் அதைப் பறித்து, ஒரு நாளைக்கு கட்டாயம் ஒன்றாவது

சாப்பிடுவீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தை நன்றாக மேம்படுத்தும் என்பதில் சந்தேகமே இல்லை. நெல்லிக்காய் சாப்பிடும் பழக்கத்தை உங்கள் வீட்டில் இருக்கும் குழந்தைகளுக்கும் கற்றுத் தாருங்கள்.

3. அரசமரம்

மூன்றாவதாக வீட்டில் இருக்க வேண்டிய மரங்களில் அரசமரமும் ஒன்று. எல்லோரது வீட்டிலும் அரசமரம் வளர்க்க முடியாது தான். இருந்தாலும், அரச மரத்தை வீட்டில் வைப்பதன் மூலம் குருவின் அனுக்கிரகம் நமக்கு கிடைக்கும். அதாவது ஒருவருடைய ஜாதகத்தில் குருவின் ஆதிக்கம் இல்லை என்றால் கூட, இந்த மரத்தை வீட்டில் வைத்து வளர்ப்பதன் மூலம் குருவினால் நமக்கு பல நன்மைகள் கிடைக்கும். நம்முடைய வாழ்க்கையில் பலவிதமான நன்மைகள் நடக்க காரணமாக இருப்பவர் இந்த குரு. குருவின் அனுக்கிரகத்தை பெற்றுத்தரும் இந்த மரத்தை நம் வீட்டில் கட்டாயம் வளர்ப்பது மிகவும் நல்லது.

இது மட்டும் அல்லாமல் அறிவியல் ரீதியாக காலை நேரத்தில் நாம் அரச மர காற்றை சுவாசிப்பதன் மூலம், அதிகப்படியான ஆக்சிஜன் நம் உடலுக்கு கிடைத்து ஆரோக்கியமாக இருப்போம் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது தெரிகிறதா அரச

மரத்தடி விநாயகருக்கு எதற்காக இவ்வளவு சிறப்பு என்று! அரச மரத்தடி விநாயகரை தண்ணீர் ஊற்றி வளம் வர வேண்டும் என்று சொன்னதும் இதற்காகத்தான். அரச மரத்தை வீட்டில் வைத்து வளர்க்க முடியாதவர்கள், இடவசதி இல்லாதவர்கள் ஒரு அரசமரத்தின் குச்சியை மட்டுமாவது எடுத்து வந்து வீட்டில் வைப்பது செல்வ வளத்தை அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

4. வேப்பமரம்

அந்த காலங்களில் எல்லாம் வீட்டிற்கு முன் புறத்திலோ அல்லது பின்புறத்திலோ கட்டாயம் இந்த வேப்ப மரம் இல்லாமல் இருக்கவே இருக்காது. காரணம் இது அதிகப் படியான குளிர்ச்சியை தரக்கூடியது. வேப்ப மர இலைகளுக்கு இயற்கை யாகவே நோய் எதிர்ப்பு சக்தி அதிகம். அதை சாப்பிட்டால் தான் நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும் என்பது அர்த்தமில்லை. அந்த காற்றை சுவாசித்தாலும் கூட நம் உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் என்பது குறிப் பிடத்தக்கது.

இதையெல்லாம் உணர்ந்த நம் முன்னோர்கள்

வேப்ப மரத்தடியில் கட்டில் போட்டு உறங்கிய காலமும் உண்டு.

5. பொன்னரளி

பொன்னரளி மரத்திற்கு குபேரன் மரம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. பெரும்பாலும் இதை எல்லோர் வீட்டிலும் வைத்து வளர்க்கின்றனர். சிலர் இதை வைத்து வளர்க்க கூடாது என்றும் சொல்லுவார்கள். உங்களுக்கு ராசியாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் உங்கள் வீட்டில் இந்த மரத்தை வளர்த்து கொள்ளலாம். தவறில்லை.

இதில் மஞ்சள் நிறத்தில் கொத்துக் கொத்தாக பூக்கும் பூக்களை பார்க்கும் போதே நமக்கு மனநிறைவு ஏற்பட்டு விடும். நம்முடைய வீட்டில் இருக்கும் வாஸ்து பிரச்சனையையும் சரிசெய்யும் மரம் என்றும் சில சாஸ்திர குறிப்புகளில் சொல்லப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் இந்த மரம் நம்முடைய வீட்டிற்கு கண் திருஷ்டி படாமல், செல்வ வளத்தை அதிகரிக்கவும் உறுதுணையாக இருக்கும் என்றும் சில வாஸ்து குறிப்புகளில் சொல்லப்பட்டுள்ளது.

இரங்கல் கவிதை

சகோதரி விமலாவிற்கு சமர்ப்பணம்

தாயினும் சாலப்பரிந்து
தன்மையாய் அனுசரித்து
தின்மை யாய்
உறுதி சார்ந்து
தேவைகளை
தீர்த்து வைத்து
பொதுப்பணி பெரிதுவக்க
தன் குலம் தழைத்தோங்க
தாங்கு கோலதனைத் தந்து
வேறென்று பற்றி
வெற்றிக்குத் துணையாய் நின்ற
குருபரன் இணைந்த
பாதி விமல மாய்
மறைந்தார் என்பது
இடிபோல் விழுந்த
செய்தி எமக்கு..

இறைவனின் சித்தம்!
நற்பதம் நிச்சயம்!

ஆறுதலுக்கு சொல்லவில்லை
இறைசக்தி எம் குல சக்தி
துணை நிற்கும் குருபரனே!
கலங்கவேண்டாம்..
கவலைவேண்டாம்..

மரு. நா. முத்துக்குமரன்
சிசு மருத்துவமனை, சேலம்

ஆழ்ந்த இரங்கலுக்கு

நன்றி மலர்

அன்புசால் செங்குந்தர் சமுதாய உறவுகளுக்கு எனது நெகிழ்வான வணக்கங்கள். எனது அன்புக்குரிய தாயார் **P.முத்தம்மாள் பழனி** அவர்கள் வயது முதிர்வு காரணமாக 22–05–2020 அன்று இயற்கை வெளியில் உலவச் சென்றார். அடுத்த இரு தினங்களிலேயே எனது நெஞ்சம் நிறைந்த எனது உயிரின் மறுஉருவம் எங்கள் இல்லத்தின் குலவிளக்கு எனது அன்பு மனைவி திருமதி. **K.விமலா** அவர்கள் 25–05–2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள் என்ற துயர செய்தி எங்கள் குடும்பத்தினரை மட்டும் இல்லாமல், அனைத்து நெஞ்சங்களிலும் அதிர்ச்சியையும், அனுதாபத்தையும் அலை போல் மாற்றியது.

இழப்பிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கும் எனது குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறி, இரங்கல் செய்தியை நேரிலும், தொலைபேசியிலும், சமூக வலைத்தளங்கள் மூலமும் தெரிவித்த அனைத்து மாநில சங்க நிர்வாகிகளுக்கும், மாவட்ட, கிளைச் சங்க நிர்வாகிகளுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தனித்தனியாக நன்றி தெரிவிக்க இயலாத நிலையில் இக்கடிதத்தின் மூலம் தங்கள் அனைவருக்கும் எனது நன்றி மலர்களை என் சார்பாகவும், குடும்பத்தினர் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களை விட்டுப் பிரிந்து சென்ற, எனது தாயார் மற்றும் மனைவியின் ஈமக்கிரியை விழுப்புரம் மாவட்டம், இரட்டணை கிராமத்தில் வரும் 06–06–2020 சனிக்கிழமை இரவு நடப்பும் மறுநாள் 07–06–2020 ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணியளவில் கரும காரியமும் நடைபெற உள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆன்மாக்கள் சாந்தி அடைய தங்களின் மேலான பிரார்த்தனையை வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,

R.P. குமரகுருபரன்,

பொதுச் செயலாளர்,

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

வருந்துகிறோம்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநில முன்னாள் தலைவர்
நெசவாளர் நேசன், தெய்வத்திரு. **J. சுத்தானந்தன்** அவர்களின் தம்பி
திரு. **J.காசிவிஸ்வநாதன்** அவர்கள்
20.05.2020 அன்று காலமானார்.

கல்லிடைக்குறிச்சி செங்குந்தர் சமுதாய வள்ளல்
Er.C.ஆறுமுகம் செங்குந்தர் அவர்கள்
15.05.2020 அன்று காலமானார்.



சத்தியமங்கலம் கிளை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
முன்னாள் தலைவர் திரு. **A.R.கிருஷ்ணசாமி** அவர்கள்
18.05.2020 அன்று காலமானார்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர்
திரு. **R.P. குமரகுருபரன் செங்குந்தர்** அவர்களின்
தாயார் திருமதி. **P.முத்தம்மாள்** அவர்கள்
22.05.2020 அன்று காலமானார்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர்
திரு. **R.P. குமரகுருபரன் செங்குந்தர்** அவர்களின்
துணைவியார் திருமதி. **K.விமலா** அவர்கள்
25.05.2020 அன்று காலமானார்.

திருப்பூர் மாவட்டம் இடுவாய் செ.ம. சங்கத்தின் செயலாளர்
திரு. **சு.பிரகாஷ்** அவர்களின் தந்தையார்
திரு. **K.சுப்பிரமணியம் முதலியார்** அவர்கள்
08.05.2020 அன்று காலமானார்.

இவர்களது மறைவுக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்
சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Printed by T.Parvathi, Published by K.P.K.Selvaraj
on behalf of South Indian Senguntha Mahajana Sangam
Printed at: Arul Vinayaga Fine Arts, 5/158, Samipuram Colony, Sivakasi - 626 189.
Published from 58, Armenian Street, Chennai - 600 001. Editor: **K.P.K.Selvaraj**

தென்னிந்திய
செங்குந்த மகாஜன சங்கம்
தலைமைச் சங்க நிர்வாகிகள்
(2020 – 2023)

தலைவர்

திரு. **K.P.K.செல்வராஜ்,**
20, பெத்தி செட்டிபுரம் கிழக்கு
2வது வீதி, திருப்பூர் – 641601.
செல்: **98430 43590**

பொதுச்செயலாளர்

திரு. **R.P.குமரகுருபரன்**
61, சந்தானம் தெரு,
V.G.P. புஷ்பா நகர், மேடவாக்கம்,
சென்னை – 600100.
செல்: **91766 90404**

பொருளாளர்

திரு. **R.காந்தி**
10, பழைய அக்ரஹாரம் தெரு,
சின்ன சொக்கிகுளம்,
மதுரை – 625 002.
செல்: **99932 75599**

துணைப் பொதுச்செயலாளர்

திரு. **K.சுந்தரமூர்த்தி**
2/53, மெயின் ரோடு,
இளவங்கார்குடி, பௌத்திரமாணிக்கம்,
திருவாரூர் – 610 001.
செல்: **98406 11567**

துணைத் தலைவர்கள்

திரு. **C.N.தட்சணாமூர்த்தி**
144/44F, நரிமுருகப்ப முதலி தெரு,
பிச்சனூர், குடியாத்தம் – 632 602.
கைபேசி: **94439 64556**

திரு. **மெட்டல் M.மணி**
76, VCV லே அவுட், R.S.புரம்,
கோயம்புத்தூர் – 641 002.
செல்: **94437 16040**

திரு. **A.பாலதண்டபாணி**
1/311-1, செங்குந்தர் நகர்,
செங்குந்தர் பொறியியல் கல்லூரி,
மண்டகப்பாளையம் – 637 205.
திருச்செங்கோடு.
கைபேசி: **98427 53349**

திரு. **C.கார்த்திகேயன்**
219/18, Kavyam
Hari Shankar Road,
Tharekkad, Palakkad - 678 001
Kerala State
செல்: **070341 40659**

திரு. **P.G.செல்வராஜ்**
5-4-144, S.V. Koil Street
Ekambarakuppam-517 592
Nagari Mandal,
Chittoor Dist (A.P)
செல்: **94402 70600**

செயலாளர்கள்

திரு. **சீனி. கார்த்திகேயன்**
42/73, இராஜராஜன் தெரு,
திருவண்ணாமலை – 606 601.
கைபேசி: **97512 99999**

திரு. **க.பாலசுப்ரமணியம்**
12/33A, ரெகுநாதபுரம் கிழக்கு,
தேவக்கோட்டை – 630 302.
சிவகங்கை மாவட்டம்.
செல்: **97887 86878**

திரு. **M.உதயசங்கர்**
551/3, சங்கமம் வீதி,
காமராஜ் நகர்,
பவானி – 638 301.
செல்: **98426 92234**

திரு. **R.கந்தசாமி**
No. 231, 1st Main, 3rd Croos,
KSTRC Layout,
J P Nagar 2nd Phase,
Bangalore - 560 078.
செல்: **098450 29016**

திரு. **ப.இராஜாக்கண்ணு**
2, தமிழ் இல்லம், பாரதி வீதி,
சாந்தி நகர், இலாசுப்பேட்டை
புதுச்சேரி – 605 008.
செல்: **94422 33381**

REGISTERED_REGISTRATION NO. **TN/CNI-GPO/222/2018-2020** TO POST WPP No.**TN/PMG(CCR)/WPP109/2018-2020**
Registrar of Newspapers for India No. **TNTAM/2000/03982** Date of Publication 25th day of Every Month.
Due Date of Posting 25th - 30th of Every Month. Posted at Egmore R.M.S. Patrika Channel, Chennai - 600008.